REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

ஆகஸ்ட் 02 - 08, 2004 | 24 பக்கங்கள் | 16.00

August 02 - 08, 2004

# சுடர் ஒளி

THE SUDAR OLI | සුඩර් ඔළි | வார மலர்



# சுடர் ஒளி

ஆகஸ்ட் 02 – 08, 2004

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401—6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com


## இடைக்கால தன்னாட்சியா? சுதந்திர தனியாட்சியா?

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் மீண்டும் இலங்கை வந்து சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் விரிவான பேச்சுக்களை நடத்திவிட்டு நாடு திரும்பி உள்ளார்.

''உடனடியாக சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இப்போது இல்லை. அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் நம்பகத்தன்மை குறைந்துள்ளது. நிலைமை அபாய கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது'' என்று, அவர் நாடு திரும்ப முன்னர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு பதவிக்கு வந்த பின்பு, மூன்றாவது தடவையாக இலங்கை வந்த விடார் ஹெல்கிஸன் முன்னர் ரோய்ட்டர் செய்தி ஸ்தாபனத்துக்கு அளித்த பேட்டியிலும் இலங்கை விவகாரம் குறித்து எச்சரித்திருந்தார்.

''இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் சில சக்திகள் நெருப்போடு விளையாடுகின்றன. இது ஆபத்தானது'' என்று அவர் தனது பேட்டியில் தெரிவித்திருந்தார்.

தற்பொழுது இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு திரும்பிச் செல்லும் போதும், இதே போன்ற எச்சரிக்கையையே அவர் மீண்டும் விடுத்திருப்பது நிலைமை மோசமடைந்து வருவதைக் காட்டுகிறது.

கடந்த 25 ஆம் திகதி கொழும்பு வந்த ஹெல்கிஸன் முதலில் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தினார். பின்பு, கிளிநொச்சி சென்று புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வனைச் சந்தித்தார். பின்பு பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் சிறிய கட்சிகளின் தலைவர்கள், அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்தார். அதன் பின்பே, சமாதான முயற்சிகள் அபாய கட்டத்தை நோக்கி நகருகின்றன என்று எச்சரிக்கை விடுத்தார்.

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இன்னும் பிரதான தடையாக இருப்பது இடைக்கால தன்னாட்சி அதிகார சபைதான். கிழக்கு நிலைமையும் ஒரு காரணம்.

பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும் போது இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்தே முதலில் பேசப்பட வேண்டும் என்பதில் புலிகள் உறுதியாக இருக்கின்றார்கள். ஆனால், அரச தரப்புக்குப் பொறுப்பான ஜனாதிபதி இது குறித்து இன்னும் உறுதியான முடிவு எதனையும் எடுக்க முடியாத நிலையில் தடுமாறுகிறார். அவரது ஆகப் பிந்திய அறிவிப்பில், இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்து புலிகளுடன் பேசுவதற்கு அவர் தயார் என்று மட்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தன்னாட்சி அதிகார சபைகுறித்து பேச்சு நடத்தி அதனைச் செயற்படுத்திக்கொண்டு பின்பு இறுதித் தீர்வு குறித்த பேச்சை ஆரம்பிக்கலாம் என்பதே புலிகளின் நிலைப்பாடு.

ஆனால், ஜனாதிபதி ஜே.வி.பியின் மிரட்டல்களுக்கு அடிபணிந்து போகிறார். அவரது ஆட்சி ஜே.வி.பியில் தங்கியிருப்பதே இதற்குக் காரணம்.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து அரசு புலிகளுடன் பேச்சு நடத்தினால் அடுத்த கணமே அரசில் இருந்து வெளியேறப்போவதாக ஜே.வி.பி எச்சரிக்கை விடுத்து வருகிறது. டொலருக்கு அடிமையான அதிகாரிகளே ஜனாதிபதி செயலகத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும், எம்.பியுமான விமல் வீரவன்ஸ வேறு கிண்டல் அடித்து வருகிறார்.

ஆகவே சிறுபான்மை அரசு ஒன்றை வைத்துக்கொண்டு – அதுவும் இனவாதம் பேசும் ஜே.வி.பியில் தங்கி இருந்து கொண்டு – ஜனாதிபதி நாட்டில் ஒரு போதும் சமாதானத்தை ஏற்படுத்திவிட முடியாது.

அறுதிப் பெரும்பான்மையுடன் இருந்த அரசு ஒன்றை அதன் ஆட்சிக்காலம் முடியும் முன்பே கலைத்துவிட்டு அரசு அமைத்த பலனை ஜனாதிபதி அனுபவிக்கிறார்.

இந்த இறுதி நேரத்திலாவது அரசு ஒன்றை உணர்ந்து கொள்வது அவசியம். இடைக்கால தன்னாட்சி அதிகார சபை வழங்கப்பட்டாலும், இல்லாவிட்டாலும் வெற்றி தமிழ்த்தேசியத்துக்கே. அரசு தானாக வழங்கினால் அது இடைக்கால தன்னாட்சி அதிகார சபை. இல்லையேல் சுதந்திர தனி ஆட்சியாக அது அமையும்.

# படுகொலைப் பரபரப்பு

கொட்டாவவில் ஒதுக்குப்புறம் ஒன்றில் ஏகாந்தமாகக் காணப்பட்ட வீடு ஒன்றில் வைத்து கருணா அணியைச்சேர்ந்த எட்டுப் பேர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர்களில் ஒருவர் சிங்களவர். தம்மிக்க திலிப் குமார். இவர் இராணுவப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவர் என்று செய்திகள் வெளியாகி இருந்தன. ஆனால், இராணுவம் இதனை அறவே மறுத்துவிட்டது.

கருணா அணியினரை நித்திரையில் வைத்தே தீர்த்துக்கட்டியவர்கள் கருணா அணியைச் சேர்ந்த மாற்றுக்குழுவினரே. கருணா அணியினருடன் முரண்பட்டே இந்தக் கொலைகளை இவர்கள் புரிந்தனர் என்று கூறப்படுகிறது.

இந்தக் கொலைகளைப் புரிந்த பின்பு கொழும்பில் இருந்து தப்பிச் சென்று அம்பாறை விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவிடம் இவர்கள் தஞ்சம் அடைந்துள்ளனர்.

ஜூன் 6 ஆம் திகதி மட்டக்களப்பு – பொலன்னறுவை எல்லையில் அமைந்துள்ள ஹிங்குராகொட பௌத்த விகாரையில் வைத்து கருணா அணியினர் 14 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களுடன் பயங்கர ஆயுதங்களும் கைப்பற்றப்பட்ட போதிலும், ஆயுதங்களுடன் இவர்கள் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் கூறியதால் இவர்கள் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கொட்டாவவில் கடந்த வாரம் சுட்டுக்கொல்லப்பட்டவர்களுள் ஹிங்குராகொட பௌத்த விகாரையில் கைதானோரும் அடங்குவர்.

கொட்டாவவில் இறந்தோரில் முக்கியமானவர் கருணாவின் நீண்ட கால உதவியாளரும் அவரின் நிதித் துஷ்பிரயோக நடவடிக்கைகளுக்கு கையாளாகச் செயற்பட்டவர் எனக் கருதப்படுபவருமான குகநேசனும் ஒருவர்.

தமிழ் தேசியத்துக்கு எதிராக முரண்பட்டு, கருணா தமிழ் தேசியத்தில் இருந்து துரத்தப்பட்ட பின்பு இடம்பெற்றுவரும் சம்பவங்கள் கருணாவை மிக மோசமான நிலைக்குள் கொண்டுவந்துவிட்டுள்ளன.

கொட்டாவவில் கருணா அணியினர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் முதலில் தமிழ் நெற் இணையத்தளத்திலேயே வெளியாகி இருந்தது.



கருணா அணியினர் தங்கியிருந்த வீடு பிரசாத் குணசேகர என்பவருக்குச் சொந்தமானது. சம்பவநாட்களில் பிரசாத் குணசேகர இந்தியாவில் இருந்தார். மாதம் 11 ஆயிரம் ருபா வாடகைக்கு கருணா அணியினருக்கு இவர் தனது வீட்டை வாடகைக்குக் கொடுத்திருந்தார். வீட்டு உரிமையாளரை விசாரிப்பதன் மூலம் பல தகவல்களை இன்னும் பெறமுடியும் என்று பொலிஸார் நம்புகின்றனர்.

மோட்டார் வாகன பதிவுத் திணைக்களத்தில் கூட பதிவு செய்யப்படாத புத்தம் புதிய கார் ஒன்றும் கருணா அணியினர் தங்கியிருந்த வீட்டு முற்றத்தில் காணப்பட்டது. போக்குவரத்துக்காக கருணா அணியினருக்கு இந்த கார் வழங்கப்பட்டிருக்கலாம்.

சுட்டுக்கொல்லப்பட்ட சிங்களவரான தம்மிக்க திலிப்குமார் தவிர ஏனையோர் குகநேசன், காஸ்ட்ரோ, கேசவன், ருபன், ஆர்ப்பரன், விக்கி, விமல்காந்த் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் குகநேசன், கருணாவுக்கு மிகவும் நெருக்கமானவர். கருணா புலிகள் இயக்கத்தில் இருந்து வெளியேற்றப்பட நிதி துஷ்பிரயோகமே காரணமாக இருந்தது.

கோடிக்கணக்கான ருபாக்களை குகநேசன் மூலமே கருணா மோசடி செய்தார் என்றும் குகநேசனின் பெயரிலேயே அப்பணம் வைப்பிலிடப்பட்டிருந்தது என்றும் கூறப்படுகின்றது. கருணா வெளியேறிய பின்பும் குகநேசன் கருணாவின் நிதிப் பொறுப்பாளராக கடமையாற்றிவந்தார்.

தனது நெருங்கிய சகாக்களை இழந்த நிலையில் அவர்களால் கைவிடப்பட்ட நிலையில் கருணா தனிமரமாகிவருகிறார்.

இறுதியாக கருணாவிடம் எஞ்சி இருந்தோரே கொட்டாவ தாக்குதலில் உயிரிழந்துள்ளனர்.

கிழக்கில் இன்னும் இருந்துவரும் ஒருசிலரும் சுயமாக, இயங்கும் திறன் அற்ற அடிநிலைச் செயற்பாட்டாளர்களே.

கிழக்கு மாகாணத்தில் இராணுவ முகாம்களில் தங்கி இருந்தும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்தும் இவர்கள் செயற்படுகின்றனர்.

மட்டக்களப்பில் இருந்து கருணா வெளியேற்றப்பட்ட போது அவருடன் வெளியேறியவர்களில் எவரும் தற்பொழுது அவருடன் இல்லை.

கருணாவின் பேச்சாளரும், மொழிபெயர்ப்பாளருமான வரதன் வெளிநாடு தப்பிச் சென்றுவிட்டார். வெளிநாட்டில் இருந்து புலிகள் இயக்கத்துடன் அவர் தொடர்புகளை வைத்துக் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. நிலாவினி உட்பட பல பெண் தளபதிகள் புலிகள் இயக்கத்திடம் சரண் அடைந்துவிட்டனர். எஞ்சியோர் கருணாவின் இராணுவப் புலனாய்வுப் பிரிவுடனான தொடர்பை அறிந்ததும் விலகிச் சென்றுவிட்டனர். தமிழ் தேசியத்துக்கு துரோகம் இழைக்க எண்ணுவோருக்கு கருணா விவகாரம் ஒரு நல்ல பாடம்.

கருணாவைவிட்டு வரதன் வெளியேறிய பின்பு கருணாவின் பேச்சாளராக, இராணுவப் புலனாய்வுப் பிரிவின் உதவியுடன் மட்டக்களப்பு சிறைக்குள் இருந்தே செயற்பட்டு வந்தவர் சச்சு மாஸ்டர்.

சிறைக்குள் வைத்தே மற்றொரு சிறைக் கைதியால் இவரும் இவரது நெருங்கிய சகாவும் சுட்டுக்கொல்லப்பட்டு இரண்டு வாரங்கள் கூட ஆகாத நிலையில் கருணாவுக்கு மற்றொரு பேரிடி விழுந்திருக்கிறது.

அதுதான் தலைநகர் கொழும்பின் புறநகர்ப்பகுதியான கொட்டாவப் பிரதேசத்தில் இடம்பெற்ற படுகொலைகள்.

ஊடகவியலாளர்கள் பொலிஸாருடன் தொடர்பு கொண்டு இது குறித்து கேட்கும் வரை பொலிஸாருக்கு எதுவுமே தெரிந்திருக்கவில்லை என்று கூறப்படுகிறது.

அதன்பின்பும் இரண்டு அல்லது மூன்று மணித்தியாளங்களின் பின்பே சம்பந்தப்பட்ட வீட்டைப் பொலிஸார் கண்டுபிடித்தனர்.

சம்பவத்தில் சுட்டுக்கொல்லப்பட்டோர் எண்ணிக்கை பத்து என்றும் பொலிஸார் இருவரது சடலங்களை மறைத்துவிட்டனர் என்றும் பிரதேச வாதிகள் கூறுகின்றனர். அங்கு சென்ற ஊடகவியலாளர்களும் பொலிஸார் சென்று சுமார் நான்கு மணித்தியாளங்களின் பின்பே உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஆகவே மறைக்கப்பட்ட சடலங்கள் இரண்டும் புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவர்களுடையவையாக இருக்கலாம் என்று சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. பொலிஸார் இதனை மறுக்கின்றனர்.

# அன்பு இல்லம்: தொடரும் சர்ச்சை

திருகோணமலை அநாதைகள் பராமரிப்பு நிலையமான அன்பு இல்லத்தின் நிர்வாகம், தனது மேற்பார்வையில் நடைபெறுவதாக அதன் பணிப்பாளர் ச.சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

அன்பு இல்லத்தில் சில முறை கேடுகள், பாலியல் துஷ்பிரயோகம் நடந்தது பற்றிய முறைப்பாட்டை அடுத்து நிர்வாகத்துக்குப் பொறுப்பானவர்களை கைது செய்யும்படியும், அன்பு இல்லப் பொறுப்பை சிறுவர் நன்நடத்தை திணைக்களத்திடம் வழங்கும்படியும் நீதிபதி எஸ்.தியாகேந்திரன் உத்தரவிட்டிருந்தார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பெண் உதவியாளர் திருமதி.கோமளாதேவி திருநாவுக்கரசு கடந்த 22 ஆம் திகதியும், சங்கரப்பிள்ளை சுந்தரலிங்கம் கடந்த 26 ஆம் திகதியும் தலா 25 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் மாதத்தின் இறுதி ஞாயிறு தினம் பொலிஸில் கையொப்பம் இடவேண்டும் என்ற நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டனர்.

இப்போது அன்பு இல்லத்தின் பராமரிப்பு மேற்பார்வை அன்பு இல்லத்தின் பணிப்பாளர் ச.சுந்தரலிங்கத்தின் பொறுப்பில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நன்நடத்தை அதிகாரிகளோ, வேறு எவருமோ அதனை நிர்வகிப்பதாகவும், மேற்பார்வை செய்வதாகவும் தெரியவில்லை.

அன்பு இல்லப் பொறுப்பாளர் சுந்தரலிங்கம் மீது நான்கு குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

கற்பழிப்பு, பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர்களைத் துன்புறுத்தல், சிறிய காயங்களை விளைவித்தமை என்பவையே அந்த நான்கு குற்றங்களும் ஆகும்.

இந்த நான்கு குற்றங்களையும் சுந்தரலிங்கம் மறுக்கின்றார். பயத்தின் காரணமாக இல்ல மாணவர்கள் முறைப்பாடு கொடுத்தனர் என்கிறார்.

தனது கண்டிப்பால் வெளியேறிய சிலரின் அவதூறான முறைப்பாடும், சதித்திட்டம் தீட்டியவர்களின் சூட்சியும், சில பாடசாலை சமூகத்தினரின் செயற்பாடுகளுமே தனது கைதுக்கு காரணம் என்று அவர் கூறுகிறார்.

மேற்படி நபர்களின் முறைப்பாடுகளும், சில சச்சரவுகளும், பத்திரிகைக் குறிப்பும் விசாரணைக்கு இடம் வகுத்தன.

இப்போது சந்தேகநபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தாலும் விசாரணைகள் நடத்தப்படுகின்றன. அத்துடன் இன்னும் சில மாதங்களின் பிற்பாடு வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றது. அதன் போது யதார்த்தநிலை புரியப்படும் என நம்பப்படுகின்றது.

''இறந்தவர்களின் பிள்ளைகளை இருப்பவர்கள் பாதுகாக்க வேண்டும்'' இதற்காக உணவையோ பணத்தையோ கொடுத்தால் போதாது. அவர்களுக்கு கல்வி அறிவும் ஊட்டப்படவேண்டும். அதனாலேயே இல்லம் அமைத்து பணிபுரிந்தேன். என்னை புறக்கணித்து சொத்துக்களை சுருட்டி எடுக்க வெளியில் இருந்து ஒரு குழு முயற்சி செய்தது. அதை நான் முறியடித்தேன். எனது கண்டிப்பைப் பொறுக்காது வெளியேறிய சிலரை கைக்குள் போட்டுக் கொண்டு எனக்கு எதிராகச் செயற்பட்டு அவதூறை ஏற்படுத்த முனைகின்றனர்'' என்று சுந்தரலிங்கம் சுடர் ஒளிக்குத் தெரிவித்தார்.

– எஸ்.எஸ்.ஆர். –



# அரசியல் அம்பலம்

## முரண்பாடுகள் வந்தால் தானே உடன்பாடுகளும் வரும் இப்போ முதலுக்கே ஆபத்து

''என்னதான் இருந்தாலும் இந்தச் சிவப்புச் சட்டை போஸ்டர் காரர்களுக்கு இப்படி ஒரு மூக்குடைப்பு வரக்கூடாது.'' என்று பரிகாசமாகக் கூறினார் ஜெயத்துக்கெல்லாம் ராஜாவான நம்ப வீட்டுப் பிள்ளை.

வெற்றிக்கே ராஜாவானவர் இல்லையா! ஏதாவது விசயம் இருக்கும் என்று மெதுவாகப் பேச்சுக் கொடுத்தோம்.

''என்ன புள்ளே ஐயா ஏக குஷியாக வருகிறீர்கள். ஏதாவது விசேசமா?''

''அடடா.. வாங்க சார் ஏது இந்தப் பக்கம்? இன்னைக்கு நான் தான் மாட்டிக்கொண்டேனா?''

''அப்படி ஒன்றும் இல்லை. நீங்க தான் பலே கில்லாடியாச்சே! மற்றவர்களை மாட்டி விடும் நீங்களா எங்களிடம் மாட்டப் போகிறீர்கள்.''

''இதுவரை நான் யாரையும் மார்ட்டி விடவில்லை. என்னை மாட்டப் பார்த்தார்கள். அதற்கு ஒரு பதிலடி அவ்வளவு தான்.''

''ரொம்ப சிம்பிளா சொல்லிப் புட்டீங்க. பட்டம் வேணாம், பதவி வேணாம், கம்பஹா அமைப்பாளர் பதவியும் வேணாம் என்று ...க்கி வீசி அதிகார அம்பணியின் கண்களில் விரலை விட்டு ஆட்டியவராச்சே ...கள்''

''என்ன சார் அதை நீங்கள் இன்னும் மறக்க வில்லையா! அது எல்லாம் ஒரு ஸ்ரண்ட் தான். இப்ப பார்த்தீங்களா? நம்ப இல்லாம ஏதும் நடக்காதுங்கிற மாதிரி ஆக்கிப்புட்டோம் இல்லையா?'' என்று கொலரை தூக்கிவிட்டுக் கொண்டார் வெற்றிக் கெல்லாம் ராஜாவான புள்ளே.

''நீங்க என்னமோ இப்படிச் சொல்றீங்க. ஆனால் சிவப்புச்சட்டை போஸ்டர்காரர்கள் என்னடா வென்றால் இந்த அரசாங்கத்துக்கே மெயின் சுவிச் நாங்கள் தான் என்று மீசையை முறுக்குகிறார்களே.'' என மெதுவாகச் சீண்டிவிட்டோம்.

''ஐயோ நீங்கள் பாவம் சேர்! அவங்களோட வீரவசனத்தைக் கேட்டு ஏமாந்து விட்டீர்கள். முன்பு மாவலி அமைச்சு தொடர்பாக ஆர்ப்பாட்டம் பண்ணினாங்க கடைசியில என்ன ஆச்சு? வாலை மடக்கிக்கிட்டு மந்திரியா சத்தியம் பண்ணிப்புட்டாங்க. ...ப்ப இந்த அம்மா என்ன செஞ்சிபுட்டாங்க ...ரியும் இல்ல. கொடுக்கிற மாதிரி ...காடுத்து புடுங்கிற மாதிரி கழட்டிப் ...புட்டாங்க. எப்படி எங்க அம்மாவோட சாமர்த்தியம்.''

''அது சரிதான் வெற்றி எடுத்து மூன்றே மாதத்தில் ஜனாதிபதி பதவியையே இல்லாமல் ஒழித்து விடுவேன் என்று எழுதிக் கொடுத்ததையே இல்லன்னு சொல்லிப்புட்டாங்க. எழுதி வைத்த எழுத்தை மாற்ற ஈசனாலும் முடியுமோ என்பார்கள். ஆனால் உங்க அம்மாவோ அதையும் கூட மாற்றிக் காட்டிப்புட்டாங்க '' என்று புட்டுக் காட்டினோம்.

''என்ன சார் நம்ப கையை எடுத்து நம்ப கன்னத்திலேயே அறையிற மாதிரி இல்ல இருக்கு''

''என்ன புள்ளே ஐயா. நீங்களும் தானே சபையில இருந்தீங்க. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ள மட்டும், அதன் ஆயுட்காலம் முடியும்வரை கலைக்க மாட்டோம் என்று அதி உயர் பீடத்தின் நாயகனுக்கே எழுத்து மூலம் முத்திரை குத்திக் கொடுத்து விட்டு தலைகீழாக மாற்றிவிட்டாரே. அந்த அம்மாவின் சீடரான நீங்க மட்டும் இலேசானவரா என்ன?'' என்று மீண்டும் மடக்கினோம்.

''ஐய்யோ இது என்ன சார். தடியைக் கொடுத்து அடியையும் வாங்கிக் கொண்ட கதையாப்போச்சு. ஆளை விடுங்க'' என நழுவப் பார்த்தார் அந்த புள்ளே.

''அப்படிக் கழற்றிக் கொண்டு ஓட முடியாது. ஆரம்பித்த கதையை முடிக்க வேண்டாமா? என்னமோ போஸ்டர்காரர்கள் மூக்குடைபட்டதாகச் சொன்னீர்களே. அது என்ன.'' என்று மடக்கினோம்.

''ஓ.... அதுவா! காணி, பூமி,வயல்வளம், ஆறுகடல் எல்லாம் தனக்கே வேண்டும் என்று அடம்பிடித்த போஸ்டர் காரரை, பாரத மாதாவைப் பார்த்துவிட்டு வா என்று அனுப்பி விட்டு இரவோடு இரவாக ஒரே கெஸட் மூலம் பாதி உயிரை பறித்து விட்டார் அம்மா. அதைத்தான் சொன்னேன்.''

''நீங்க பாதி உயிரைப் பறித்து விட்டதாக கூறுகின்றீர்கள். ஆனால் சுத்தமான அரசியல் நேர்மையான நிர்வாகம் என்று கூறிக் கொண்டு காணிகளை அளக்க ஆரம்பித்து விட்டாராம் போஸ்டர்காரர். என்னடா இது வம்பாப் போச்சு. ஆகக் கூடுதலான காணிகளை துட்டுக்கு இரண்டு என வாங்கியது நம்ப குடும்பம் தானே! போஸ்டர்காரர் போற போக்கை பார்த்தா வண்ட வாளம் தண்ட வாளத்தில் எறி விடும் என்று பயந்துதான் இப்படி ஒரு அதிரடி நடிவடிக்கையில் அதிகார அம்மணி இறங்கியதாகவும் கூறுகின்றார்களே! அது உங்களுக்குத் தெரியாதா'' என்றோம்.

''சார் சார் இது கொஞ்சம் ஓவராவே போச்சு. உங்களிடம் இப்படிப் பேசியது தெரிந்தால் நாளைக்கு என்னிடம் இருந்தும் கெஸட் மூலம் பாதியைப் பறித்து விடுவார்கள்'' எனக் கூறி தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று கம்பி நீட்டி விட்டார் வெற்றிக்கு எல்லாம் ராஜாவான புள்ளே.

## இலங்கை வேந்தனின் வாய்ச் சவாடால்

''நான் கூட ஆளைப் பார்த்தவுடன் போயும் போயும் இந்த தாத்தாவைக் கூட்டி வந்து பிரசாரம் செய்யப் போறாங்களே! எதைக் கிழித்துவிடப் போகிறார்கள் என்று பார்த்தேன். ஆனால் மேடையில ஏறியபின் தூரத்தில் இருந்து கேட்டால் ஒரு 18 வயது இளைஞனைவிட வீராவேசமா இல்ல இருந்திச்சு. மனுசன் அசத்திப் புட்டார்தான் போங்க.''

''ஆமாம் மச்சான் வேந்தரின் பேச்சுக்கூட நம்ப பேசுர மாதிரியே இருந்திச்சி. அவர் இடைக்கிட கிண்டலான கதை சொன்னார். டொப்பா இருந்திச்சி. ஆனால் அடிக்கடி இங்கிலீஸ் வார்த்தைகளை சொன்னாரு அதுதான் தப்பாச்போச்சி. நம்ப சனங்களுக்கு என்னா இங்கிலீஸில் விளங்கப் போவுது''

இது இரண்டு இளைஞ்களின் சம்பாசனை. பின் ஆசனத்தில் இருந்த நண்பர் மெதுவாக காது கொடுத்தார். சம்பாசனை ரொம்ப இன்ரஸ்ட்டா இருந்தது.

''இன்னும் ஒன்று சொன்னாரு மச்சான். இங்கே ஏன் லயங்களில் அடிமை வாழ்க்கை வாழ வேண்டும். எல்லோரும் வடக்கே வந்து விடுங்கள். காணி தருகின்றோம். சுயமாக உழைத்து வாழலாம் என்றும் இல்ல சொன்னாரு.''

''இது கேட்க நல்லாகத்தான் இருக்கு. ஆனால் அது சாத்தியப்படுமா? இந்த துப்பாக்கிக் காரனுங்க செஞ்ச அநியாயம், அங்க இருந்து வெளியேறிய சனங்களே அங்க போய் மீளக் குடியேற முடியாம இருக்கு. என்னமோ உயர்ந்த பாதுகாப்பு—பணிந்த பாதுகாப்பு என்று சொல்லி பல ஆயிரம் ஏக்கர் காணிகள் கோடிக் கணக்கான பெறுமதியான வீடுகளை எல்லாம் புடிச்சி வைச்சிட்டு இருக்கான். இந்த லட்சணத்தில மலை நாட்டில இருந்து நம்பலும் போயிட்டா எப்படி?''

''அது மட்டும் இல்ல மச்சான். இங்க நம்ப சனங்களுக்கு லயமோ குடிசையோ இருக்க வீடு இருக்கு. நிரந்தரமான தொழில் இருக்கு. வாழ்க்கையை நடத்த ஏதோ ஒரு வருமானம் இருக்கு. இதை விட்டுட்டுப் போய் அங்க குடி யேறினால் உடனடியாக தொழில் இருக்கா. வருமானம் இருக்கா. ஒன்னோட ஒன்னா சேர்ந்து வாழ ஆசையாகத்தான் இருக்கு. ஆனா இது முடியுமா?'' என்று யதார்த்தமா ஒரு கேள்வியைக் கேட்டான் மற்ற இளைஞன்.

''ஐயா சொன்னது என்னமோ நல்லது தான். ஆனால் அவரோட பேச்சைக் கேட்கக் கூடிய சனங்கள் ஓட்டு போடக் கூட்டமாவரலியே. இவரோட வீரப்பேச்சுகள் எல்லாம் வெறும் சவாடலா இல்ல போச்சி''

''அப்படி சொல்லக்கூடாது மச்சான். நல்ல பேச்சைக் கேட்க கூட்டம் கூடியது என்னமோ உண்மைதான். ஆனால் அரசியல் வாதிகளின் அடாவடித்தனங்களும் பார்லிமெண்டிலயே கோவணத்தை வரிந்து கட்டிக்கிட்டு குஷ்தி அடிப்பதையும் பார்த்த சனங்களுக்கு தேர்தலே வேணாமுனு போயிடிச்சி. ஓட்டுப் போட சனங்க போகல. அது தான் சங்கதி'' என்று விளக்கம் அளித்தான் சற்று விவரமான இளைஞன். நம்ப தம்பி மாரும் விவரம் புரிஞ்சவங்கதான்.

## வாயில மன்னிப்பு வயிற்றில நெருப்பு

தேர்தல் காலத்தில ரொம்ப பிஸியாக இருந்த சகலகலாவல்லவர் ரெஸ்ட் எடுத்துக் கொண்டிருந்தார். கையில சுடர்ஒளிப் பேப்பர். மேசையிலும் ஒரு அடுக்கு ஏதோ ஆராச்சி பண்ணுற மாதிரி தெரிந்தது.

இந்த நேரத்திலா டெலிபோன் மணி அடிக்க வேண்டும். எரிச்சலோடு ரிசீவரை எடுத்தார். எதிர் முனையில் கேட்ட குரலை அடையாளம் கண்டதும் எரிச்சல் மறைந்தது. உற்சாகம் பிறந்தது.

''ஹலோ மச்சான் ரொம்ப ரொம்ப தாங்ஸ். சுப்பரா போட்டு இருக்கீங்க. நல்ல அடி இல்லியா'' என்றார்.

மறு மனையில் இருந்த நண்பர் ''அது சரி எங்களுடைய கடமையை செய்தோம். இப்ப என்னமோ அம்மையார் பொது மன்னிப்பு கேட்டு இருக்காங்களே! அதைப் பத்தி என்ன சொல்லப் போறிங்க.''

'' இது எல்லாம் ஒரு ஜில்மால். புருடா விட்டு இருக்காங்க. உண்மையாவே தமிழ் சனங்க் மீது பாசம் உள்ளவரா இருந்தா அவர் ஜனாதிபதியா வந்தவுடன் இல்ல இதை செய்து இருக்கணும். சரிஅதுதான் போகட்டும் இவுங்க கட்சி முந்தி ஆட்சியில இருந்திச்சே! அப்ப செஞ்சி இருக்கலாம். இது எல்லாம் வெறும் பம்மாத்து '' என்றார் சகல கலா வல்லவர்.

''என்னங்க இது காலம் கடந்தாவது ஞானம் பிறந்து இருக்கு இல்ல. அதைப் பாராட்ட வேண்டாமா?'' இது நண்பர்.

''ஆமாம் சார் சோழியன் குடுமி சும்மா ஆடாது. இப்பசபையிலபெரும்பான்மையைக் காட்ட அம்மாவுக்கு ஆள் தேவை. நம்ப ஆறுமுக சாமியை எப்படியாவது பிடிக்கணும். எதைக் குடுத்தாவது அவுங்க கோஷ்டியை வளைக்கணும். அதுக்காக அம்மா கொடுத்துள்ள சீனி போலை. வாயில தான்மன்னிப்பு—இரக்கம் என்பதெல்லாம். ஆனால் வயித்துக்குள்ள பெரிய நெருப்பு இருக்கு. எப்ப யாரைச் சுட்டு பொசுக்குமோ தெரியாது'' என்றார் சகல கலா வல்லவர்.

அதுவும் சரிதான் மனிதர் நாலும் தெரிந்தவர் இல்லையா.


சுவிஸில் உங்கள் அபிமான
சுடர் ஒளி
விளம்பர முகவர்
MILITAR STR.84
8004 - ZURICH
SWITZERLAND



பாலியல் பலவீனத்திற்கு ரிஷி அஜமாமிச லேகியம்

தேவையில்லை வயாகரா நம்பிக்கையுடன்
பாலியல் பலவீனத்திற்கும், ஆண்மைக்கும்,
வீரிய விருத்திக்கும் ரிஷி அஜமாமிச லேகியம்
ரூபா.250/− தங்கபஸ்பம் கலந்தது ரூபா 1475/−

தங்கபஸ்பம் தனியாகவும் பெறலாம்

மூல வியாதியா ரிஷி லேகியம் பாவியுங்கள்.
உள்மூலம், வெளிமூலம் இவற்றை சுகப்படுத்தும்
ரூபா. 250/−



ஞானசுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு−11.
தொலைபேசி : 2421398



பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லிறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவ து போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...
ஜூலை 21 - 26 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

கல்முனையில்..
ஜூலை 31, ஆகஸ்ட் 01 ஆம் திகதிகளில் சந்திக்கலாம்
T.M.M. பாமசி கல்முனை
Tel No. 067 2229329
Hot Line: 0777 569205

வவுனியாவில்...
ஆகஸ்ட் 07, 08, ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

யாழ்ப்பாணத்தில்...
ஆகஸ்ட் 09, 10, 11 வரை
A.S.N. சுற்றுலா விடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

# ஈராக் அதிர்கிறது



சதாம்ஆதரவுத் தீவிரவாதிகளின் குண்டு வெடிப்புகளினால் ஈராக் தினமும் அதிர்ந்து கொண்டிருக்கிறது.

ஈராக்கின் பாதுகாப்பில் ஈராக்கிய இடைக் கால அரசுப் படைகளுடன் இணைந்து செயற் பட்டு வரும் அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகள் இந்த குண்டுத்தாக் குதல்களால் தடுமாறிக் கொண்டிருக்கின்றன.

தினமும் குண்டுகள் வெடிக்கின்றன. வெளிநாட்டவர்கள் கடத்தப்பட்டு கழுத்து வெட்டிக் கொலை செய்யப்படுகின்றனர். இடைக்கால அதிகாரசபையில் கடமை ஆற்



றும் உயர் அதிகாரிகள் சுட்டுக் கொல்லப்படு கின்றனர். ஈராக்கில் இரத்த ஆறு ஓடுகிறது.

வியட்நாம்யுத்தத்தின் பின்பு வெளிநாடு ஒன்றில் தலையிட்டதன் மூலம் அமெரிக்கா எதிர்நோக்கிவரும் மோசமான நெருக்கடி என்று ஈராக் நெருக்கடியை ஆய்வாளர்கள் வர்ணிக்கின்றார்கள்.

ஜூன் 28 ஆம் திகதி ஆட்சியைப் பொறுப் பேற்ற இடைக்கால அதிகாரசபை நாட்டை நிர் வகிக்க முடியாது ஆட்டம் கண்டு வருகிறது.

இடைக்கால அதிகாரசபையின் ஒரு மாதகால ஆட்சியில் ஏற்பட்டுள்ள இழப்புக் கள் அமெரிக்காவோ அல்லது இடைக்கால அதிகார சபையோ எதிர்பாராதவை.

ஜூலை 28 ஆம் திகதி – இடைக்கால அதிகாரசபை ஆட்சியைப் பொறுப்பேற்ற ஒருமாத நிறைவுதினம் அன்று மட்டும் ஈராக் கில்இடம் பெற்ற பல்வேறு சம்பவங்களில் குறைந்தது 120 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

சமீப நாட்களாக ஈராக்கின் இடைக்கால அதிகாரசபை எதிர்நோக்கும் ஆள்கடத்தல், ஈராக்கின் புதிய அரசை வெளிநாடுகளின்



நெருக்குதல்களுக்கும் உள்ளாக்கிவருகிறது.

கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்ற ஒரு சம்பவத்தில் மட்டும் 68 பேர் ஈராக்கில் கொல்லப்பட்டுள்ளனர். 56 பேர் காயம் அடைந்துள்ளனர்.

தலைநகர் பாக்தாத்துக்கு வடக்கே உள்ள பாக்குவா நகரில் பொலிஸ்நிலையம் ஒன் றுக்கு வெளியே நடத்தப்பட்ட கார்க்குண் டுத் தாக்குதலிலேயே இவ்வளவு பேர் ஒரே சமயத்தில் கொல்லப்பட்டனர்.

புதிதாக பொலிஸ் படையில் சேருவதற் காக கியூவில் பெரும் தொகையானோர் காத்து நின்ற சமயமே குண்டு வெடிக்க வைக் கப்பட்டது.

நவம்பர் மாதம் தேர்தலை எதிர்நோக்கும் புஷ்ஷுக்கு ஈராக் பிரச்சினை பெரும் சோதனைதான். ஈராக்கில் அழிவுதரும் இர சாயன ஆயுதங்கள் இருப்பதற்குப் போதுமான ஆதாரங்கள் இன்றியே அமெரிக்கா தனது கூட்டுப்படைகளின் உதவியுடன் ஈராக்மீது படை எடுப்பு நடத்தியது. ஐ.நாவின் அனு மதி கூட இதற்குப் பெறப்படவில்லை.

ஈராக்கைகைப்பற்றிய இப்படைகளால் எந்தவிதமான இரசாயன ஆயுதத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லை. பெரும் அழிவு களை ஏற்படுத்திய பின்பு சதாம் ஹுசெய்னை மட்டும் கைதியாகப் பிடிக்க முடிந்தது.

இடைக்கால அதிகார சபையிடம் அவர் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபின்பு இனந்தெரியாத இடத் தில் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஈராக்கில் சதாம் ஆதரவுத் தீவிரவாதிக ளின் தாக்குதல்களைக் கட்டுப்படுத்த முடி யாத நிலையில் நழுவும் நோக்குடனேயே அமெரிக்காவினால் இடைக்கால தன் னாட்சி சபை உருவாக்கப்பட்டு அதிகாரம் ஈராக்கியர்களிடம் கையளிக்கப் பட்டது. ஆனால், அமெரிக்கா தலைமையிலான படைகள் இன் னும் ஈராக்கில் தங்கி உள்ளன.

இடைக்கால அரசு கோரினால் தனது படைகள் ஈராக்கில் இருந்து வெளியேறிவிடும் என்று அமெரிக்கா கூறு கிறது. ஆனால், அமெரிக்கப்படைகள் எப் பொழுது வெளியேறுகின்றனவோ அன்றே சதாம் ஆட்சி மீண்டும் ஏற்பட்டுவிடும். ஆகவே எந்த ஓர் அமெரிக்க ஜனாதிபதிக்கும் இல்லாத சோதனை புஷ்ஷுக்கு. 1975 ஆம் ஆண்டு அமெரிக்கா, தென் வியட்நாமில் இருந்து வெளியேறும்போது தனது பொம்மை அரசுத் தலைவர் நுாயன் வான் தியூவையும், அவரது ஆட்சியாளர்களையும் அழைத்துச் சென்றது. இதுதான் ஈராக்கில் இடைக்கால தன்னாட்சி அரசுத் தலைவர்களுக்கும் ஏற் படப் போகிறது.






ரெய்னோ சில்வா



ரமணன்



பா.காண்டீபன்



மப்றூக்




நவநீதன்




பரணி



செந்தூரன்



சி.நடராஜசிவம்



லோஷன்



கிருஷ்ணா



விமல்



சங்கீதா



கௌரி



கவிதா



குமுதினி

# 7 ஆம் ஆண்டில் சூரியன் FM

இலங்கையில் வானொலித்துறை 75 வருடங்களுக்கு மேலான ஒரு சிறப்பான வரலாற்றைக் கொண்டுள்ளது என்பது எமக்கெல்லாம் ஒரு பெருமைக்குரிய விடயமாகும். சர்வதேச அரங்கில், அன்று தொட்டு இன்று வரை எமது வானொலிச் சேவை ஒரு சிறப்பான, தனித்துவமான தன்மையைக் கொண்டுள்ளதை, எமது வானொலித்துறைப் பாதையின் பதிவுகளைப் பார்க்கும் போது நாம் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

பல சிறப்பான நிகழ்ச்சிகளையும் ,திறமையான ஒலிபரப்பாளர்களையும் சர்வதேச தரத்திற்கு ஈடாக உலகிற்கு அறிமுகப்படுத்திய இலங்கையின் வானொலித்துறை, இன்று தனியார் மயமான நிறுவனங்களிடம் சென்ற பின்பு மேலும் பல நவீன தொழில் நுட்ப ரீதியான மாற்றங்களை ஏற்படுத்தி புதுமைகளைப் புகுத்திஏராளமான நேயர்களை தன்பால் ஈர்த்துக் கொண்டு வருகிறது. அவ் வகையில் சூரியன் எப்.எம் வானொலி 1998 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 25 ம் திகதி ஆரம்பிக்கப்பட்டபின்பு இது தெளிவானது. ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரெய்னோ சில்வாவினால் ஆரம்பிக்கப்பட்ட சூரியன் எப்.எம் வானொலியின் முதலாவது நிகழ்ச்சி முகாமையாளாராக சி. நடராஜ சிவம் நியமிக்கப்பட்டார்.

தெட்டத் தெளிவான டிஜிட்டல் முறையிலான ஒலிபரப்புடன், சிறந்த இசையுடன் பல புதுமையான நிகழ்ச்சிகள் அறிமுகப்படுத்தப் பட்டதுடன், இலகு தமிழில் சினேகபூர்வமாக, சரளமாக நேயர்களுடனான தொலைபேசி உரையாடல் நிகழ்ச்சிகளை சுவாரஸ்யமாக வழங்கி மிகக் குறுகிய காலத்தில் ஏராளமான நேயர்களின் பேரபிமானத்தைப் பெற்ற வானொலியாக சூரியன் எப்.எம் விளங்கி வருகின்றது.

சிறந்த இசையுடன் கூடிய முதற்தரமான நிகழ்ச்சிகள் காலத்திற்கேற்றமுறையில் பல புதிய, புதுமையான நிகழ்ச்சிகளை அறிமுகம் செய்து சிறந்த ஆக்கத்திறன் மிக்க அறிவிப்பாளரைக் கொண்டு நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்குதல், தரமான சிறந்த இசையுடன் கூடிய புதிய திரைப்படப் பாடல்கள் கிரமமாகத் தொகுக்கப்பட்டு 24 மணி நேரமும் ஒளிபரப்பாகுதல் மற்றும் சமூகப்பொறுப்பு வாய்ந்த நிகழ்ச்சிகள் ஆகிய விசேஷ தன்மைகள் ஏராளமான நேயர்களை சூரியனுடன் இணைய வைத்துள்ளது என்றால் மிகையாகாது.

நாடளாவிய ரீதியில் தெட்டத் தெளிவான ஒலிபரப்பாக, குறிப்பாக வடக்கு கிழக்குப் பகுதிகளில் திருகோணமலை, வவுனியா, அம்பாறை, மட்டக்களப்பு, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் வரை எமது சூரியன் எப்.எம் ஒலிபரப்பு மேலும் தொழில்நுட்ப ரீதியாக வலுவூட்டப்பட்டு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இது எமது நேயர்களுக்கும், விளம்பர தாரர்களுக்கும் மகிழ்ச்சி ஊட்டும் ஓர் செய்தியாகும். இவ்வகையில் விளம்பரச் சந்தையில் பல வியாபார நிறுவனங்களும், பல விளம்பர முகவர் நிறுவனங்களும் சூரியன் எப்.எம் ஒலிபரப்பில் தமது விளம்பரங்களை ஒலிபரப்ப வேண்டுமென்று முண்டியடித்துக் கொண்டிருப்பது எமது ஒலிபரப்பின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது. அத்துடன் வானொலி விளம்பரச் சந்தையில் அதிகூடுதலான பங்கை சூரியன் கொண்டிருப்பதுஎமது சிறப்புக்கு மற்றுமொரு சான்றாகும்.

சூரிய ராகங்களுடன் ஆரம்பமாகும் எமது காலை நிகழ்ச்சிகள் பல சுவாரஷ்யமான விடயங்களை உள்ளடக்கியதாகவும், பரிசுடன் கூடிய பல பயனுள்ள அம்சங்களை சேர்த்துக் கொண்டு நிகழ்ச்சியை சுவைபடத் தயாரித்து வழங்குவதாகவும் இருப்பதால் சூரிய ராகங்கள் நேயர்கள் மத்தியில் ஒரு பிரபலமான நிகழ்ச்சியாக விளங்குகிறது. இந்த நிகழ்ச்சியை நிகழ்ச்சி முகாமையாளர் ஏ.ஆர்.வி. லோஷசன் மற்றும் எஸ்.ரமணன் தொகுத்து வழங்குகிறார்கள்.

அடுத்து வரும் ''இசைச்சமர் நிகழ்ச்சி'' பல சிறந்த பாடல்களை தருவதுடன், நேயர்கள் அப்பாடல்களைத் தரப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டள்ளதானது, இந்த நிகழ்ச்சியை நேயர்கள் மேலும் ஆர்வத்துடன் கேட்க வழிவகுக்கிறது. இசைச்சமர் நிகழ்ச்சியை பி.கௌரி, எஸ்.நவநீதன் ஆகியோர் தொகுத்துத் தருகின்றனர்.

நண்பகல் 1 மணிக்கு ஆரம்பமாகும் ''மதியநேர இசை விருந்து'' நிகழ்ச்சியை தற்காலப் பெண்களுக்கு ஏற்ற வகையில் பெண்கள்தொடர்பான மிக நுணுக்கமான பல விஷயங்களை காத்திரமான முறையில் வழங்குவதுடன், நேயர்கள் பக்ஸ், ஈமெயில், தொலைபேசி , தபாலட்டைகள் மூலமாக விரும்பிக் கேட்கும் பாடல்களை உடனடியாக தந்து மகிழ்விப்பவர் சங்கீதா.

பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் '' வண்ணப் பூமாலை'' நிகழ்ச்சி சினிமா தொடர்பான பல புதிய தகவல்களைத் தருவதுடன், நேயர்களுக்கு சினிமா விமர்சனம் செய்யும் வாய்ப்பையும் அளித்து, திரை இசைச் சந்தையில் அன்றே வெளியிடப்படும் புத்தம் புதிய பாடல்களை அன்றே நேயர்களுக்கு அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சியாக இருக்கிறது. அதை வார நாட்களில் குமுதினி ஜெகநாதனும், சனி ஞாயிறு தினங்களில் கவிதாவும் வடிவமைத்துத் தருகின்றனர் .

மாலை நிகழ்ச்சியாக ஒலிபரப்பாகும் '' என்றென்றும் புன்னகை '' நேயர்களின் பங்களிப்பை பெரிதும் கொண்டுள்ளது. ஈமெயில், பக்ஸ் மூலமாக நேயர்கள் தொடர்பு கொண்டு தமது விருப்பப் பாடல்களை விரும்பிக் கேட்பதுடன், பல சுவாரஷியமான அம்சங்களும், மிக வேக இசை கொண்ட புதிய பாடல்களும் ஒலி பரப்பாகி அநேக இள வட்டங்களை வசீகரிக்கும் நிகழ்ச்சியாக அந்த நிகழ்ச்சி அமைந்துள்ளது. இந்நிகழ்ச்சியை பா.காண்டீபன் தொகுத்து – வழங்குகிறார். சனிக்கிழமைகளில் கே.ஆர். கிருஷ்ணா,குமுதினி ஜெகநாதன் ஆகியோர் தொகுத்து வழங்குகின்றனர்.

இரவு8 மணிமுதல் 10 மணி வரை துள்ளிசைப் பாடல்களை தொடராக ஒலிபரப்பி மேற்கத்தைய பாணியில் புதிதாக வடிவமைக்கப்பட்ட அந்நிகழ்ச்சிதான் ''ராக ரொக்''. மிக விறுவிறுப்பான அறிவிப்புப் பாணியைக் கையாண்டு வித்தியாசமான முறையிலேயே அந்நிகழ்ச்சியைத்தொகுத்து வழங்குகிறார் கே.வியாசா.

அதைத் தொடர்ந்து வரும் இரவு நிகழ்ச்சியாக ''நேற்றைய காற்று'' எனும் நிகழ்ச்சியில் புதிய அட்டகாச பாடல்களைத் தவிர்த்து மிகப் பிரபல்யமான, நேயர்கள் அபிமானம் பெற்ற, கருத்தாழம் மிக்க, அன்று வந்த பாடல்களைக் கிரமமாக தொகுத்து கவித் துளிகளுடன் வழங்குகின்றனர் யூ.எல். மப்றூக் மற்றும் ஏ.சசாங்கன், கிருஷ்ணா ஆகியோர். அதைத் தொடர்ந்து அதிகாலை வரை தொடரும் இரவு நேர நிகழ்ச்சிகளைத் மிகத் துடிப்புடனும் கலகலப்பாகவும் சி.விமல், ஏ.ஆர். திருச்செந்தூரன், ரி.பிரணவன், எஸ் பரணி ஆகியோர் தொகுத்து வழங்குகின்றார்கள்.

அதிகாலை 4 மணி முதல் 6 மணி வரை வியாசா கல்யாண சுந்தரம் தொகுத்துவழங்கும் ''அருணோதயம்'' ஆன்மீக ஆவலர்களுக்குவிருந்தளிக்கும்நிகழ்ச்சி. மும்மதப் பாடல்கள், ஆன்மீகக்கருத்துக்கள், நற்சிந்தனைகள் என பல்வேறு விடயங்களையும் தாங்கி காலைப் பொழுதுகளை மகிழ்வுடன் ஆரம்பிக்க வழி செய்யும் நிகழ்ச்சி.

வெள்ளிக் கிழமை இரவு வேளையில் பிரதானமாக நகைச்சுவைக்கு இடமளிக்கும் வகையில் ''விகடத்தடாகம்'' நிகழ்ச்சி ஒலிபரப்பாகிறது. விகடத்துணுக்குகள், திரைப்படங்களில் இடம் பெறும் விகடக் காட்சிகள், நகைச்சுவைக் கலந்துரையாடல்கள் மற்றும் பல நகைச்சுவை அம்சங்கள் இந்நிகழ்ச்சியில் சேர்த்துக் கொள்ளப்படு

(22 ஆம் பக்கம் பார்க்க...)



# கவிதைப் புனல்

## காத்திருப்பு

இதயம் தாங்கவில்லை - என்
இமைகள் தூங்கவில்லை!
கூட்டை விட்டு நீயோ
தனிக்குஞ்சாய்
அங்கிருக்க.....
குடும்பத்துடன் குலவியிங்கு
குதுாகலித்து நானிருக்க....!
ஆதவன் அஸ்தமித்தால்....
என்னில் ஆயிரம்
எண்ணங்கள்.....!
படுக்கையில் நான் புரண்டால்
பறந்தோடும் என் தூக்கம்
எல்லாம்.....
உன்னால் வந்ததே...-என்
உயிரே போகுதே -எப்போ
நீ வருவாய்? – காலம்
கரைந்தாலும்....என்றும்
காத்திருப்பேன் -அன்பே
உன்னைப் பார்க்க

*மாலினி சந்திரன்,*
*மண்கும்பான்.*

## விஞ்ஞானமா காதலி

திருடி போன இதயம்
திருமணத்தில் முடியுமென்று
தவமிருந்து வாழ்ந்து வந்தேன்
தன்னிலை புரியாத......!
மரமொன்றைக் காதலித்து.
மண்ணாக்கிய வாழ்கையை
மடலேறி அழித்திருப்பேன்
சங்க காலமாக
இருந்திருந்தால்.....!
விஞ்ஞான உலகத்தில்
வித்தியாசம் காதலென்றாள்
உண்மை தான்.........
சற்றேனும் இரக்கமில்லை
இதயம் இரும்பு தானே
இயந்திர மனித வாழ்கைக்கு
இது என்ன புதிதா?
இப்போது தெரிகிறது
நீயும் விஞ்ஞான காதலி
என்று.........!

**வி.என்.வசந்தன் (ஜனா),**
**முள்ளியவளை.**

## பரிதவிக்கும் மனதுடன்

தடம் மாறியது என் கால்கள்
மட்டும் அல்ல எதிர்காலமும்
தான்.
விட்டு வந்தது என் வீட்டு
உறவுகளை
மட்டும் அல்ல என் தாய்
மண்ணையும் தான்.
மாறி விட்டது என்
தோழமைகள் மட்டுமல்ல
தொன்றுதொட்டு வந்த பழக்க
வழக்கங்களும் தான்!
தமிழ் தவளும் தாய் நாட்டின் –
தலைநிமிர்த்தி
நடந்த வாழ்வுதனை – தொலை
தூரம் தேடுகிறேன்!
மணல் நிறைந்த பாலை
வனத்திலே
பரிதவிக்கும் மனதுடன்
நான்....!

**கே.தயா,**
**முக்கொம்பனூர்.**
**(சவூதி அரேபியா)**

## விட்டுக் கொடுப்பு

விட்டுக் கொடுத்தால்
பாவமில்லை
சமரசத்தை எட்டிப் பிடிக்க
விட்டுக் கொடுத்தால்
பாவமில்லை!

உத்தமர்களின்
வாழ்வுதன்னில்
விட்டுக் கொடுத்தல்
மனப்பான்மை
தந்ததுவே உயர்வு!

நீ பெரிதா? நான் பெரிதா?
என்ற எண்ணம் மிக சிறிது
முடிவொன்று பெற எளிது
விட்டுக் கொடுத்தல் அது
இனிது!

பிடிவாதம் வீண் கோபம்
மனஸ்தாபம் பழிக்குரோதம்
சொல்லவில்லை மதங்களில்
தேவையுமில்லை நம்
வாழ்வில்!

விட்டுக் கொடுத்தால்
அவையாவும்
விட்டெம்மைச் சென்றிடுமே
மதங்களின் தத்துவத்தால்
நல் வாழ்வு கிட்டிடுமே!

விட்டுக் கொடுத்தால்
நட்டமில்லை
விட்டுச் செல்லும்
இவ்வுலகில்
விட்டுக் கொடுத்தால்
நட்டமில்லை !

**அஸ்ரியா லாபிர்,**
**கொழும்பு – 14**

## விதி

இழப்புக்களுக்கு மட்டும்
உச்சரிக்கின்றனர்
ஊரார் உன்பெயரை.

## கனவு

நேரில் பார்க்க தயங்கி
நிம்மதியாக கண்டேன்
நள்ளிரவில் அவளை.

## காளான்

நிலத்துக்கு குடைபிடிக்கும்
மாரி கால
வெள்ளை மாமனிதர்

## கண்ணீர்

உப்பு உற்பத்தி
ஆலையொன்று
உலவுகிறது மனிதனில்

*யாழ்.நங்கை.*

## தொலைந்தது

இன்று வரை — என்னுள்
இறுகப் பற்றியிருந்த —
எனது
இதயம் தொலைந்து போனது
நீல வானுக்கும்
வெட்டிச் சிரிக்கும்
மின்னலுக்கும்
ஆழக் கடலுக்கும்
அமைதியாய் சிமிட்டும்
விண் மீனுக்கும்
சோலை மலருக்கும்
சாகாராக் குயிலுக்கும்
காலைக்கதிரவனுக்கும்
கதை சொல்லும்
கிளிப்பிள்ளைக்கும்
என் இதயமதின் இசை
தெரியும்.
இன்னல்கள்தெரியும் —
சோகத்தின் சுமைதெரியும் —
ஆனால்
தொலைந்து போனதே என்
ஆத்மா
நீங்கள் சொல்லுங்கள்
திருடியவன்
என்னவன் தானா என்பதை.

**நந்த பாரதி,**
**லண்டன்.**

## நிலாப் பெண்ணே

ஏய்....
நிலாப் பெண்ணே!
என்னவளுக்கும்
நிலா என்று பெயர்
உனக்கானதில்லை.
என் உரையாடல்கள்
என்னவளுக்கானது.
ஏன்? எனைக்கண்டாய்
மலைமுகடு வரை வந்து
உன் வரவு பார்க்க
காத்திருக்கிறேன்.
நிலாப் பெண்ணே!
முகில் ச(ா)தி சொல்லி
பிரிக்கும் தடை
எவர் தரினுமுடைந்து
வாராயோ?
என் இதயம் கொண்டு
வானம் செய்தேன்
உன் வரவு கண்டு
மிளிரும் இந்தவானம்
என்று
உனக்குத் தெரியாதா?

***எஸ்.வசந்தி,***
***விசுவமடு.***

## கொஞ்ச நாள் பொறுத்திரு

ஏழை என்ற
எண்ணம் உன்னை
ஏளனம் செய்யாது.
எதிர்த்துத் தாங்கு
ஏற்றம் எனும் படகில்
ஏறிக் கொள்ளு...
அரக்க மனம்
என்றாலும்
இரக்க குணம் கொண்டு
இயன்ற வரை போராடு.
இயலாது
என்ற நிலையை
விட்டுத் தள்ளு.
இடியைத் தாங்கவும்
துணிந்து நில்லு.....!
துன்பங்கண்டு
துவண்டு விடாமல்
மனதைத் திடப்படுத்து.
எதையும் தாங்கும்
இதயமது
எல்லோர்க்கும் கிடையாதென்று
உணர்ந்திரு.... ஆனால்
நீ மட்டும் இதற்கு
விதி விலக்காய் இரு...
ஏற்றம் பெற வேண்டுமெனில்
எழுந்து விடு....
சிகரம் போன்று
உயர்ந்திரு
எல்லாமே உன் காலடி வரும்
கொஞ்ச நாள் பொறுத்திரு.

**ஏ.ஆர்.எம்.திருமலை நாதர்,**
**ஜின்னா நகர்.**

## அம்மா

பூவுலகில் பிறப்பெடுக்கும்
அனைத்துயிர்களும் உச்சரிக்கும்
கன்னிச் சொல்

## உப்பு

எதையும்
அளவுடன் வைத்துக்கொள்
என்பதை
எந்நேரமும் நினைவுபடுத்தும்
நண்பன்.

## திமிங்கிலம்

நவநாகரீகத்தில் மூழ்கி
மீளமுடியாமல்
தத்தளித்துக் கொண்டிருக்கும்
தங்கத்தமிழ்

*க.அரவிந்த், மல்லாவி*

## வேதனை

நேசங்கள் நெடுந்தூரம்
சென்ற போதும்
பாசங்கள் பகல் கனவாய்
ஆனபோதும்
வேசங்கள் கலையாத போதும்
விழிக்காத ஜீவன்களுக்கு
விளைவது வேதனைதான்.

*கி.வேணி, தளவாய்.*

## அரசியல் வாழ்க்கை

கனவான் வாழ்கைக்கு
கச்சிதமான தெரிவு
தடியடிக்குத் தொண்டர்கள்
கொடிபிடிக்கத் தோழர்கள்
தனிராச்சியம் தான்.
இனவாதம் பேசலாம்
இல்லையென மறுக்கலாம்
போட்டியிட்ட கட்சி
அரசைக் கோட்டை விட்டால்
கட்சி மாறலாம்.
களமுள்ள அமைச்சுடன்
மக்கள் குறை தீர்க்கவே
இக் கொள்ளை மாற்றமென
வெட்கமின்றி அறிக்கை வேறு.
மொத்தத்தில் அரசியல் வாதி
நட்டத்தில் போகும் தொழிலில்
இலாபமெடுக்கும் வித்தகன்.

**த.சி. ரஞ்சன்,**
**நாவலப்பிட்டி.**

## மூத்த மடல்..!

தோழியே
உனக்காய்
நானெழுதும் மூத்த மடலிது
முடிந்த வரை வார்த்தைகளை
முற்றுப் பெறமுன் முடிப்பேன்.
முடிவில்
இப்படிக்கு என எழுதி
என் பெயரையும் இட மறுப்பேன்.
அவ்விடத்தில்
தலை முடியில் ஒன்றைத் தொடுப்பேன்.
ஏனெனில் மொட்டைக் காகிதம்
இதுவென நீ நினைத்து
விடக்கூடாது என்பதற்காக.

**வி.விஜிமயூரா**
**யாழ்.பல்கலைக்கழகம்**

## வாழவிடு...!

காதலை என் கண்ணில்
ஊற்றியவளே
பூக்களை ஏனடி
கூந்தல் தூக்கில் ஏற்றினாய்.
என்னைக் கொன்றது
போதாதென்றா.... போடி
பூக்களையாவது வாழ விடு.

**கே.ஆர்.சுதர்ஷன்,**
**மல்லாகம்.**

## என்ன தான் நடக்கிறது.

வடக்கில்
கலாசார சீரழிவுக்கும்
வன்முறைக்கும்
குறி வைக்கும்
காட்டு மிராண்டிகள்.
கிழக்கில் நிராயுத
பாணிகளை
குறி வைக்கும்
தேசத் துரோகிகள்.
தெற்கில்
தேசத்துரோகிகளை
குறி வைக்கும்
தேசபக்தர்கள்.
தொலைவில்
யுத்த பேரிகையின்
இடி முழக்கம்.
என்ன தான் நடக்கிறது
இங்கு.....?

## பரவசம்

உன் விழியில்
என் பார்வை...!
உன் இதழில்
என் புன்னகை...!
உன் நடையில்
என் பயணம்...!
உன் இமையில்
என் தூக்கம்...!
உன் இதயத்தில்
என் துடிப்பு...!
உன் வார்த்தையில்
என் வாழ்க்கை...!

*தமிழாம்பிகை*
*எஸ்.ஜெகன்,நானாட்டான்.*

## கவியாகிறேன் உனக்காக!

அன்பே!
உன் காதலனாய்
இருப்பதைவிட
நான் வரையும் கவியாகவே
இருக்க விரும்புகிறேன் –
ஏனெனில்
அதையல்லவா நீ
நேசிக்கிறாய்!

*சங்கீதா மகேந்திரன்,*
*யாழ்ப்பாணம்.*

## பாரதி பிறப்பிற்காய்....!

பெண்ணே!
உன்னை வர்ணித்த
நிலவுக் காலங்கள்
ஏட்டுச் சுரக்காயென்பதை
நினைவில் கொள்.
சுட்டும் விழிச்சுடர்
சொப்பனமே
கனியிதழே
கவிமொழியென்ற
நலம் பாராட்டும்
நல் வார்த்தைகள்
நிழற் சித்திரங்கள்.
எத்தனை சாதனைகள்
தரணியில் சமைத்தாலும்
பெண் என்ற சொல்
முடக்கிவிடு முன்னை.
அடக்கம், நாணம்
பெண்மையுன்
அணிகலனானாலும்
பொன்னகை வேண்டுமடி
மாங்கல்யம் நீ சூட–
விண் ஏறி விந்தை
புரிந்தாலும்
ஆரணங்கேயுன்
விரிந்த வானம்
குடும்பமென்ற கூடு தான்.
புதுமைகள் புகுத்தி
பூமியைப் படம்
போட்டாலும்,
விண்ணப்பித்து வருவோம்
பாரதி பிறப்பிற்காய்
இனி ஒரு தரமும்.......

**தர்ஷனா,**
**வவுனியூர்.**

## உனக்குமா?

மொட்டை மாடியில்
நான் தந்த
மொட்டைக் கடிதம்
அதற்குள்...
மீசையில்லாத – என்
பிறந்தநாள்
புகைப்படம்.

பருமடையாத
பள்ளிப்பருவம்
அதில்...
பதினெட்டைத் தாண்டும்
காதலுணர்வு.

விரியா மொட்டுக்களாய்
இளமை உருவம்
அதிலும்...
பூத்த இதழ்களாய்
புது எண்ணங்கள்.

'பிள்ளைகள் தானே'
என்ற – எம்
பெற்றோர் நினைவு
ஆனால்...
பிரியாக் காதலராய் – நாம்
பெரும் உறவு.

இவ்வாறாக இருந்த
இன்ப வாழ்வு
திடீரெண்டு – நீ
ஈழந்தாண்டிய
இருள்க் கனவு
இதெல்லாம் இங்கு
வந்து வந்து
போகுதே! – அங்கு
உனக்குமா? !!

**க.சிவானந்தம்,**
**வெருகல்.**

## ஒரு தலையின் பரிதாபம்

காதலித்துப்பார்
ஒருதலையாய்
கடிதம் வரைவாய்
கரம் போய் சேராது.
கவிதை வரைவாய்
கவிஞனுக்கும்
காய்ச்சல் வரும்.
காத்திருப்பாய்
பயன் கிடைக்காது
மனம் உடைந்து...
குடிப்பாய் கூத்தடிப்பாய்
இராமனும் ஆவாய்
இறுதியில்...
காதலை போதிக்கும்
மன்மதனும் ஆவாய்.

*வி.திபாகரன்,*
*தம்பிலுவில் – 1.*

# போக்கறுந்த சமாதானமும் நொந்துசலித்த நோர்வேயும்

நோர்வே பிரதிவெளிவிகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் கடந்த 26 திங்கட்கிழமை நண்பகல் வேளையில் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான தூதுக்குழுவை சந்தித்து ஆழமாகப் பேசியுள்ளார். நோர்வே தூதுவரும் விடார் ஹெல்கிஸனுடன் பேச்சுக்களில் பங்காற்றினார்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து விடார் ஹெல்கிஸன், தான் விடுதலைப்புலிகளைச் சந்தித்து பேசியதன் மூலம் புரிந்துகொண்ட விடயங்களையும், விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டையும் விளக்கியிருந்தார்.

இரண்டு தரப்பினரிடமும் சில நெகிழ்ச்சிப் போக்குகளை நோர்வே பிரதிநிதி எதிர்பார்த்திருக்கக்கூடும். பேச்சுவார்த்தைக்கான ஒரு நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பது தொடர்பாக இம்முறையும் நோர்வே பிரதிநிதியால் எவ்விதமான முன்னேற்றத்தையும் எட்ட முடியவில்லை, பேசிப்பேசி கண்டது எதுவுமில்லை!

### இடைக்கால தன்னாட்சி மீளமீள வலியுறுத்தப்படுகிறது!

முதலில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளைப்பற்றிப் பேசி அதுதொடர்பான முடிவுகள், அமுலாக்கம் என்பன இடம்பெற்ற பின்னே நிரந்தர அரசியல் தீர்வு தொடர்பாகப் பேசமுடியும் என்ற விடுதலைப்புலிகளின் முன்னைய நிலைப்பாடு சு.ப.தமிழ்ச்செல்வனால், ஹெல்கிஸனிடம் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும் போர்நிறுத்தத்தை தொடர்ந்து அமுலாக்குவதில் கிழக்குமாகாணம், கொழும்பு நகரம் போன்ற பகுதிகளில் இடம்பெறும் வன்முறைகள் எவ்வளவுதூரம் கடினத்தன்மைகளையும், சவால்களையும் உண்டுபண்ணி வருகிறது என்பது தொடர்பாகவும் விடுதலைப்புலிகளும், நோர்வே தரப்பினரும் கரிசனையுடன் ஆராய்ந்துள்ளனர்.

பின்னர் ஜனாதிபதியுடனான சந்திப்பிலும் ஹெல்கிஸன் போர்நிறுத்த உடன்பாடு சந்தித்து நிற்கும் சவால்களை எடுத்தியம்பியுள்ளார். ஜனாதிபதி தமது அரசாங்கம் போர் நிறுத்த உடன்பாட்டில் தொடர்ந்தும் ஈடுபாட்டுடனும், அர்ப்பணிப்புடனும் செயற்படும் என்று அவரிடம் தெரிவித்துள்ளார்.

### போர்நிறுத்தம் தொடருமா?

விடுதலைப்புலிகளும், அரசாங்கமும் தொடர்ந்தும் போர்நிறுத்தத்தைக் கடைபிடிக்கவே விரும்புகின்றனர் என்பது மக்களுக்கு ஆறுதல் தரும் விடயமாகும். போர்நிறுத்த காலத்தில் இடம்பெறும் கடுமையான வன்முறைச் சம்பவங்கள் எவ்வாறு நிறுத்தப்படலாம் என்பதுபற்றி நோர்வே இம்முறை அதிக கரிசனை காட்டியுள்ளதாகத் தெரிகிறது.

இம்முறை பேச்சுக்களுக்கு வரும் வேளையில் இலங்கையில் சிலர் தீயுடன் விளையாடுகிறார்கள் என்று ஹெல்கிஸன் எச்சரிக்கைத் தொனியுடன் கூறியிருந்தார். மீண்டும் இருதரப்பாரையும் சமாதானப் பேச்சு மேசைக்குக் கொண்டு வருவதையிட்டு நோர்வே நம்பிக்கையுடன் இல்லை என்றும் விடார் ஹெல்கிஸன் சலித்திருந்தார்.

போர்நிறுத்த உடன்பாட்டை இருதரப்பாரும் தொடர்ந்து கடைப்பிடிப்பார்கள் என்பதை மீள உறுதிப்படுத்துவதற்குரிய சில ஒழுங்குகள் பற்றியும், இருதரப்பிலும் உள்ள அதிருப்திகளைக் கேட்டறிந்து நிவாரணிகளைக்கண்டுபிடிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்வது பற்றியும் சிறிது முன்னேற்றம் கண்டுள்ளார் ஹெல்கிஸன்!

எனினும் நீண்ட பல மாதங்களாக முரண்பாட்டுக்களங்களில் நின்றுகொண்டு பேச்சுவார்த்தை மேசைக்கு நெருங்கமுடியாமலிருக்கும் அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் கடைபிடிக்கும் போர்நிறுத்த உடன்பாடும் – தற்பொழுது போலவே – வன்முறைகள் தொடருமானால் – முறிந்துபோய்விடும் என்றும் நோர்வே எச்சரிக்கிறது.

### யாரும் போரைத் தொடக்கமாட்டார்?

தற்போதைக்கு இருதரப்பில் தாமாக முன்வந்து போரைத் தொடக்குவதற்கு எத்தரப்பும் தயாரில்லை என்பது தெரிகிறது. இதற்கு இருதரப்புக்கும் பொதுவானதும், வேறுபட்டதுமான பல காரணிகள் காரணங்களாக இருக்கின்றன. உள்நாட்டின் பொருளாதார, அரசியல் காரணங்களும், சர்வதேச நிலைப்பாடுகளும் இலங்கையில் மீண்டும்



நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டின்போது.....

உள்நாட்டுப்போர் வெடிப்பதை ஏற்றிப்போற்றாது என்பது அனைவருக்கும் வெளித்தெரியும் உண்மைகளாகும்?

### பேச்சுத்தொடங்க ஜனாதிபதி தயாராகமுடியுமா?

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா – தமது அரசாங்கம் ஐக்கியப்பட்ட இலங்கை என்ற கோட்பாட்டுக்குள் நின்று கொண்டு இடைக்காலத் தீர்வுபற்றிப் பேச்சுக்களை ஆரம்பிக்க தயாராக இருக்கிறது – என்று நோர்வே பிரதி வெளிவிகார அமைச்சருடனான சந்திப்பில் தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது.

ஆனால், விடுதலைப்புலிகள் எதிர்பார்க்கும் வரையறைகளுடன் அப்பேச்சுக்கள் அமையுமா என்பதை அந்த அறிக்கை தெளிவுபடுத்தவில்லை, எனினும் ஜனாதிபதி விடுதலைப்புலிகள் எதிர்பார்க்கும் வரையறைகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க ஆட்சிப்பங்காளியான ஜே.வி.பி அனுமதிக்கப்போவதில்லை என்பது அனைவரும் பலகாலமாக அறிந்துவரும் விடயமாகும்.

### ஹக்கீம் பேசியது என்ன? டக்ளஸ் பேசியது என்ன?

இம்முறை விடார் ஹெல்கிஸன் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா ஆகியோரையும் சந்தித்து பேசியபின்னரே, ஜனாதிபதியைச் சந்தித்திருந்தார் என்பதும் கவனிக்கத்தக்க விடயமாகும்.

இச்சந்திப்பின் பின்னர் ரவூப் ஹக்கீம், நிகழ்ச்சி நிரல் தயாரித்து பேச்சுக்களை ஆரம்பிக்க முடியாத கடின சூழ்நிலைக்குள் அரசாங்கமும், புலிகளும் உள்ளனர் என்பதை நோர்வே பிரதிநிதி தனக்கு விளக்கியதாகக் கூறினார். எனினும் பேச்சுக்கள் ஆரம்பிக்கும் ஒரு சூழ்நிலை எழுந்தால், முஸ்லிம் பிரதிநிதித்துவம் பற்றியும், தற்போதைய போர்நிறுத்த சூழலில் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு விடயங்கள் பற்றியும் தான் ஹெல்கிஸனுடன் விரிவாகப் பேசியதாக ஹக்கீம் தெரிவித்தார்.

ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் விடார் ஹெல்கிஸனுடன் என்ன விடயங்கள்ளைப்பற்றி ஆராய்ந்தார் என்பது ஊடகங்களுக்கு உடனே தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் கொள்ளுப்பிட்டி சம்பவம், தமது கட்சி உறுப்பினரான உள்ளுராட்சி தலைவர் ஒருவர் கிழக்கில் கொலை செய்யப்பட்டமை போன்ற விடயங்கள் போர்நிறுத்த உடன்பாட்டை தொடர்வதில் ஒத்துழைக்கவேண்டிய ஓர் உபதரப்பாக உத்தியோகபூர்வமாக இல்லாவிட்டாலும் நடைமுறையில் ஈ.பி.டி.பி காணப்படுகின்றமை, கருணா விவகாரத்தில் அமைச்சர் தேவானந்தா காட்டுகின்ற ஆர்வத்தால் எழுந்துள்ள சூழ்நிலை என்பன தொடர்பாக இச்சந்திப்பில் ஆராயப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. கருணா விவகாரத்தில் அமைச்சர் காட்டும் அதீத ஆர்வம், அமைச்சரை சமாதான நடைமுறையில் ஒரு உபபகுதியாக்கிவிட்டிருக்கிறது.

### பிரதமர் என்ன சொன்னார்?

மேலும் இலங்கைப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடனும் நோர்வே பிரதிநிதி கலந்துரையாடியுள்ளார். இலங்கைப் பிரதமர் அண்மையில் தாம் மேற்கொண்ட இந்திய விஜயத்தில் இந்தியத் தலைவர்களுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் பற்றியும், இலங்கை இந்தியா ஆகிய நாடுகள் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ள பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் தொடர்பான பிந்திய நிலைவரங்கள் பற்றியும் நோர்வே தரப்பிடம் சுருக்கமாக விபரித்திருக்கலாம் என்று கொழும்பில் அவதானிகள் தெரிவித்தனர்.

### முற்றிலும் நம்பிக்கையிழக்கும் நிலையில் நோர்வே!

இலங்கைக்கு வருகின்றபோது சலிப்பையும், நம்பிக்கையீனங்களையும் வெளியிட்டபடியிருந்தார் விடார் ஹெலகிஸன். இங்கு வந்து சேர்ந்தபின்பு கிளிநொச்சியிலும், கொழும்பிலும் அவர் மேற்கொண்டிருந்த சந்திப்புக்களில் வெவ்வேறு தரப்பாரிடம் அவர் பெற்றுக்கொண்ட கருத்துக்கள் மேலும் மேலும் நிலைமை சிக்கலடைந்துள்ளமையை உணர்த்தியிருக்கும். அதனால் அவர் மேலும் அதிக சலிப்பையும், அவநம்பிக்கைகளையும் சுமந்து கொள்ளவேண்டியிருக்கும். நோர்வேயின் உத்தியோகபூர்வ கருத்துக்களும் நம்பிக்கையற்று இருந்தன.

இலங்கைக்கான விஜயத்தை முடித்துக்கொண்டு விடார் ஹெல்கிஸன், லண்டன் சென்று விடுதலைப்புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களைச் சந்திக்கும் சாத்தியம் உள்ளதாக அறியவருகிறது. ஜனாதிபதியின் நிலைப்பாடுகள் தொடர்பான விடுதலைப்புலிகளின் நிலைப்பாடுகள் இச்சந்திப்பையடுத்து வெளிவரலாம்.

(யாழ். ஆத்மா)

---

## வாசகர் இதயம் பேசுகிறது

*திருமலை நதார், ஜின்னாநகர்.*

சூடான தகவல்களையும்
சுகமான ஆக்கங்களையும்
சுடச்சுடச் தரும் சுந்தரியே
நீ என் சுடர் ஒளியாய் திகழ்ந்து
என் உள்ளத்தை ஆட்டி வைத்த
உத்தமியாம். உன்னதமிக்க தோர்
உயர்ந்த பத்திரிகையாய் நீ திகழ
என் வாழ்த்தினை தெரிவிக்கிறேன்.
நீ சுமந்துவரும் அனைத்தும் சூப்பரோ சூப்பர் என்றும்...!

*க.ஷியாமளா (வண்ணம்), குட்டியப்புலம்.*

நான் விரும்பிப் பார்க்கும் பத்திரிகைகளில் நீயும் ஒருத்தி. உன் பத்திரிகையில் கவிதைப்புனல், அரசியல் கட்டுரை என்பன எனக்கு பிடித்த பகுதிகள்.

சுடரே உனது சேவை மென்மேலும் வளர எனது வாழ்த்துக்கள். உனது நிறுவனத்தில் பணிபுரியும் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

நன்றி!

*சி.நித்தியா, கிளிநொச்சி.*

மதிப்புக்குரிய சுடர் ஒளியே உன்னை போல ஒரு பத்திரிகை இதுவரை இல்லை என்று நம்புகிறேன். எனவே நீ உலகெங்கும் சுடராய் எரிந்து ஒளி கொடுப்பாயாக. என் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

*வ.நக்கீரன், கொழும்பு.*



அன்பின் சுடர் ஒளியே,

'உனது படைப்புகள் என் இதயம் கவர்ந்தவை. நீ பிரசுரித்த குழைக் காட்டரானின் கட்டுரை அற்புதம். அதைவாசித்து நான் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். இப்படி எழுதுபவர்கள் இருந்தால் தான் அனைவரும் கொஞ்சமாவது அடக்கி வாசிப்பார்கள். குழைக்காட்டானுக்கு எமது நன்றிகள். தமிழர் சார்பாக தமிழினம் சாகாமல் இருக்க இத்தகைய கட்டுரை பிரசுரித்த உனக்கு நன்றிகள். மற்றும் மென்மேலும் வளர எனது வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

*மு.சிவரூபன், வவுனிக்குளம்.*

தங்கச் சுடர் ஏற்றி உலகெங்கும் சாதனை படைத்து நிற்கும் சுடர் ஒளியே! நீ சுமந்து வரும் ஆக்கங்கள் யாவும் தரம். அதிலும் பித்தன் பதில்கள், கவிதைப்புனல், சினிமா பக்கம் போன்ற ஆக்கங்கள் எனக்கு மிகவும் பிடித்தன. எனவே இன்னும் பல புது புது ஆக்கங்களை உருவாக்கி உலகெங்கும் சுடராய்சுடர்விட்டு எரிய வாழ்த்துக்கள்.

*நிலுக்கா, வத்தளை.*

"சுடர் ஒளி" குடும்பத்தில் நானும் ஒருத்தி. சுடர்ஒளி வார இதழை தவறவிடாமல் வாசிப்பது எனக்கு மிகவும் பிடித்தமான ஒன்றாகும். ஏனெனில் இதில் வரும் ஆக்கங்கள் அனைத்தும் தரமானவையே. என்னை மிகவும் கவர்ந்தவைகள் பித்தன் பதில், கவிதைப் புனல், சிறுகதை, மசாலமிக்ஸ்.

# பேரினவாதிகளின் பிரித்தாளும் தந்திரம்!

கோட்பாட்டினைச் சிதைத்து, விடுதலைப்புலிகளை அரசியல் இராணுவ ரீதியாகத் தோற்கடித்து விடலாமெனசில வட்டாரங்கள் எண்ணுகின்றன போல் தெரிகிறது.

ஜே.வி.பி. மற்றும் அதன் மறுபக்கமாகிய ஜாதிக ஹெல உறுமய போன்ற இனவாத, அதிதீவிரவாத சக்திகள் தான் தோன்றித்தனமான எதிர்ப்புகளைக் கிளப்பி வருகின்ற போதிலும், தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றினைக் காண்பதற்கு அரசாங்கமும் - விடுதலைப்புலிகளும், விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை (ISGA) ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தைகள் நடத்தியாக வேண்டும்.

ஈழப்போருக்கு இட்டுச்செல்லும் பட்சத்தில் விளைவுகள் நினைத்துப்பார்க்க முடியாதவையாக இருக்கும். இதனை அரசாங்கமும், ஏனைய சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்வது காலத்தின் கட்டாயமாகும். இன்னொரு யுத்தத்தினை நாடு தாங்காது என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டியது ஜனாதிபதியின் பொறுப்பாகும்.

### ஜே.வி.பியின் பிரசாரம்

கருணா குழுவுக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் வடக்கையும், கிழக்கையும் பிரித்து தமிழர் தாயகக்

காங்கிரஸ் அல்லது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியையாவது- இணைத்து பெரும்பான்மையினை எட்டுவதற்கு அரசாங்கம் பகீரதப்பிரயத்தனம் செய்து வருகிறது.

### தேர்தல் விஞ்ஞாபனத்தில் தாயகக் கோட்பாடு மழுங்கடிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சென்ற பொதுத் தேர்தல் விஞ்ஞாபனம் "றட்ட பொட்ட" (நாடு முன்னோக்கி) என மகுடமிட்டு வெளியிடப்பட்டிருந்தது. ஆனால் அதனை "பக்ஷ பொட்ட" (கட்சி முன்னோக்கி) என வாசிக்கலாம். அவ்விஞ்ஞாபனத்தில் குறிப்பாக தமிழர் தாயகக் கோட்பாடு மழுங்கடிக்கப்பட்டிருந்ததுடன், இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் காணப்படவில்லை. ஆக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகிய இரு பங்காளிக் கட்சிகளும் தமது அரசியல் இலாபம் கருதி, சிங்கள வாக்குவங்கியைத் தமதாக்கிக் கொள்ளும் முகமாகவே விஞ்ஞாபனத்தைத் தயாரித்தனர் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

குறிப்பிட்டார். எனவே தான் இலங்கை உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகிய நிறுவனங்களிடம் தொடர்ச்சியாகக் கையேந்திக் கட்டுண்டு இருக்க வேண்டிய நிலை எஞ்சியுள்ளது.

### நாட்டின் இறைமையின் நிலை

இவ்வாறாக நாட்டின் இறைமையைக் கைபறிய விட்டுக் கொண்டு தேசிய இனப்பிரச்சினையை அணுகும் போது மட்டும், சமஷ்டி முறையிலான தீர்வு கூட நாட்டைக் கூறுபோட்டுவிடும், நாட்டின் இறைமைக்குப் பங்கம் ஏற்பட்டுவிடும் என பேரினவாதிகள் கூக்குரலிடுவது வேடிக்கையானதாகும்.

இன்னும் சொன்னால் பேரினவாதிகள் தான் பரிவினைவாதிகள். அவர்கள்நாட்டின் ஐக்கியத்துக்கு அறிவிலத்தனமாக ஆப்புவைத்து வந்துள்ள வர்கள் ஆவர்.

ஒருவேளை இதனை நன்கு புரிந்து கொண்ட நிலையில் தான் உலக வங்கியின் வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஹரல்ட் தன்னாட்சி அதிகார சபையை நிறுவனமயப்படுத்த வேண்டும் எனக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உலக வங்கியின் பொருளாதாரக் கொள்கைகள் இலங்கை போன்ற மூன்றாவது உலக நாடுகளுக்கு ஒட்டுமொத்தமாகப் பாதகமானவை என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. ஆனால், அதன் பிரதிநிதிகள் அரசியல் வரலாற்றுப் போக்குகளையும், சமகால யதார்த்தங்களையும் புரிந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் மக்கள் நீண்ட நெடுங்காலமாக எல்லா அரசாங்கங்களாலும் ஆளாக்கப்பட்டுவந்த அவலங்கள், அழிப்புக்கள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா சமீபத்தில் வருத்தம் தெரிவித்திருந்தார். 1983 இல் இடம் பெற்ற கறுப்பு ஜூலை இனக்கலவரத்துக்காக அரசாங்கத்தின் சார்பில், பாதிக்கப்பட்ட சிலருக்கு அண்மையில் நஷ்டஈடு வழங்கும் வைபவத்தில் ஜனாதிபதி


விமல் வீரவன்ஸ

இதனைக் கூறினார்.

அந்த இனக்கலவரம் ஜே.ஆர்.ஜயவர்த்தன அரசாங்கத்தின் காலகட்டத்தில் அவ் அரசாங்கத்தின் தூண்டுதலின் பேரில் நடத்தப்பட்டதாயினும், அதற்கு முந்திய காலத்தில் பண்டாரநாயக்க ஆட்சிக்காலங்களில் தமிழர் மீது ஏவப்பட்ட இனக்கலவரங்களும், இடுக்கண்களும் மறைக்க முடியாதவை ஆகும்.

இத்தனைக்குப் பின்னரும், இன்று கூட ஐக்கிய இலங்கைக்குள்ளேயே இனப்பிரச்சினைக்கான தீர்வு தமிழர் தரப்பில் கோரப்படுகிறது. இதனைத் துணிச்சலாகவும், நேர்மையாகவும், கபட மற்றும் அணுக வேண்டிய பொறுப்பு சந்திரிகா அரசாங்கத்தின் தோள் மேல் உள்ளது. இனிமேலும் அரசியல் சதுரங்க விளையாட்டு எடுபடப் போவதில்லை

**வ. திருநாவுக்கரசு**

இதனையே நாட்டு நலனில் அக்கறையுள்ள மக்கட்பிரிவினரோ, வர்த்தக/வணிக / கைத்தொழில் சங்கங்களின் சம்மேளனங்களோ, சர்வதேச சமூகமோ தொடர்ச்சியாக அழுத்தி வருகின்றன.

### பேச்சுவார்த்தை எதிர் கருணா விவகாரம்

அண்மையில் பிரிட்டன் சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன்


சந்திரிகா

கதிர்காமர், விரைவில் இலங்கை அரசாங்கத்துக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் ஒப்பனைக்காக, அரசாங்கத்துக்கும் கருணா குழுவுக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்றும் பிரிட்டிஷ் அமைச்சர்கள் ஜக்ஸ்ட்றோ, மைக் ஒபிறியன் போன்ற உயர்மட்டத்தினரிடம் தெரியப்படுத்தி இருந்தார்.

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டுமென விடுதலைப்புலிகள் தொடர்ச்சியாக வலியுறுத்திக் கொண்டிருக்கையில், கருணா விவகாரம் தோற்றம் பெற்றது. அதனையடுத்து பல்வேறு அசம்பாவிதங்களும், கொலைச் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன. அரசதரப்பினரிடமிருந்து கருணா தரப்புக்கு ஆதரவு இருப்பதாக அறியக்கிடக்கிறது. உண்மையில் பேரினவாத இலங்கை அரசாங்கங்கள் பிரிட்டனின் பிரித்தாளும் தந்திரோபாயத்தினைக் கையாண்டுவந்ததன் தொடர்ச்சியாகவே இன்றைய சந்திரிகா அரசாங்கமும் அவ்வழி செல்வது பகிரங்க இரகசியமாகும்.

அதேவேளை சிலர் குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பதை ஒரு கலையாகக் கொண்டு செயற்படுகின்றனர். இது மிக ஆபத்தான போக்கு என்பதை பெரிதும் விளக்கத் தேவைஇல்லை.

இவ்வாறான போக்குகள் யாவும் ஒட்டுமொத்தமாக 4 ஆவது

அதாவது தன்னாட்சி அதிகாரசபையை அடிப்படையாகவைத்து பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் என ஜனாதிபதி செயலகம் அண்மையில் அறிக்கை ஒன்றினை விடுத்த கையோடு, ஜே.வி.பியினர் அதற்கெதிராகப் பீரங்கிப்பிரசாரத்தில் இறங்கினர். சுவரொட்டிகள் பட்டிதொட்டி எங்கும் காணப்பட்டன.

அச்சுவரொட்டிகளில் விடுதலைப்புலிகளை "வன்னிக் கொட்டி" (வன்னிப் புலிகள்) என அழைத்துள்ளனர். வடக்கு வேறு கிழக்கு வேறு என அர்த்தம் கற்பிப்பதே இதன் நோக்கமாகும். இதன் மூலம் ஜே.வி.பியினர் கருணா பக்கம் சார்ந்திருப்பது தெளிவாகத் தெரிகிறது.

சந்திரிகா அரசாங்கத்தில் அங்கம் வகித்துக் கொண்டு அதன் பிரதான பங்காளியாகிய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை மட்டந்தட்டி முந்த வேண்டும் எனும் ஜே.வி.பியின் உள்நோக்கம் தெரிந்ததே. அதேவேளை ஜனாதிபதி செயலகமானது பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுகிறதா என்னும் சந்தேகம் மக்கள் மனதில் எழுந்துள்ளது.

### அரசாங்கத்தின் திண்டாட்டம்

பேரினவாத ஆளும் வர்க்கத்தினர் குறிப்பாக தமிழ் தேசிய இனப்பிரச்சினையைப் பொறுத்தவரையில் நாட்டு நலன் துறந்து தத்தம் கட்சி அரசியல் இலாபம் கருதியே செயற்பட்டு வந்துள்ளனர். அதன் ஓர் அங்கமாகவே முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் நடத்திவந்த சமாதான முயற்சியை குழப்பியடிக்க வேண்டும் என்று எண்ணம் கொண்டே ஜனாதிபதி சந்திரிகா காய்கள் நகர்த்தத் தலைப்பட்டார்.

அவ்வாறாகவே விடுதலைப்புலிகள் 2003 ஒக்டோபர் 31 இல் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளைச் சமர்ப்பித்த கையோடு பாதுகாப்பு உள்ளிட்ட 3 அமைச்சுக்களை ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்திடமிருந்து ஜனாதிபதி கையேற்றார்; விரைந்து ஜே.வி.பியுடனான கூட்டமைப்பினை உருவாக்கினார். திடீரென நாடாளுமன்றத்தையும் கலைத்தார். ரணில் அரசாங்கம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்தால் ஒழிய நாடாளுமன்றத்தைக் கலைக்கப் போவதில்லை என சபாநாயகருக்கு எழுத்து மூலம் வழங்கிய வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. 2004 ஏப்ரல் 2 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலையடுத்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் பதவிக்கு வந்துள்ள போதும், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாமல் திண்டாடுகிறது. எப்படியாவது எந்த ஒரு சிறுபான்மைக் கட்சியையாவது - உதாரணமாக இலங்கை தொழிலாளர்

### மீண்டும் யுத்தமா என மக்கள் அச்சம்

இன்று, மீண்டும் யுத்தம் வெடித்து விடுமோ என்னும் அச்சம் மக்கள் மனதில் குடிகொண்டுள்ளது. விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிக்க வேண்டும் என்னும் நிலைப்பாட்டினை வலியுறுத்தி ஜே.வி.பியின் மூத்த தலைவர் சோமவன்ச அமரசிங்க 2001 டிசெம்பர் பொதுத் தேர்தல் பிரசாரத்தின் போது அறைகூவல் விடுத்திருந்தார். அது போலவே இன்றைய பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்ரமநாயக்கவும் அன்று சூழுரைத்திருந்தார், அவர் அண்மையில் படைத்தளபதிகளுடன் மேற்கொண்ட யாழ். மாவட்ட விஜயமானது உற்று நோக்கப்பட வேண்டியதொன்றாகும். படைத்தளபதிகள் தாம் யுத்தமொன்றுக்கு எப்போதும் தயார் என்று குறிப்பிட்டுள்ளனர். அதற்கு உற்சாகமளிக்கும் விதத்திலேயே விக்ரமநாயக்க ஆற்றிய உரைகள் அமைந்திருந்தன.

இச்சந்தர்ப்பத்தில் கருணா விவகாரத்தைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகளை அரசியல், இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத்தி தமது காரியத்தை நிறைவேற்றிவிடலாமென அரசாங்கம் எண்ணுவது போல் தெரிகிறது. தன்னாட்சி அகதிகாரசபையை எதிர்த்தாலும் தாம் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்குத் தடையாக இருக்கப் போவதில்லை என ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் வீரவன்ச கூறியிருப்பது கேலிக்கூத்தானதாகும்.

### உலக வங்கி இலங்கையின் பின்னடைவு பற்றி

நிற்க, உலக வங்கி ஞாபகார்த்த வைபவத்தில் ஜனாதிபதி சந்திரிகா முன்னிலையில் உரையாற்றியவராகிய தென்னாசிய உபதலைவர் பிறவுல் பட்டேல் கூறிவைத்ததைப் பார்ப்போம். அதாவது 1954 இல் லக்சபானா மின்சார அபிவிருத்தித் திட்டத்துக்கு உலகவங்கி கடனுதவி வழங்கிய வேளை, பல வறிய நாடுகள் மத்தியில் இலங்கையும் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் ஒன்றாகத் திகழும் என எண்ணப்பட்டது. ஆனால், உள்நாட்டுப்பிரச்சினைகள், கொந்தளிப்புகள் காரணமாக அது கைகூடவில்லை எனபட்டேல்


## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ.45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ.23,520.00 |
| C.M.cl | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. (250-300 Col. Cms) | ரூ. 70.00 | ரூ. 110.00 |

# அப்பாவை தேடி....

ஞாயிறு என்றால் விடுமுறை தினம் மட்டுமல்ல... மனதுக்கும், மனதிலுள்ள பிரச்சினைகளுக்கும் கொஞ்சம் ரிலாக்ஸ் தரும் தினம் என்பதையும் ரகுநாதன் நிரூபித்துக் கொண்டிருந்தார்.

காலையில் வாங்கி வைத்திருந்த கால் போத்தல் 'அராக்' இப்போ அரைக்கால் போத்தலாகி விட்டிருக்க, மீண்டும் ஒரு 'பெக்'கை வாயில் ஊற்றிவிட்டுக் கொள்ள.... உடல் எரிந்து மேலும் உஷ்ணமாகியது.

அப்படியே மெல்ல சமையல் கட்டுக்குள் நுழைந்தார். அவரின் மனைவி மாலா திருவலையில் குந்திக் கொண்டு தேங்காய் துருவிக் கொண்டிருந்தாள்.

அவரின் விழிகள் ஒருகணம் அப்படியே விழுங்கி விடுவதைப் போல் பார்த்து நிலைகுத்தி நின்றன.

இந்த முப்பத்தாறு வயதிலும் எப்படி இவளால் எடை பெருக்காமல், இடை சிறுத்து..., மேலுடல் அளவாய் பெருத்து...!



மெல்ல பெருமூச்சுடன்பின்னால் பூனைபோல் மெல்லப் பதுங்கி தன் கைகளுக்குள் அவளின் இடையை சிறைப்படுத்தினார்.

''ஏ...ஏ.... என்ன இது? உங்களுக்கு கால நேரம் கிடையாதா....?'' வெலவெலத்து திமிறினாள்.

''எடியேய்... இதுக்கெல்லாம் காலம், நேரம் பார்க்க முடியுமோ...''

''முதல்ல விடுங்கோ! பதினெட்டு வயசில மூத்தவனை வைச்சுக் கொண்டு... சேட்டையைப் பாருங்கோ....''

''நம்பமுடியலைடி. மூன்று பிள்ளைகளுக்கு தாய் எண்டு நம்ப முடியலைடி... எப்படிடி...?''

''ம்... நம்ப முடியலையா? கண்ணைக் கசக்கிப் போட்டு விறாந்தையில போய்ப் பாருங்கோ. புத்தகம் படிச்சுக் கொண்டிருக்கிறான்....''

''அறைஞ்சு விட்டேனா.. நம்பமுடியலைன்னுதான் சொன்னேன். அவங்க பிள்ளைகள் இல்லையெண்டு சொன்னேனா....?''

''இப்படியே என்னைப் பற்றி புளுகிக் கொண்டே இருங்கோ. இண்டைக்கு லீவில பிள்ளைகள் வீட்டில நிற்கிறாங்க எண்ட நினைவில்லாமல் திரியிறீங்க...''

''ச...... ரீ.....ரி...'' என்று சொல்லிவிட்டு எழும்புவதற்குள் அவர்களுடைய இரண்டாவது மகன் திடீரென்று உள்ளே நுழைந்தான்.

''அப்பா...! நாளைக்கே சைக்கிள் வாங்கித்தந்திடோனும். இனி ஏமாத்திற பேச்செல்லாம் வைச்சுக் கொள்ள வேண்டாம். நாளைக்கு ஸ்கூலுக்கு சைக்கிளில்தான் வருவேன் எண்டுஎன் பிரண்ஸிடம் சொல்லிட்டன். நாளைக்கு நான் சைக்கிளில் போகாட்டி என் மானம் போயிடும்....'' வந்தவன் அப்படியே வார்த்தைகளை போட்டு குவிக்க.... ஒரு மாதிரி சுதாகரித்துக் கொண்டார் ரகுநாதன்.

''என்ர குஞ்சல்லோ... கொஞ்சம் பொறுத்தால் அப்பாவுக்கு உதவியாக இருக்குமெல்லோ... அவசரக்கடன் இருந்திச்சிடா, போனஸ் பணத்தை எடுத்து கடனைக்கட்டிட்டேன்...'' என்று அவர் சொல்ல... மாலா அவரை பரிதாபத்துடன் பார்த்தாள்.

''அதெல்லாம்சரிப்பட்டுவராது.நாளைக்கு சைக்கிள் வேணும். சைக்கிள் இல்லாமல் ஸ்கூலுக்கு போகமாட்டன். சொல்லிட்டன்...'' இரண்டாமவன் சொல்லிவிட்டு வேகமாக வெளியேறியதை அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தார் ரகுநாதன்.

''பாத்தியா மாலா... கடன் காரனை விட மோசமாக பேசிவிட்டு போறான். போன வருஷம் பரீட்சையில் மாக்ஸ் குறைவாக எடுத்ததால், இந்த வருஷம் நல்ல மாக்ஸ் எடுத்தால் புதுச் சைக்கிள் வாங்கித்தர்றன் எண்டு சொல்லியிருந்தேன். சைக்கிளுக்காக விழுந்து விழுந்து படிச்சான். நல்ல மாக்ஸும் எடுத்தான். சந்தோஷம்தான். ஆனா இப்படி நெரிக்கிறானே...!'' அங்கலாய்த்தார்.

''இதெல்லாம் நீங்க குடுத்த இடம்தான். அளவுக்கு மிஞ்சி செல்லம் கொடுத்து வளர்க்காதீங்கன்னு நான் சொன்னால் கேட்டால் தானே! திருத்திற என்னையும் தடுத்துப் போட்டு இப்போ விழிக்கிறீங்க...''

''என்ன செய்யிறது? என் அப்பா கொடுக்காத சுதந்திரத்தையும், செல்லத்தையும் என் பிள்ளைகளுக்கு கொடுத்து வளர்க்க வேண்டும் எண்டு நினைச்சது இப்ப தப்பாப் போச்சு. இப்போவெல்லாம் பிள்ளைகளுக்கு லஞ்சம் கொடுத்தெல்லோ படிப்பிக்க வேண்டிகிடக்கு...''

வெளியில் யாரோ பேசி சத்தம் கேட்க, வாசலுக்கு விரைந்தார்.

''ஆ.... ரகுவே? நீ இங்கேயே நீக்கிறே...? நல்லதாய் போச்சு...'' என்றபடி உள்ளே வந்தார் அவரின் நண்பர் குமாரசிங்கம்.

''என்ன விஷயம்? திடீரென்று பீடிகை எல்லாம் போடுறே... முதல்ல உள்ளே வந்து உட்காரு...'' என்று விறாந்தை நாற்காலியில் உட்காரவைத்தார் ரகுநாதன்.

''மூத்தவன் நிற்கிறானே...?'' என்றார் குமாரசிங்கம்.

''ஓமடா உள்ளேதான் நிற்கிறான். என்ன? ஏதேனும் பிரச்சினையே...?''

''பெரிசா ஒண்டுமில்லை. ஆனா அன்றைக்கு ஸ்பிறிங்கை உடைச்சிட்டானே என்று மெல்லமாய் பேசிப்போட்டன். அதுக்கு எல்லாத்தையும் தூக்கி எறிஞ்சு போட்டு, என்னையும் ஏசிப் போட்டு, இனி மேல் வேலைக்கு வரமாட்டேன் என்று சொல்லிப்போட்டு வந்திட்டான். சரி ஏதோ கோபத்தில பேசிட்டான் வருவான் என்று இருந்தேன். ஆனா இரண்டு நாளாக வரவில்லை. என்னட்டை வேலைக்கு வாரதுக்கெண்டு ஆட்கள் கியூவில நிக்கிறாங்க. ஆனால் உன் பிள்ளையாச்சே அவன் வேலை செய்தால் உனக்கும் உதவியா இருக்குமே என்பதற்காகத்தான் வந்திருக்கேன்...''

குமாரசிங்கம் சொல்ல ரகுநாதனுக்கு மண்டை விறைத்தது. பொறுப்பில்லாமல் படிப்பையும் உதறித்தள்ளிவிட்டு, ஊதாரித்தனமாக ஊர் சுற்றித்திரிந்து கொண்டிருந்த மூத்தவனை, ஒரு வழியாக நண்பனிடம் மெக்கானிக் படிக்க அவரிடம் வேலைக்கு சேர்த்து விட்டிருந்தார். இப்போ.....?

''கணேசா....! கணேசா'' என்று கூப்பிட்டார்

கணேசன் சினிமா இதழுடன் வெளியே வந்தான். குமாரசிங்கத்தைப் பார்த்ததும் ஊகித்துக் கொண்டு விட்டான்.

''இப்போ எந்த மூஞ்சியை வைச்சுக் கொண்டு இங்க வந்தனீங்க? அப்பாவிடம் கோள்மூட்டி பிரச்சினையை பெரிதாக்கத்தானே?'' என்றான் கணேசன் அலட்சியமாக.

''டேய் என்னடா பேசுறாய்? எனக்கு முன்னாலேயே மரியாதைக் குறைவா அவருடன் பேசுறனி... எப்படி வேலை செய்யிற போது மரியாதை கொடுத்து அவருடன் பேசுவாய்...?'' என்று ரகுநாதன் சீற... கணேசன் ஆவேசமாய் குறுக்கிட்டான்.

''அப்பா என்கிறதுக்காக உங்களுக்கு மரியாதை கொடுக்கிறது எண்டு போதாமல், உங்க பிரெண்டுக்கு வேறு கொடுக்கணுமா...? மரியாதை கொடுத்துத்தான் மரியாதை வாங்க வேணும் எண்டு அவருக்கு தெரியாதோ..?''

ரகுநாதனின் உடல் கோபத்தால் நடுங்க, அவனை நோக்கி கையை உயர்த்தி ''என்னடா சொன்னாய்?...'' என்று கத்த சிம்பு பாணியில் கைவிரலை மடக்கிக் காட்டி சொன்னான் ''கெட்டுடும்... மரியாதை கெட்டுடும்! இந்த நாற்பது வயசில சமையல் கட்டுக்குள்ளே இருந்து கூத்தடிக்கிற உங்களுக்கு எங்கள கண்டிக்கிற உரிமை கிடையாது. உங்கட, கை மட்டும் விளையாட, என் கை சும்மா பூப்பறிக்கும் எண்டு மட்டும் நினைக்காதீங்க... சொல்லிட்டன்...''

என்றபடி கையிலிருந்த புத்தகத்தை ஆவேசமாய் தூக்கி எறிந்தான். சைக்கிளை வீதியில் இறக்கி மிதித்தபடியே வேகமாய் மறைய... ரகுநாதன் அதிர்ச்சியுடன் அப்படியே உறைந்து போய் நின்றார்.

அவரின் கண்கள் ஆத்திரத்திலும், அவமானத்திலும், கண்ணீரை வடியவிட... குமாரசிங்கம் கவலையோடு சொன்னார்.

''ரகு... என்ன சொல்றதெண்டு தெரியல. நான் வந்தது பிழையாக போட்டுது. நாளைக்கு வாறன்..'' அவர் மௌனமாக வெளியேறினார்.

மாலா பதட்டத்துடனும், ஆத்திரத்துடனும் வெளியே வந்தாள்.

''என்னங்கஇப்படி சொல்லிட்டுபோறான். அவனுக்கு நீங்க செல்லம் குடுத்து வளர்த்ததற்கு இந்த தண்டனையை குடுத்திட்டு போறானே... சொல்லச் சொல்ல கேட்டீங்களே....'', அழுதாள். அவர் தன் கண்களை ஒருவித வேகத்துடன் துடைத்துவிட்டபடி சொன்னார். ''மாலா...! இது அவன் எனக்கு குடுத்த தண்டனை இல்லை. என்னையே நம்பி, என்னை படிக்கவைத்து ஆளாகி விட்ட அப்பாவுக்கு நான் செய்த துரோகத்துக்குக் கிடைத்த தண்டனை!'', அவரின் இதயம் கலங்கி துடித்தது.

பின் சொன்னார். ''ஒருபைக்குள்ளே ஒரு சாரத்தையும், டவலையும் எடுத்து வை...!''

அவளுக்கு புரிந்தது. அவள் உள்ளே சென்று பையை எடுத்து வந்தாள்.

''சாப்பிட்டுப் போங்களேன்....'', என்றாள்.

''இல்லை. சாப்பிட நேரமில்லை. இது வரைகாலமும் அவரின் அன்பை தொலைத்து விட்டு சும்மா இருந்து விட்டேன். இனி எனக்கு நேரமில்லை....'', வீதியில் இறங்கினார்.

அரைநாள் பயணத்தை எண்ணியபடி பஸ் ஏறினார். பழைய நினைவுகள் அவர் மனதைக் குத்தின.

ரகுநாதனின் அப்பா மிகவும் கண்டிப்பான, கண்ணியமான விவசாயி! மூன்று அக்காமார்களுக்கு ஒரேயொரு தம்பியாக பிறந்திருந்தாலும், மகனை படிப்பிக்க வேண்டும் என்ற லட்சியத்தில் படிக்க வைத்தார். படிக்கும் போது மாலா அறிமுகமான போது தான் விதி விளையாடியது. படிப்போடு சேர்த்து காதலையும் படித்துக் கொண்டார். அவர்களின் காதல், ரகுநாதனின் வீட்டில் பூகம்பத்தை வெடிக்க வைத்தது.

'வீட்டில் மூன்று குமருகள் கரையேறாமல் தவித்துக் கொண்டிருக்கும் போது உனக்கு காதல் கேட்குதோ? உன்னை மயக்கிய அந்த சிங்காரி நல்லாவே இருக்கமாட்டாள். அவளையும், அவளுடைய காதலையும் தூக்கி எறிஞ்சு போட்டு வீட்டுக்குள்ளே வாறதாயிருந்தால் வா! இல்லைன்னா அப்படியே அவளுடனேயே தொலைஞ்சு போ...! என்று அப்பா வெடிக்க... தன்மானமும், அவமானமும் அவரைத்தாக்க வீட்டைவிட்டே சென்று விட்டார். அதன் பின்பு அப்பா தன் சொத்துக்களை விற்று மூத்த இரண்டு பெண்களுக்கு திருமணம் செய்து வைத்தார்.

ரகுநாதன் பின் வேலை செய்து பணம் சேர்த்து கடைசி அக்காவின் திருமணத்துக்கு அக்காவின் பெயருக்கே பணத்தை அனுப்பி விட்டார்.

சுயகௌரவம் அப்பாவை பார்க்க விடாமல் தடுத்து விட... இப்போ பத்தொன்பது வருடங்களாக அப்பாவின் கண்முன்னாலேயே விழிக்காமல் இருந்து விட்டார். மூன்று வருடங்களின் முன் திடீரென்று அப்பாவின் கடிதம் வந்தது. பிடிவாதக்காரரான அப்பாவின் கடிதத்தில் மகனைப் பார்க்க வேண்டும் என்ற பெத்தபாசம் பிடிவாதத்தை வென்றது. ஆனால், ரகுநாதனை மட்டும் வந்து தன்னைப் பார்க்கும்படி எழுதியிருந்ததுதான் அவரை போய்ப் பாக்காமல் தடுத்து விட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க.....)

# இருதய நோய் ஏற்படுவதற்கான காரணிகள் என்ன?

**கேள்வி:— பெண் வயது 28. திருமணமாகி இரண்டு குழந்தைகளுக்குத் தாயாக உள்ளேன். கடந்த சில மாதங்களாக குடும்ப உறவு நடந்த பின் இரத்தக்கசிவு கொஞ்சம் இருக்கின்றது. மற்ற வேளைகளில் எதுவும் இல்லை. இது புற்றுநோயின் அறிகுறியா?**

பதில்: நூற்றுக்கு தொண்ணூறு வீதம், உங்கள் நோயின் அறிகுறியை புற்றுநோய் அதாவது கருப்பை வாசல் புற்றுநோயின் (Cevical Cancer) ஆரம்ப குறி என்றே சந்தேக கண்கொண்டு மருத்துவர் பார்ப்பார். என்றாலும் இவ்வாறு நேருவதற்கு — மற்றும் சில காரணங்கள் உண்டு. கருப்பை வாசல் சுழற்சி (Cervicitis), கருப்பை வாசல் புண் — Cervical Erosion என்பவையும், Contact Bleeding என்ற நீங்கள் கூறிய தொட்டவுடன் இரத்தக்கசிவு ஏற்படும் நிலைக்கு காரணங்களாகும். தாம்பத்திய உறவின் போது — தாம்பத்திய உறவுக்கு நீங்கள் தயாராக இல்லாதபோது நடக்கும் உடலுறவின் போது — காய்ந்த யோணிப்பாதையில் ஏற்படும் உராய்வுகளினால் கூட இரத்தக்கசிவு ஏற்படலாம். நீங்கள் உடனடியாக ஒரு பெண்கள் நோய் வைத்திய நிபுணர் — Gynaecologist — ஐ சந்தித்து ஆலோசனை பெற வேண்டும். அம் மருத்துவர் உங்களை பரிசோதனை செய்து — இது சாதாரண நோயா, அல்லது புற்றுநோய் சம்பந்தப்பட்டதா என்பதற்குரிய விசேட பரிசோதனைகளை செய்வார்.

இந்தப் பரிசோதனைகளில் முக்கியமானது PAP SMEAR எனப்படும் பரிசோதனை. இப்பரிசோதனையின் போது கருப்பை வாசலை சுரண்டி அதிலிருந்து சில கலங்களை (Cells) எடுத்து நுணுக்குக் காட்டியில் சோதித்து கருப்பை வாசல் புற்றுநோய் இருப்பதை அறிந்து கொள்ளலாம். 40 வயதின் பின் பெண்கள் செய்ய வேண்டிய மருத்துவ பரிசோதனைகளில் முக்கியமான ஒன்று இந்த PAP பரிசோதனை. கொழும்பில் அநேகமான மருத்துவ நிலையங்களில் — ஒரு பத்து நிமிட நேரத்தில் — இரண்டாயிரம் ரூபா செலவினுள் உடனடியாக, வெளிநோயாளர் பிரிவில் (OPD)ல் செய்யக் கூடிய இலகுவான பரிசோதனை. மேலும் கருப்பை வாசல் சுழற்சி, புண் என்பவற்றிற்கு இலகுவான சிகிச்சை முறைகள் உண்டு. எனவே காலம் தாழ்த்தாமல் உடனடியாக ஒரு மருத்துவ நிபுணரின் சேவையை நாடுங்கள்.

**கேள்வி:— ஆண் வயது 50. கொஞ்சம் பருமன் உண்டு. ஒரு நாளைக்கு மூன்று தடவை சிகரெட் புகைப்பேன். ஓய்வூதியம் பெற்று வீட்டில் சும்மா இருக்கின்றேன். எனக்கு இருதய நோய் வரக்கூடிய சாத்தியம் உண்டா?**

பதில்:— இருதய நோய் ஒருவருக்கு ஏற்படுமா, இல்லையா என்று சாத்திரம் பார்த்து சொல்லக்கூடிய வைத்தியர் ஒருவருமில்லை. ஆனால், ஒருத்தருக்கு இருதய நோய் ஏற்படுவதற்கு அபாய சின்னங்கள் பற்றி அமெரிக்க இருதய ஸ்தாபனம் (American Heart Association) ஒரு லிஸ்ட்டைத் தந்துள்ளது. அந்த வரிப்படி.

1. ஆண்களுக்கு 40 வயதிற்கு மேலும், பெண்களுக்கு 45 வயதிற்கு மேலும் இருதய நோய் ஏற்பட சாத்தியம் உண்டு.

2. கொலஸ்திரோல் அதிகமாக இரத்தத்தில் உள்ளவர்கள்.

3. புகைப்பிடிக்கும் பழக்கம்

4. உடல் உழைப்பு இன்றி சுறு சுறுப்பில்லாத வாழ்க்கை முறை.

5. பரம்பரையாக இருதய நோயுள்ள குடும்ப அங்கத்தினர்.

6. இரத்த அழுத்தம் உள்ளவர்கள்

7. அளவுக்கு அதிகமான எடை உள்ளவர்கள்.

8. நீரிழிவு நோய்க்காளானவர்கள்

9. அதிக மன உளைச்சல்



மன இறுக்கம் கொண்டவர்கள்.

இந்தவகை மனிதர்களுக்கு இதய நோய் ஏற்படக் கூடிய அபாயம் அதிகளவில் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. எனவே நீங்கள் இந்த லிஸ்டில் எந்த இடத்தில் உள்ளீர்கள் என்பதை நீங்களே படித்து அறிந்து கொள்ளுங்கள்.

**கேள்வி:— பெண் வயது 20 எனது முழங்கால்கள் இரண்டின் கீழும் உள்ள கால்களில், சருமம் காய்ந்து சொரசொரப்பாக இருக்கிறது. டாக்டரிடம் காட்டினால் எண்ணெய்ச் சத்து குறைவு என்று விட்டமின் மாத்திரைகள் தந்தார். இன்னும் சுகமாகவில்லை பரிகாரம் கூறவும்.**

பதில்: உங்களுக்கு ஏற்பட்டுள்ள Dry Skin என்ற மருத்துவநிலை உடலில் கொழுப்பு சத்து குறையும் போது, விட்டமின் A, விட்டமின் B போன்ற உயிர்ச்சத்துக் குறைபாடு ஏற்படும் பொழுது தோன்றலாம். இது தவிர தைராய்ட் ஹார்மோன்கள் சுரப்பு குறையும் போதும் ஊட்டச்சத்து குறையும் போதும் இது ஏற்படலாம். உங்கள் டாக்டர் உங்கள் நோய் பற்றி சரியாகத்தான் நிதானித்துள்ளார். நீங்கள் உடல் பருத்தவராக இல்லாவிடில் உணவில் பால், பட்டர் சேர்த்து வாருங்கள். வைட்டமின் A, D மாத்திரைகளை உபயோகியுங்கள். குளிப்பதற்கு Baby Soap உபயோகியுங்கள். உடம்பு தேய்த்துக் குளிப்பது என்று — பிரஷ், தும்பு உபயோகித்து சருமத்தைத் தேய்க்காதீர்கள். காலுக்கு Olive Oil, நல் லெண்ணை தடவுங்கள். Paraffin Oil என்ற எண்ணெய் கூடிய பலனைத்தரும். மலிவானதும் கூட. கால் உரோமங்களை சவரம் பண்ணும் பழக்கம் இருந்தால், அதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

**கேள்வி:— பெண். வயது 26. ஒரு குழந்தையுள்ளது. குடும்ப திட்டத்திற்காக — கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் DEPOPROVERA ஊசி மருந்து உபயோகித்தேன். இப்பொழுது கடந்த சில நாட்களாக — தினமும் மாத விலக்கு சொட்டு சொட்டாய் படுகின்றது. இது நோயா?**

பதில்:— Depo Provera என்ற ஊசி மருந்து குடும்ப திட்டத்திற்காக மூன்று மாதத்திற்கு ஒரு தடவை உபயோகிக்கப்படும் மருந்தாகும். இதனை உபயோகிப்பதால் குறைந்தது மூன்று மாதம் கருத்தரிக்க முடியாது. ஒரு சிலருக்கு இந்த மருந்தை உபயோகிக்கும் போது ஆரம்ப காலத்தில் — சொட்டு சொட்டாக தினமும் இரத்தப் பெருக்கு உண்டாவது காணப்படுகிறது. சரியான அளவில் இந்த ஊசி மருந்து ஏற்றப்படாவிடிலும், ஏற்றப்பட்ட மருந்தின் வீரியம் குறைந்திருந்தாலும், சிலரது உடல் வாகையைப் பொறுத்து ஏற்றப்பட்ட மருந்து குறைவாக இருந்தாலும் இப்படி ஏற்படலாம். அதே போல் எதுவித காரணமும் இன்றி — ஒரு சிலருக்கு Depo Provera ஆரம்ப கால உபயோகத்தின் போது இப்படி நடைபெறுவது கூட உண்டு. இதனை Spotting என்று கூறுவர். தொடர்ந்து இந்த ஊசி மருந்தை உபயோகிக்கும் போது இந்த இரத்த கசிவு இல்லாமல் போய்விடும். அப்படி தொடர்ந்தும் மூன்று ஊசி மருந்து உபயோகத்திற்கு பின்னரும் இரத்தக் கசிவு ஏற்பட்டால், குடும்பக் கட்டுப்பாட்டுக்குரிய வேறு முறைகளை கைக் கொள்வது நல்லது.

**கேள்வி:— ஆண். வயது 30. எனக்கு உடலில் திடீர் திடீரென வீக்கங்கள் தோன்றும். வலி இருக்கும். ஓரிரு நாட்களில் அவை மறைந்து விடும். பின்னர் வேறு இடத்தில் அதே போல் வீக்கங்கள் ஏற்படும். இது என்ன நோய்?**

பதில்:— நீங்கள் கூறிய படி வீக்கங்கள் ஏற்படும் போது ஒரு வைத்தியரிடம் காண்பியுங்கள். அவர் சரியான முறையில் வீக்கங்களை பார்த்து நோயை நிதானிப்பார்.

> இலவச மருத்துவ ஆலோசனைகளை
> 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
> டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
> நீங்கள் கேள்விகளை
> அனுப்பவேண்டிய முகவரி
> இலவச மருத்துவ ஆலோசனை
> 'சுடர் ஒளி'
> 85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
> கொழும்பு - 14

என்றாலும் நீங்கள் தந்த மருத்துவ விவரங்களை வைத்து பார்க்கும் போது உங்களுக்கு Filaria என்ற ஆனைக்கால் நோய் வட்டபுழுவகையினால் ஏற்படும் தாக்கத்தின் விளைவாக இந்த வீக்கங்கள் இருக்கலாம் என்று நம்புகின்றேன். ஆனைக்கால் நோய்க்கு காரணமான Wucheria Bancrofti என்ற ஒரு வகை வட்டப்புழுக்கள் மனித உடலில் — நிண நீர் குழாய்களை அடைக்கின்றன. இதனால் நிண நீர் சுற்றோட்டத்திற்கு தடைஏற்பட்டு உடலின் பகுதிகளில் சிறு வீக்கங்கள் ஏற்படலாம். உங்களின் இரத்தத்தை — F.A.T. பரிசோதனை, மற்றும் WBC/DC பரிசோதனைக்கு உட்படுத்தினால் உண்மையான நிலையை அறியலாம். நோயின் பெயரைக் கேட்டு பயந்துவிடாதீர்கள். இந்த நோயைத் தீர்க்க இன்று மருந்துகள் உண்டு. Diethyl Carbamazine என்ற மாத்திரைகளை தொடர்ந்து மூன்று வாரங்கள் சாப்பிட்டுவர நூற்றுக்கு நூறுவீதம் குணம் காணலாம். இதற்கு முன்னர் கூறியதுபோல ஒரு தகுந்த வைத்தியரிடம் உங்கள் வீக்கங்களைக் காட்டுங்கள்.

---

# அப்பாவை தேடி

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

'நான் வேணுமாம்.... ஆனால் என்ர பெஞ்சாதி, பிள்ளைகள் வேண்டாமாமோ...?' என்று பிடிவாதத்தை மேலும் இறுக்கிவிட்டு இருந்து விட்டார்.

ஆனால் இப்போ அவரே தன் பிள்ளைகளிடம் தோற்றுவிட்டதை உணர.... மனம் வெதும்பினார்.

'என்ன இருந்தாலும் அப்பாதானே...' என்று பொறுமையாக இருந்து கடமைகளை செய்துவிட்டு, காதலையும் வென்றிருக்கலாம் தானே. காலப்போக்கில் அப்பா நிச்சயம் காதலை ஏற்றுக்கொண்டிருப்பார். அதை விட்டுவிட்டு.. அவருடன் போட்டி போட்டுக் கொண்டு,... பஸ் ஊரை அடைந்தது.

அவரின் கையிலிருந்த பை பாரமில்லாமல் இருந்தாலும், அவருடைய மனப்பாரம் பலவீனபடுத்தியதால் தளர்ந்தே நடந்து கொண்டிருந்தார். வீடு வந்தது.

படலையில் கை வைத்தார். படலை திறந்து கொண்டது. "யா.. யாரது...? முற்றத்திலிருந்து குரல் வர, உற்றுப்பார்த்தார். "அ... அக்... கா...! நா... நான்தான்..." என்றார் குரல் கம்மியபடி.

"யார்...அ.. ரகு.. ரகுவே... என்னடா நீ..? வாடா...! எத்தனை வருஷங்களாச்சுடா...! அக்கா அப்படியே அவரை கட்டியணைத்தாள். அரவணைத்தபடி உள்ளே கூட்டிச்சென்றாள்.

"அப்பா.! அப்பா! அங்க பாருங்கோ யார் வந்திருக்கிறதெண்டு.." என்று சாய்மனை நாற்காலியில் சாய்ந்திருந்த அப்பாவின் முன் தம்பியை நிறுத்தினாள்.

அப்பா தடுமாறி விழிகளை ஆவலுடன் விரித்துப்பார்த்தார். கண்பார்வை மங்கலில் மகனின் உருவம் விம்பமாய் தெரிய, அவசரமாய் நாற்காலியை விட்டு தட்டுத்தடுமாறி எழுந்து நின்றார்.

"யா.. யார்..? ரகுவோ...? ரகுதான்... வந்திட்டியாடா..? அப்பாவைப் பார்க்க வந்திட்டியாடா..." அவரின் கண்களிலிருந்து கண்ணீர் கசிய... அப்படியே மகனை கட்டி அணைத்தார். அப்பாவின் முதுமை, அவரை கலங்கச் செய்து கவலைப்படுத்த.. அவரும் விம்மினார். அப்படியே அப்பாவின் காலடியில் விழுந்தார்.

"அப்பா...! என்னை மன்னிச்சிடுங்கோ! நான் உங்களுக்கு செய்த தவறுக்கு தண்டனையை பிள்ளைகளின் உருவில் அனுபவிச்சிட்டேன். மன்னிக்காமல் பெரிய தண்டனையை கொடுத்து என்னை பாவத்துக்கு ஆளாக்காதீங்கோ..." என்று தழுதழுத்தபடி சொன்னார்.

"என்ன சொல்றே? நீ வருவியோ, வரமாட்டியோ.., வந்து என்னை பார்க்கமாட்டியோ என்று கலங்கியிருந்தேன். உன்னைப் பார்க்காமல் கண்ணை மூடிவிடுவேனோ என்று ஏங்கியிருந்தேன். நான்தான் உனக்கு நன்றி சொல்லவேணும்.."

ரகுநாதனின் மனச்சாட்சி ஏசியது. 'அப்பாவை பார்க்க வந்ததுக்கு அவர் நன்றி சொல்லிறளவுக்கு நீ நடந்திருக்கிறியே..' இரண்டு நாட்கள் அவர்களுடன் தங்கினார். இப்போ மனம் அமைதியில் நிறைந்திருந்தது.

ஊருக்குப் புறப்பட்டார். இப்போது அவரின் பை, அவர்கள் அன்புடன் கொடுத்து விட்டிருந்த மரக்கறிகளுடனும், பழங்களுடன் நிறைந்து, கனத்து இருந்தாலும் உற்சாகத்துடன் நடந்து, பஸ்ஸில் ஏறிக்கொண்டார். மனதினின்று பாரங்களை இறக்கி விட்ட திருப்தியில் மனம் ஏதோ இனம் புரியாத அமைதியை அனுபவித்துக் கொண்டிருந்தது.

'அப்பா என்னை மன்னிச்சிட்டார். இது போதும்! இனி பிள்ளைகளைப் பற்றி கவலைப்படுவதில் அர்த்தமில்லை. அவர்களின் எதிர்காலத்தை கடவுளின் கைகளிலேயே கொடுக்கிறேன்...' என்று எண்ணியவாறு வீட்டை அடைந்தார். மாலா ஆர்வத்துடன் வரவேற்றாள். "வாங்கோ! என்ன மாதிரி? மாமா உங்களுடன் பேசினாரா?" என்றாள்.

"ஓம் மாலா எல்லாம் நல்லபடியாக முடிந்தது. உன்னையும் பிள்ளைகளையும் பார்க்க வேணும் என்று ஆசைப்பட்டார்..." அவளின் கண்களில் மகிழ்ச்சியில் ஒளி தெரிந்தது. அவர் தொடர்ந்தார். "அவர் என்னை மன்னிச்சிட்டார். அது போதும் எனக்கு."

"இது உங்களுக்கு போதுமா?" என்று சிறு புன்முறுவலுடன் கேட்டாள்.

"ம்.... என்ன சொல்ல வாறாய்?"

"நீங்க போனபிறகு உங்கள் பிள்ளைகள் உங்களைக் காணாது துடிதுடிச்சுப்போட்டாங்க, தெரியுமா?" அப்பா எங்கே என்று கேட்டினம். நான் எனக்குத் தெரியாது என்று கொஞ்சம் நடித்து விட்டேன். பிள்ளைகள் பயந்திட்டுதுகள். அழுதுவிட்டார்கள். இனி மேல் அப்பாவின் மனம் புண்படும் படி நடக்க மாட்டோம் என்று சத்தியம் கூட செய்தார்கள்.."

"அப்படியா.. நம்பமுடியலையா.... எங்கே என் பிள்ளைகள்?' நான் அவர்களைப் பார்க்கவேணும்.."

"அப்பா கோபம் மாறி, எங்களுக்காக திரும்பி வரவேண்டும் என்று கோயிலில் நேர்த்திக்கடன் வைக்கப்போய் விட்டார்கள்..." ரகுநாதனின் கண்கள் ஆனந்தத்தில் கண்ணீர் வடித்தன.

ஓ... அப்பா...! தன்னுடைய அப்பாவின் மன்னிப்பு எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதை உணர்ந்து.. அப்பாவை மனதிற்குள் வணங்கிக் கொண்டார்.

(யாவும் கற்பனை)

# பித்தன் பதில்கள்

*து.சாருமதி – வெளிக்கண்டல்*

கேள்வி:– பித்தா! மனைவியுடனான சண்டையில் நீர் எப்போதாவது காயப்பட்டிருக்கிறீரா?

பதில்:– இல்லை.... எனது மனைவிக்கு முத்தையா முரளிதரன் அளவுக்கு கெட்டித்



தனம் கிடையாது... குறி வைத்து தாக்குவதில் கொஞ்சம் வீக்.

*பி.வீரன் – கேவில்*

கேள்வி:– பித்தா! உங்களுக்குப் பகுத்தறிவு உள்ளதாகப் பலர் கூறிக் கொள்கின்றனர். அது உண்மையா? அப்படி என்றால் அதனை எப்போ பயன்படுத்துவீர்?

பதில்:– எனது மனைவியுடன் உரையாடும் போது. ஏனென்றால் கரணம் தப்பினால் மரணம் என்ற கஷ்டமான வேலை அல்லவா அது.

*ப.றொபின்சன் – கோவில் முள்ளியான்*

கேள்வி:– அன்பின் பித்தன் சார்! கருணாவுக்கும், உங்களுக்கும் தொலைபேசித் தொடர்புள்ளதாக அறிந்தேனே! உண்மையா?

பதில்:– ஆஹா... நான் பின்விளைவுகள் பற்றி கொஞ்சம் கூட சிந்திக்காது ''டக்'' என்று முடிவெடுக்கும் ஆளா என்ன?

*கே.சுரேஸ் – புதுக்குடியிருப்பு*

கேள்வி:– Dear பித்தா! எனது நண்பன் அழகான, திருமணமான பெண்களைக் கண்டால் வயிறு எரிகிறது என்று கூறுகி

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:–

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து தரமான – குறும்பான – யதார்த்தமான – பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை ஓகஸ்ட் 16 திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.





கேள்வி:– பெண்மைக்கும் தாய்மைக்கும் இடையிலான சிறப்பு யாது?

பதில்:– பெண்மை ஓர் ஆணினால் கவரப்படும் போதுதான் மகிமை பெறுகின்றது. ஆனால், தாய்மை தனது குடும்ப உறுப்பினர்களின் அன்பினால் சிறப்புப் பெறுகின்றாது.

இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில் மேலே. நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய முகவரி.

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85,ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,
கொழும்பு – 14.

றான். இத[illegible] அர்த்தம் என்ன பித்தா?

பதில்:– இ[illegible]ள் எனக்கு கிடைக்கவில்லையே என்ற ஆதங்கம் – இந்த மூஞ்சிக்கு இப்படி அழகானதெல்லாம் கிடைக்குமா என்ற ஏக்கம் – எனக்கு வருவது இதுபோல உருப்படியாக இருக்குமா என்ற அங்கலாய்ப்பு.. இப்படி ஒன்றை எனது மனைவி என்று உரிமை கொண்டாடக்கூடிய காலம் எப்போவருமோ என்ற ஆவல். [illegible]வைகளில் ஏதாவது ஒன்று அர்த்தமா[illegible] இருக்கலாம்.

*கே.அ.மேரி றோஜினி*

கேள்வி:– [illegible]தல் விவகாரத்தில் தூக்குப் போட்டு[illegible]காள்பவர்களில் அதிகமா[illegible]ார் ஆண்களா? பெண்க[illegible]?



பதில்:– ஆ[illegible]ண்கள்தான். அதாவது காதலில் தோல்வி அடைந்தால் தூக்குப் போட்டுக் கொள்பவர்களும் ஆண்கள் தான் – அதேவேளை காதலில் வெற்றி பெற்றாலும் அது ஆண்களுக்கு தூக்குப் போட்டுக் கொள்வது போலத் தான்.

*அ.கிரிஷ்டா – வெள்ளவத்தை*

கேள்வி:– பித்தா சண்டை வரப்போவதாகச் சொல்கிறார்களே.... உண்மையிலேயே வருமா?

பதில்:– உண்மையிலேயே வராது என்று உமக்கு யார்

சொன்னது.

*யோ.றீகன் – பரந்தன்*

கேள்வி:– கனம் பித்தன் அவர்களே? கருணாவின் கதை எப்போது முடிவுக்கு வரும்?

பதில்:– வீடு கொளுத்துற ராசாவுக்கு – கொள்ளி கொடுக்கிற மந்திரிகள் இருக்கும் வரை தொடரும்.

*ஜெகசுபதா – நல்லூர்*

கேள்வி:– பித்தா! திருமணம் செய்ய என்னென்ன தகுதிகள் தேவை?

பதில்:– எந்த விதமான தகுதியும் இல்லை என்ற ஒரே தகுதி இருந்தால் போதும்... ஜெகசுபதா! தகுதியுள்ளவர்கள் தான் திருமணம் செய்ய வேண்டுமென்றால் – ஊரிலே, நாட்டிலே முக்கால்வாசிப்பேர் பிரம்மச்சாரிகள்தான்....

*சிவசுதன் – வட்டக்கச்சி*

கேள்வி:– பித்தா நான் ஒரு பெண்ணைப் பார்த்தவுடன் காதல் கொண்டுவிட்டேன் என்ன செய்யலாம்?

பதில்:– பார்த்தவுடனேயே காதலா.... அடடா... சரி நடந்தது நடந்து விட்டது. இனிமேலாவது கண்ணை மூடிக்கொண்டு தற்போது காதலிக்கும் பெண்ணுக்கு துரோகம் செய்யாமல் ''கம்'' என்று இரும்.

*சுரேன் – புதுக்குடியிருப்பு*

கேள்வி:– பித்தா! உன் மண்டையை உடைப்பனடா? எத்தனை முறை எனக்கு நடிகர் அஜித் குமாரின் முகவரியைத் தராமல் ஏமாற்றுகின்றாய்?....

பதில்:– ஐயா... ராசா.. செல்லம்.... ஓடிவந்து எனது மண்டையை உடைத்துவிட்டு.. ஓடிப்போடா... கண்ணு.... ஏனென்றால் திரைப்பட நடிகர்களின் விலாசங்களை கேட்கும் வேலை மினக்கெட்டதுகள், உருப்படாததுகள், வெட்டி வேலை பார்ப்பவர்களுக்கெல்லாம் நடிகர்கள் விலாசத்தை நான் கொடுக்க, அவர்கள் நடிகர்களுக்கு கடிதம் போட அந்த கடிதம் எங்காவது ஒரு குப்பைக் கூடையிலே கிடக்க.... இங்கே இதுகள் நடிகர் கடிதம் போடுவார் என்று பார்த்துக் கொண்டு காத்திருக்க... இதெல்லாம் வீணான வேலை. சும்மா நேரம், பணம் என்பனவற்றுக்கு அழிவு. அப்படி நடிகர் பதில் கடிதம் போட்டாலும், அதனால் அவருக்கோ அல்லது அவரது குடும்பத்துக்கோ ஏதும் நன்மையாக அமையப் போவதில்லை. எனவே இவ்வா

றான பிரயோசனமற்ற, வீண் வேலைக்கு நான் உடந்தையாக இருக்கப் போவதில்லை என்ற கொள்கையை அண்மைய சில காலமாக கடைப்பிடித்து வருகிறேன். எனவே நிச்சயமாக நான் யாருக்கும் – எந்த நடிக– நடிகைகளின் விலாசத்தையும் தரமாட்டேன். மாறாக மண்டை உடைபட தயாராகவே இருக்கிறேன் கண்ணு.... ஓடி... ஓடி.... ஓடிவாடா. ராசா.

*சசி – வட்டக்கச்சி*

கேள்வி:– பித்தா! ஒரு பெண் எப்படி இருக்க வேண்டும். எப்படி இருக்கக் கூடாது?

பதில்:– ஒரு பெண் ஆணாக இல்லாமல் பெண்ணாக இருப்பதே நல்லது.... அதாவது குணங்களில், நடவடிக்கைகளில், நடைமுறைகளில்.

*ம.மயூரி – வற்றாப்பளை*

கேள்வி:– பித்தா! கோயிலுக்குச் செல்லும் போது ஏன் குளித்து, புது ஆடை அணிந்து செல்கிறார்கள் பித்தா?

பதில்:– கடவுளை தரிசிக்க செல்லும் போது மனம் மட்டுமல்ல உடலும் – உடையும் கூட தூய்மையாக இருக்க வேண்டும் என்றுதான், குளித்து, புது ஆடை அணிந்து கோயிலுக்குச் செல்வார்கள் முன்னோர். ஆனால் இப்போது அப்படி அல்லவே! குளிக்காவிட்டால் அடித்த சென்டின் மணம் வெளியே தெரியாதென்றும், ஐயாயிரம் ரூபா காஞ்சிபுரத்தை அடுத்த வீட்டுக்காரிக்கு காட்டவுமே குளிப்பும் – புது உடுப்பும்.

*ச.செந்தா – புதுக்குடியிருப்பு*

கேள்வி:– Dear பித்தா! செய்நன்றி மறப்பவர்களைப்பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்:– நாயை விட கேவலமானவர்கள்.

*எம்.விஜிதா – மாத்தளை*

கேள்வி:– பித்தா! பெரிய வீடு இருக்கும் போது, சின்ன வீடு தேடும் ஆண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

பதில்:– வீட்டிலே அறுசுவை உணவு சமைத்து வைத்திருக்கும் போது, அதனை விட்டு விட்டு சிலபேர் ஹோட்டல்களில் போய் ஒரு வெட்டு வெட்டுகிறார்களே அவர்களைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள். அதையேதான் இந்த விடயத்தில் நான் நினைக்கிறேன்.

*எஸ் – சுலைமான் – ஓட்டமாவடி*

கேள்வி:– முதலிரவு என்றால் என்ன பித்தா?

பதில்:– இளைஞர்களாக இருந்த நாம் பார்த்த, கேட்ட, எதிர்பார்த்த, சிந்தித்த, கனவுகண்ட விடயங்களை எல்லாம்.... அடச்சீ.... இதுக்குத்தானா இவ்வளவு லோலோ என்று அலைந்தோம் என எண்ணவைக்கும் இரவு.

*விஜேந்திரன் – மல்லாவி*

கேள்வி:– டியர் பித்தன் அண்ணா! நீங்கள் தனியாகச் செல்லும் போது வழியில் கொள்ளையர்கள் உங்களை இடைமறித்தால் என்ன செய்வீர்கள்?

பதில்:– ஹாய் என்று சொல்லிவிட்டு ஜாலி



யாகப் போய்க் கொண்டே இருப்பேன். ஏனென்றால் மடியிலே கனமிருந்தால் தானே வழியிலே பயம் வரும். நான் தான் Emty Pocket ஆசாமியாச்சே... இது விடயத்தில் எனது மனைவிக்கு நன்றி சொல்ல வேண்டும். ஏனென்றால் சம்பளச் செக்கை அப்படியே என்னிடமிருந்து லவட்டிக் கொண்டு – தினமும் பஸ்காசு மட்டும் தந்து என்னை அன்பாக அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கும் பிசிநாறி அவள்.

*கே.விஜயன் – வவுனியா*

கேள்வி:– பித்தா... கடைசியா என்னபடம் பார்த்தீர்?

பதில்:– நியூ... டைரக்டர் சூர்யா – O.K. நடிகர் சூர்யா – O.K. படம், கதை எடுத்தவிதம், புதுமையான யுக்திகள் என்பன O.K. படம் பிழைத்து கொண்டு சூர்யாவைக் காப்பாற்றிவிட்டது. திரையிட்ட இடங்களிலெல்லாம் பணத்தை அள்ளிக் கொட்டுகிறதாம். ஆனால் தமிழ் ரசிகர்களைத்தான் நம்ப முடியவில்லை. கொஞ்சம் வக்கிரமாக வந்த போய்ஸை நிராகரித்துவிட்டார்கள். ஆபாசமும் – இரட்டை அர்த்த வசனமும் உள்ள நியூவை வெற்றி பெறச் செய்து விட்டார்கள்.

*சு.துஷியந்தன் – வண்ணார்பண்ணை*

கேள்வி:– பித்தா! வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம் என்கிறார்கள். அதன்படி நான் எனது வீட்டில் மரம் வளர்க்கத் தயார். ஆனால் அந்த மரத்தால் எனக்கு நல்ல வருமானம் கிடைக்க வேண்டும். அப்படியென்றால் என்ன மரம் நடுவது நல்லது?

பதில்:– கஞ்சா....

*எஸ்.மாலினி*

கேள்வி:– பித்தா! திரிஷா




ஒல்லி – ஜோதிகா குண்டு. இருவரையும் சண்டையிட விட்டால் யார் வெல்வார்கள்?

பதில்:– அடடா.... ஆடான ஆடெல்லாம் தீனுக்கு அலையும் போது, சொத்தி ஆடொன்று புரியாணிக்கு அலையுதாம்... நாடு இருக்கும் நிலமையில.... இது ரொம்ப ரொம்பத் தேவை.

*த.சுரேந் – யாழ்ப்பாணம்*

கேள்வி:– பித்தா! சினிமாப் படம் எடுத்தால் லட்சாதிபதி ஆகலாம் என்றார்களே...! உண்மையா?

பதில்:– நீர் இப்போது



கோடீஸ்வரராக இருந்தால் அது சாத்தியம்.

*ப.தூயவன் – உயிலங்குளம்*

கேள்வி:– பித்தா! மெல்லிய பெண்கள் – மொத்தமான ஆண்களை திருமணம் செய்கிறார்களே! எப்படி.......பித்தா?

பதில்:– கோழி மிதித்து குஞ்சு செத்ததாக

**பித்தனின் கேள்வி**

கேள்வி:– ஆண், பெண் சமத்துவம் என்பது நடைமுறையில் எப்படி?

**வாசகர் பதில்கள்**

*வ.ரவிச்சந்திரன் – ஏறாவூர்.*

பேச்சளவில்தான் இருக்கிறது. ஆண்டுகள் எத்தனைதான் ஆயினும். பெண்களுக்கிருக்கும் இரண்டாம் நிலை உலக அழிவு வரை ஓங்கியே இருக்கும்.

*றி.றொபின்ஷன் – நீர்வேலி.*

எப்போதும் பெண்களைவிட ஆண்களே உயர்த்தியாக இருக்கிறார்கள். அதைவிட எந்த விடயமாக இருந்தாலும் ஆண்கள் மேலேதான்.

*ந.சித்திராங்கி – மருதனாமடம்.*

பெண்களைவிட ஆண்கள்தான் எத்துறையானாலும் அத்துறையில் முதன்நிலையில் செயற்படக்கூடியவர்கள் என்ற தப்பான அபிப்பிராயங்கள் மலை ஏறிவிட்டன.

*த.சந்திரன் – பளை.*

ஆண்களுடன் எப்படிப் போட்டி போட்டாலும் பெண்கள் ஒரு பலவீனமான பால் தான்

*எஸ்.தினேஸ், பேராதனை.*

ஆண்கள் – ஒன்று
பெண்கள் – இரண்டு
ஒன்றா இரண்டா பெரிது?
வாசகர்கள் தீர்மானித்துக்கொள்ளட்டும்.

சரித்திரமே கிடையாது....

*அ.மலர் – அராலி*

கேள்வி:– தாய்மார் எவ்வளவு அன்பு வைத்தாலும் அதனை பிள்ளைகள் உணர்ந்து கொள்கிறார்கள் இல்லையே.....ஏன் பித்தா?

பதில்:– தாயின் அன்பை புரிந்து கொள்ளாத தன்மைதான் காரணம்.... அதற்கு ஒரு சிறு கதை உதாரணம் சொல்கிறேன்.

சிறையில்இருக்கும் தனது மகனை எப்படியாவது தப்ப வைத்துவிட வேண்டும் என்று திட்டமிட்டாள் ஒரு தாய். இரும்பு அறுக்கும் வாள் ஒன்றை வாங்கினாள். கேக் ஒன்றைச் செய்து அதற்குள் அந்த வாளை மறைத்து வைத்தாள். தனது மகனுக்குப் பிறந்தநாள் பரிசு என்று சொல்லி எப்படியோ சிறைகாவலர்களை ஏமாற்றி அந்த கேக்கை சிறையிலிருக்கும் தன் மகனிடம் சேர்ப்பித்தாள்.

ஒரு வாரம் கழித்து சிறையிலிருக்கும் மகனிடமிருந்து தாய்க்கு ஒரு பார்சல் வந்தது. அந்த பார்சலை பிரித்துப் பார்த்தாள் தாய். அதற்குள் அவள் அனுப்பிய வாளும் ஓர் கடிதமும் இருந்தன.

கடிதத்தை பிரித்துப் பார்த்தாள் தாய். அதில் எழுதியிருந்தது – ''அம்மா! உங்கள் சமையல் எப்போதான் திருந்தப் போகிறதோ தெரியவில்லை. இவ்வளவு பெரிய வாள் கேக்குக்குள்ளே இருப்பது தெரியாமல் கேக் தயாரித்து எனக்கு அனுப்பியிருக்கிறீர்கள். உங்கள் கெட்டித்தனம் உங்களுக்கு தெரிய வேண்டும் என்பதற்காக இந்த வாளை உங்களுக்குத் திருப்பி அனுப்பியுள்ளேன். இனிமேலாவது கவனமாகச் சமையுங்கள்'' என்றிருந்தது.

இந்த கதையில் உள்ளது போல் அம்மாமாரின் அன்பை பிள்ளைகள் தப்பர்த்தமாக எடுத்துக்கொள்வதால்தான் அப்படி நிகழ்கிறது.

*க.மதிவதனன் – மல்லாவி*

கேள்வி:– மது, புகைத்தல் ஆகிய பழக்கங்களை கொண்ட பல தந்தையர்கள், தங்கள் பிள்ளைகளை நல்லவர்களாக வளர்க்க விரும்புகிறார்கள். அந்த தந்தையர்களால் தங்களை திருத்த முடியாமல் இருக்கும் போது, அவர்கள் எப்படி பிள்ளைகளைத் திருத்த முற்படலாம்?

பதில்:– மதிவதனா.... அப்படிபோடு அருவாளை.... நயினாமாரே உங்களுக்கு இந்தக் கேள்வி சமர்ப்பணம். இனிமேலாவது நீங்கள் திருந்திக் கொள்ளுங்கள். திருந்த [illegible]வில்லையா? பிள்ளைகளை திருத்துவதை விட்டு விடுங்கள்.






## கன்னடத்தில் சீன் தமிழில் ரீல்

தமிழில் 'கவர்ச்சியா ஓ.. நோ!' என்று மறுக்கும் சதா கன்னடத்தில் கவர்ச்சியை காவிரி ஆறாக ஓடவிடுகிறார். சமீபத்தில் கன்னடத்தில் வெளியான 'மோனாலிசா' படத்தில் கவர்ச்சியை அள்ளி வீசி ரசிகர்களை திணற டித்திருக்கிறார். தமிழ் படங்கள் என்றால் சேலையை தவிர வேறு எதையும் போட்டுக் கொள்ள மாட்டேன் என்று படிவாதம் பிடிக்கும் சதா கர்நாடகத்தில் மட்டும் ஆடை வெறுப்பு செய்வது ஏன்?

கர்நாடக ரசிகர்களின் ரசனை அப்படி.(ஏன் தமிழ் ரசிகர்களுக்கு அந்த ரசனையே இல்லையோ?) அங்கு இழுத்துப் போர்த்தி நடிக்கும் நடிகைகளுக்கு வேலை யில்லை, கன்னட சினிமாவில் நிலைத்து நிற்க வேண்டும் என்றால் கவர்ச்சி காட்டியே ஆக வேண்டும். இத்தனைக்கும் தமிழில் கிடைக்கும் சம்பளத்தை விட கன்னடத்தில் குறைவான சம்பளமே.

'மோனாலிசா' விவகாரத்தை கேள்விப்பட்ட சதாவின் தமிழ் தயாரிப்பாளர்கள் எரிச்சலின் உச்சத்திலிருக்கிறார்கள். கன்னடக்காரன் குடுக்கிற அதே பணத்தைதானே நாங்களும் குடுக்கிறோம் 'அவனுக்கு மட்டும் சீனு எங்களுக்கு வெறும் ரீலா?' என்கிறார்கள்.

விரைவில் 'மோனாலிசா' படத்தை தமிழில் 'டப்' செய்து வெளியிடுகிறார்கள் சதா– தேவயானியோ, ரேவதியோ அல்ல, வெறும் ஷகிலா, மும்தாஜ் தான் என்பதை நிரூபிக்கப் போகிறார்களாம். எப்படியோ, தமிழ் ரசிகர்களுக்கு நல்லதொரு விருந்து காத்திருக்கிறது.

## மீண்டும் வலம் வருகிறார் முரளி!

அழுத்தமான குடும்ப சென்டிமெண்ட் படங்கள் வந்தால் அதில் கண்டிப்பாக முரளி இடம்பெற்றிருப்பார். கொஞ்ச நாட்களாக ஆளைக் காணவில்லை. திடீரென பார்த்தால் மீரா வாசுதேவனுடன் 'அறிவுமணி' படத்தில் டூயட் ஆடிக் கொண்டிருந்தார்.

என்ன கொஞ்ச நாட்களாக ஆளையே காணவில்லை என்று கேட்டால் பொல பொலவென கொட்டினார்.

நல்ல கதையம்சம் உள்ள படங்களில் மட்டும் நடித்துக் கொண்டிருந்தேன். ஒன்றரை ஆண்டுகளாக படங்கள் இல்லாததால் இடைவெளி ஏற்பட்டுவிட்டது. 'அறிவுமணி' படம் மிகவும் அருமையான கதை. அதனால் மிகவும் எதிர்பார்ப்புடன் நடித்திருக்கிறேன்.

'எனக்கு கஷ்டங்கள் வரும்போதெல்லாம் ஊடகவியலாளர் தான் என்னை தூக்கி விடுவார்கள். என்னுடைய இந்தப் படமும் வெற்றி பெற்று மீண்டும் நான் திரையுலகில் பிரகாசிக்க உதவி செய்யுங்கள். இப்போது வரும் படங்கள் எல்லாம் வேகமான ஆக்ஷன் படங்களாகவே இருக்கின்றன. குடும்ப சென்டிமென்ட், அழுகை, ஆர்ப்பாட்டம் இதெல்லாம் இல்லாமல் போய்விட்டன. 'அறிவுமணி'யில் இப்போதைக்கு ஏற்ப வேகமும் இருக்கிறது சென்டிமெண்டும் இருக்கிறது.

வேகமான பாடல்கள், ஒரு பாடல் மன்மதராசா மெட்டில் எடுத்திருக்கிறார்கள். பொதுவாக நான் வேகமான டான்ஸ் அசைவுகள் வைத்துக் கொள்வதில்லை. இப்போதைய ரசிகர்களின் விருப்பப்படி வேகமான அசைவுகள் தேவைப் படுகிறது. இந்த பாடல் காட்சியின் போது இடுப்பில் பல முறை சுளுக்கியது.

உதவி இயக்குநராக இருந்து நடிப்புக்கு வந்தவன் நான். இயக்குநர் ஆக வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. வயது இருக்கும் போதுதான் நடிக்க முடியும். எந்த வயதிலும் இயக்குநர் ஆக முடியும்– என்றார்.

## ரஜினிக்கு வில்லன் ரெடி

'கில்லி' படத்தில் பிரகாஷ்ராஜ் நடித்திருந்த விதத்தைக் கண்டு வியந்த ரஜினி திடீரென்று அவரை அழைத்து ''நீங்கள் தான் 'ஜக்குபாய்'இல் வில்லனாக நடிக்கிறீங்க ...'' என்று இன்ப அதிர்ச்சி கொடுத்துவிட்டாராம். ஏற்கனவே ரஜினியோடு 'படையப்பா'வில் சிறிதொரு பாத்திரத்தில் நடித்த பிரகாஷ்ராஜுக்கு 'ஜக்குபாய்' படம் நல்லதொரு வாய்ப்புத்தான்..!

*மைசூர் மேல்கோட்டை செல்வநாராயண சுவாமி ஆலயத்தில் விசேஷ பூஜை ஒன்றை நடத்தியிருக்கிறார் ரஜினி. சமீபகாலமாக தனக்கு ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு நிவர்த்தி வேண்டியே இந்த விசேட பூஜை நடந்துள்ளது. அத்துடன் ஜக்குபாய்க்கு தேவையான படப்பிடிப்பு இடங்களையும் பார்த்துவிட்டாராம். கதைப்படி தான் குதிரையில் வரும் முதல் காட்சியை மைசூர் சாமுண்டீஸ்வரிக்குப் பக்கத்தில் உள்ள காட்டுப்பாதையில் எடுக்கவும் தீர்மானித்துள்ளாராம்.

## படிக்கும் போதே செக்ஸ்

உலகம் முழுவதும் எடுக்கப்பட்ட ஒரு கணிப்பில் மருத்துவம் படிக்கும் மாணவ, மாணவிகளில் 75 சதவீதம் பேர் படிக்கும் போதே செக்ஸ் வைத்துக் கொள்கின்றனர் எனச் சொல்லப்படுகிறது. இதனை மையப்புள்ளியாக வைத்தே தனுஷ் நடிக்க 'டொக்டர்ஸ்' படம் உருவாகவிருக்கிறதாம்.

## தனுஷின் ரகசியக் காதல்

பெரிய அக்காவின் பிரசவம், சின்ன அக்காவின் கல்யாணம் அதன் பிறகு அண்ணனின் கல்யாணம். அதன்பிறகு உன்னுடைய காதல் விவகாரத்தை வெளியே சொல் என தனுஷிற்கு தடை போட்டிருக்கிறார் அவரின் அப்பா. அதனால்தான் பெரிய நடிகரின் மகளுடனான தனது காதலை வெளியே சொல்லாமல் ரகசியமாக வைத்திருக்கிறாராம் தனுஷ்.

## தாராளக் கவர்ச்சி

மற்றவர்கள் படத்திற்கு ஏராளம் நிபந்தனைகள் போடும் மீரா ஜெஸ்மின் மணிரத்தினத்தின் படம் என்பதால் மறுப்பேதும் சொல்லாமல் ஆயுத எழுத்தில் தாராளமாகக் கவர்ச்சி காட்டி நடித்திருந்தார். வாரி வழங்கினார். இது மீரா ஜெஸ்மினா என்று எல்லோரும் கேட்கும் அளவிற்கு அப்படி ஒரு கவர்ச்சியாக நடித்திருந்தார். இனிமேல் ஒரு போதும் இப்படி கவர்ச்சி காட்டி நடிப்பதில்லை என்று முடிவெடுத்திருக்கிறாராம் மீரா.

## நக்மாவா? மீனாவா?

ஒளிப்திவாளர் நிவாஸ் இயக்கும் புதிய படத்தில் நடிக்க ஆர்வமாக இருக்கிறார் நக்மா. ஆனால் நிவாஸோ மீனா நடித்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறாராம். முழுநீள சஸ்பென்ஸ் மற்றும் திகில் கதை கொண்ட படமாக இது உருவாக இருக்கிறது.




பிரபுதேவா– நமிதா 'நான் ரெடி நீ ரெடியா'



வாராத்ஞா– அர்ஜூன். அரசாட்சி










சீத்தல்



ரம்யா கிருஷ்ணா



சிம்ரன்

ரவி ராகுல்— ஜோதி 'லெட்டு'

# 'நியூ' ஓர் பார்வை

எட்டு வயசுப் பையன் விஞ்ஞானி ஒருவரால் திடீரென்று இருபத்தெட்டு வயசு வாலிபன் ஆகிவிடுகிறார். என்னென்ன விபரீதங்கள் நடக்கும் என்பதுதான் கதை. இப்படி லட்டு மாதிரியா கதை கிடைத்தால் எஸ்.ஜே. சூர்யா மாதிரியான மன்மத ராஜா சும்மா விடுவாரா? புகுந்து விளையாடிவிட்டார். பல இடங்களில் காய்ந்த மாடு கம்பங்கொல்லையில் புகுந்த உணர்வு.

இயக்குநர்கள் ஹீரோக்கள் ஆகும் காலம் இது. ஒரு ஹீரோவாக, கம்பி மேல் நடந்து பாஸ் மார்க் என்ன அதற்கு மேலேயே வாங்கி நடிப்பில் முத்திரையைப் பதித்துவிட்டார் சூர்யா. திறமையான ஒளி அமைப்புக்கள் மூலம் தன் குறைகளை மறைத்து வித்தியாசமான – நவீனமான – சுறுசுறுப்பான நடிப்பு என்ற தனது பாத்திரத்துக்கு உயிர் கொடுத்திருக்கிறார். சிறுவர்களுக்கான படுக்கையை அவர் கரைந்து விளக்கும் காட்சியில் தியேட்டர் அதிர்கிறது.

மாலை ஆறு மணி வரை பையன். பின்னர் காலை ஆறு மணி வரை இளைஞன் என்பது சுவாரஸ்யம். அந்த சிக்கலைச் சமாளிக்கும் காட்சிகள் அதிகம் இல்லாதது கதையுடன் இணைய முடியவில்லை. காலை ஆறுமணியிலிருந்து கணவனைக் காணோம் என்றால் ஒரு மனைவி சந்தேகப்பட மாட்டாளோ? அதுவும் சிம்ரன் மாதிரியான 'ஷார்ப்' பாத்திரம்?

அடடா கல்யாணம் பண்ணிக் கொண்டு ஒதுங்கி விட்டாரே? என்று நொந்து கொண்டிருக்க பிரமாதப்படுத்தியிருக்கிறார் சிம்ரன். நடனம், காதல், கண்டிப்பு, குறும்பு என்று அத்தனையிலும் வெளுத்து வாங்கியிருக்கிறார்.

முன்பாதியில் தொடர்ச்சியாக வரும் ஒரே மாதிரியான பாடல்களும், ஒரே மாதிரியான நடனங்களும் அலுப்பூட்டுகின்றன.

கரகரப்பான குரலில், கண்டிப்பான, பாசமிகு தாய் தேவயானி—கச்சிதம்

சிம்ரன் கழுத்தில் தொங்கும் விசிலைத் துரத்தும் சூர்யா—சத்தமா ஊதுவேன் டயலாக், ஜனகராஜிடம் போர்வைக்குள் நடப்பதை சைகை மூலம் விளக்குவது, ஆட்டோவில் சிம்ரன் மார்பில் தலைசாயும் சிறுவன் போன்ற காட்சிகள் அப்பப்பா கண்றாவி.

அவை கண்றாவி என்றால் அதைவிட கண்றாவிகளைக் கொண்டது கிரண் வரும் காட்சிகள். பயங்கர ஷகிலாப் படவாசனை!

தமாஷான படம் என்று முடிவு பண்ணியாகிவிட்டது. வில்லன்களையும் கோமாளிகள் ஆக்கியாச்சு. (உண்மையில் அந்த வில்லன் படு தமாஷ்) கடைசி பாகத்தில் மட்டும் கர்ப்பிணி சிம்ரனைக் கொல்ல (அய்யோ! தெலுங்குஸ்டைல்) வெறியுடன் வருகிறார்கள். ரசிக்க முடியவில்லை.

குகனின் காமிரா நல்ல சுறுசுறுப்பு. ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் மூன்று பாடல்கள் தாளம் போட வைக்கின்றன.

# வசூலுக்காக 'வசூல் ராஜவில்'

வசூல் படத்தில் கமலின் நண்பர் ஒருவர் புற்றுநோயால் அவதிப்படுவது போலவும், அவரை குஷிப்படுத்த கமல் அவரை ஹோட்டலுக்கு அழைத்து வருவது போலவும் ஒரு காட்சி படமாக்கப்பட்டது. அதில் ஹோட்டலுக்கு அழைத்து வந்து வெறும் தேநீர் மட்டும் வாங்கிக் கொடுத்தால் காட்சிக்கு நன்றாகவா இருக்கும்? ஆகவே, ராக்கியை வைத்து ஒரு கிளப் டான்ஸ் எடுத்திருக்கிறார்கள்.

தியேட்டரில் பார்ப்பவர்களின் இதயம் குலுங்க வேண்டும் என்ற விபரீத ஆசையில் கிளாமராக படக்காட்சிகளை அமைத்திருக்கிறார்கள்.

# ஏற்றுமதியாகும் இந்திய நடிக, நடிகர்கள்

என்னமோ தெரியவில்லை, என்ன மாயமோ புரியவில்லை, ஒரு காலத்தில் இந்திய மண்ணிலிருந்து உலக அழகிகள் வரிசையாக தேர்ந்தெடுக்கப்பட்டது போல இப்போது வெளிநாட்டு படங்களில் நடிக்க இந்திய நடிகர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள்.

''ஐஸுக்கு முகம் அழகு, எனக்கு உடம்பு அழகு அவர் முகத்தை காட்டுகிறார். நான் உடம்பை காட்டுகிறேன். அவர் முகத்தை காட்டாமல் நடித்தால் நானும் உடம்பை காட்டாமல் நடிக்கிறேன்.'' என்று ஐஸ்வர்யாவுக்கு சூடாக பதிலளித்த மல்லிகா ஷெராவத்துக்கு வெளிநாட்டுப் படமொன்றில் நடிக்க வாய்ப்பு கிடைத்துள்ளது. ஜாக்கிசானின் 'தி மித்' என்ற அந்தப் படத்தில் இந்திய இளவரசியாக மல்லிகா நடிக்கிறார். இந்த வாய்ப்பு ஐஸ்வர்யா உள்பட பலரும் 'நோ' சொன்னதால் மல்லிகாவுக்கு கிடைத்திருக்கிறது. ஜாக்கிசானுடன் நடிக்க ஏன் 'நோ' சொல்ல வேண்டும்? வேறொன்றுமில்லை, ஆடைகள் ஒன்றுமில்லாமல் ஒரு காட்சி நடிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.

வெளிநாட்டு படத்தில் நடிக்கும் மற்றொரு நடிகர் மாதவன். 'லைட் இன் லொசெஞ்சல்ஸ்' என்னும் ஹாலிவுட் படத்தில் நடிப்பதற்காக அமெரிக்கா சென்றுள்ளார். உள்ளூரில் 'கருப்பன்' படம் கிடப்பில் இருக்க, ஹாலிவுட்தான் முதல் என்று கிளம்பிப் போய்விட்டார். இந்தப் படங்கள் தவிர 'வெட்டிப்பயல்' என்ற நகைச்சுவை படம் ஒன்றில் நடிக்கவும் ஒப்புக் கொண்டுள்ளார் மாதவன். இதை தயாரிப்பது பிரபல நிதியாளர் மித்தால் சேட்டு.

சியான் விக்ரமுக்கும் சிறிது நாட்களுக்கு முன் ஆங்கில படமொன்றில் நடிக்க அழைப்பு வந்தது. அதிக நாள் கால்ஷீட் கொடுக்க வேண்டியிருப்பதால் அந்த வாய்ப்பை மறுத்துவிட்டார் விக்ரம். 'அந்நியன்' படம் முடிந்த பிறகு ஹாலிவுட் வாய்ப்பு வந்தால் ஒரு கை பார்க்கலாம் என்ற முடிவில் இருக்கிறார் விக்ரம். என்ன உள்ளூரில் இந்தியாவை காப்பாற்ற வேண்டும் ஹாலிவுட்டில் உலகத்தை காப்பாற்ற வேண்டும்.

சினிமாவுல இதெல்லாம் சகஜமப்பா!



'செல்லமே' அர்மான், [illegible] சந்தனா



சீமா சென் — விஷால்
'செல்லமே'

# அழகியை விரட்டிவந்து கடலில் வீழ்ந்த எருமை



வீதியில் சென்ற அழகியை விரட்டிக் கொண்டு வந்தது அந்த எருமை. அழகி கடலில் மெதுவாக இறங்கிவிட வேகமாக வந்த எருமை கடலில் வீழ்ந்தது. ஸ்பெயினில் இவ்வாறு எருமைகளைத் தூண்டிவிட்டு பெண்களை விரட்டும் விளையாட்டு நடைபெற்றது. கடலில் வீழ்ந்த எருமைக்கு என்ன நடந்தது? எருமைகளைத் தூக்கி எடுத்து பாதுகாக்கப் படகுகள் காத்திருந்தன.


மசாலா மிக்ஸ்

# நீர் யானைக் குட்டி கம்பீர நடை பவனி!



ஜெர்மனியின் பிராஸ்போர்ட் மிருகக் காட்சிச்சாலையில் வாசம் செய்யும் நீர்யானைக் குடும்பத்திற்கு ஒரு பெண் குட்டி பிறந்தது. மிருகக் காட்சிச்சாலையில் வாழும் நீர்யானை, குட்டி ஈனுவது மிகவும் அபூர்வமான சம்பவம் ஆகும். பிறந்து ஒரு வாரமே ஆன நீர் யானைக் குட்டி தனது அம்மாவுடன் கம்பீரநடை பயிலுவதைப் படத்தில் காணலாம்.

# மண்ணில் வடிக்கும் சிற்பங்களுக்கு மதிப்பு



கடற்கரை மணலில் பொம்மை செய்து விளையாடுவது குழந்தைகளுக்கு பிடித்தமான விளையாட்டு. அலைவந்து பொம்மைகளை அடித்துச் சென்றாலும் கவலை இல்லை. அதே பாணியில் பெரிய பெரிய சிற்பங்களை மண்ணில் வடித்து காட்சிக்கு வைக்கிறார்கள் மேல் நாட்டவர்கள். பெல்ஜியத்தில் நடைபெற்ற மண்சிற்பக் கண்காட்சியில் நிலைநிமிர்ந்து நிற்கும் மண் சிற்பம் இது.

# “பேய்” நரிகள் அழிவதை தடுப்பதற்கு முயற்சி:



மடகாஸ்கர் தீவுகளில் வாழும் “பேய்” நரிகள் உலகில் அழிந்துவரும் இனத்தைச் சேர்ந்தவை. மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான “பேய்” நரிகளே உலகில் தப்பியிருக்கின்றன. புவனஸ் அயர்ஸ் மிருகக்காட்சிச் சாலையில் வளர்த்துப் பாதுகாப்பதற்காக ஆண் – பெண் பேய் நரி ஜோடி ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறார்கள். பெண்ணுக்கு ஆண் தோடம்பழம் அன்பளிப்புச் செய்திருந்த காட்சி.

# ஈபிள் கோபுரத்தில் மின்சார அலங்காரம்



பாரீஸ் நகரில் எழிலுக்கு பெருமை சேர்க்கும் விதத்தில் அழகிய கட்டடங்கள் நிலை நிமிர்ந்து நிற்கின்றன. அவற்றில் ஈபிள் கோபுரத்திற்குத்தனி மதிப்பு உண்டு. அந்த அதிசய கோபுரத்திற்கு மின்சார அலங்காரம் செய்து அனைவரையும் மெய்மறக்கச் செய்தார்கள். வாண வேடிக்கைகளும் ஈபிள் கோபுரத்திற்கு மேலும் அழகு சேர்த்தன.

# ஒளிந்திருக்கும் முகம் எது?



ஜூலை 26, சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் கங்குலி. சரியான விடையைக்கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் ஐந்து அதிஷ்டசாலிகளின் பெயர், விவரம் வருமாறு:

1. வி.சுந்தர்சன், 309 பலாலி வீதி, யாழ்ப்பாணம். 2. ச.சுகி, ஆஸ்பத்திரி வீதி, முள்ளியவளை, முல்லைத்தீவு. 3.வே.கவிதா, 369 காலி வீதி, கொழும்பு 06. 4. ச.ஜனார்த்தனன், ம/ அ.மி.த.க.பாடசாலை வீதி, மட்டக்களப்பு. 5. சி.சிவகௌரி, தேவாலய வீதி, திருகோணமலை.

சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிஷ்டசாலிகளுக்குஎமது வாழ்த்துக்கள்.

இந்தவாரம் ஒளிந்திருக்கும் இந்த முகம் யாருடையது?

இவர் முன்னாள் ரஜனி, கமல் உட்பட முன்னணி நடிகர்கள் அனைவருடனும் நடித்து உள்ள நடிகை. யார் இவர்?

இந்த முகத்திற்குரிய நடிகையைக் கண்டுபிடித்து, அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி கீழ்வரும் எங்கள் புதிய முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.



# லண்டனில் ஐந்தாவது பூபாள ராகங்கள் இம்முறை சிறப்பான ஏற்பாடுகள்

லண்டன் மாநகரில் நடைபெறும் தமிழ் கல்ாசார நிகழ்வுகளில் தரமானதாகக் கருதப் படும் ''பூபாள ராகங்கள்'' என்ற வருடாந்தக் கலைவிழா இவ்வாண்டு எதிர்வரும் 14ஆம் திகதி மாலை 5மணிக்கு லண்டன் மேற்பகு தியில் உள்ள கிறீன் போட் (GREEN FORD) மண்டபத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இவ்விழாவை யாழ்ப்பாணம் கொம்மந் தறையில் அமைந்துள்ள கம்பர்மலை வித்தி யாலய பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச் சியக் கிளை நடத்துகிறது.

''பூபாள ராகங்கள்2004'' நிகழ்வுக்காக இவ்வாண்டு பிரதம விருந்தினராக வடக்கு—



கடந்த வருடம்இடம்பெற்ற விழாவின் போது....

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ச.மகாலிங்கம் அழைக் கப்பட்டுள்ளார். கௌரவ விருந்தினராக லண்டன் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பா ளரும், சட்டத்தரணியுமான சி.செல்வராஜா கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக ஈழத்திலிருந்து இலக்கிய கர்த்தா, பேச்சாளர் கோப்பாய் சிவம் அவர்களும், இசையமைப்பாளர் ஈழநல்லூர் இசைச்சுடர் அருணா அவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுடன் அவுஸ்திரேலியாவிலி ருந்து பொப்பிசை பிதா, விரிவுரையாளர் நித்தி கனகரத்தினம் அவர்களும் அழைக்கப் பட்டுள்ளார்.

பழைய மாணவர் சங்க லண்டன் கிளை யின் தலைவர்இ.இரகுநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ''பூபாள ராகங் கள்—2004'' என்ற விழா மலரைவிழா அமைப் பாளரும், மலராசிரியருமான மகாலிங்கம் சுதாகரன் வெளியிட்டு வைப்பார்.

மதிப்பீட்டுரையை தமிழருவி த.சிவகுமா ரன் நிகழ்த்துவார். முதற்பிரதிகளை ஊடகங் கள் சார்பில் தீபம் ரீ.வி நிறுவனத்தாரும், பிர தான அனுசரனையாளர்களும் பெற்றுக் கொள்வர்.

விழா அமைப்பாளர் மகாலிங்கம் சுதா கரன் வரவேற்புரை நிகழ்த்துவார். இ.இரகு நாதன் தலைமையுரையும், ச.மகாலிங்கம் சிறப்புரையும் நிகழ்த்துவார்கள்.

சிறுகதைப் போட்டிக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் ''பூபான ராகங்கள்—2004'' விருது இருவருக்கு வழங்கப்படவுள்ளது.

''பூபாள ராகங்கள் – 2004'' ஐ அலங்கரிக்கும்




நிகழ்வுகளாக லண்டன் 'நாட்டியாலயா' நடனப்பள்ளி மாணவிகளின் ''நாட்டியக் கலையரங்கம்'' நிகழ்வை ஸ்ரீமதி ராகினி ராஜகோபால் தயாரித்து வழங்குகிறார். க.பாலேந்திராவின் நெறியாள்கையில் தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகம் வழங்கும் ''சம்பந்தம்'' நாடகம் இடம்பெறும்.

தொடர்ந்து கோப்பாய் சிவம் நீதிபதியாகக் கலந்து கொள்ளும் வழக்காடு மன்றம் ''குற்ற வாளிக் கூண்டில் தமிழ் பெற்றோர்'' நடை பெறும்.

வாதிகள், க கவிஞர் க.இராஜமனோ கரன், கரவை.கவி.வீரவாகு ஆகியோர் குற் றம் சுமத்த ச.ஆனந்த நியாகர், திருமதி. மாதவி சிவசீலன் ஆகியோர் குற்றத்தை மறுப்பார்கள். தொடர்ந்து அன்பு அறிவிப் பாளர் பி.எச்.அப்துல் ஹமீத் தொகுதது வழங்கும் 'தமிழுடன் இரண்டு நிமிடங்கள்' ரசிகர்களுக்கான போட்டி நிகழ்வாக இடம்பெறும். நடுவர்களாக எஸ்.கே.ராஜன், துரை ஆகியோர் கடமையாற்றுவர்.

அதனைத் தொடர்ந்து ஈழத்துப்புகழ் ஈழ நல்லூர் அருணா, லண்டன் துஷி,தனு, நண் பர்களுடன் இணைந்து வழங்கும் ''கான மழை''இன்னிசை நிகழ்வு இடம் பெறும். இதில் சிறப்புப் பாடகராக பொப்பிசைப் பிதா நித்தி கனகரத்தினம் கலந்து கொள்கி றர்.இதில் அருணா இசைக்குழுவால் இசை யமைக்கப்பட்ட ''பூபாள ராகங்கள்'' பாடல் கள் இரண்டு பாடப்படும்.

அதிஸ்டசாலிகள் மூவருக்கு தங்கப்பரி சில்கள் வழங்கப்படவுள்ளன.சங்கத்தின் செயலாளர் தங்கவடிவேல சுரேந்திரதாஸ் நன்றியுரை நிகழ்த்துவார்.பி.எச்.அப்துல் ஹமத்,திருமதி ஆனந்த ராணி பாலேந் திரா,மகாலிங்கம் சுதாகரன் ஆகியோர் நிகழ் வுகளைத் தொகுத்து வழங்குவர்.

''பூபாள ராகங்கள் –2004'' நிகழ்வு மிக வும் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. லண்டனில் தமிழர்கள் செறிந்து வாழும் இடங்களில் ''ஈழத்துக் கலைஞர்களின் இனிய நிகழ்வு'', ''பூபாள ராகங்கள் –2004'' என்ற பனர்களும் தொங்கவிடப்பட்டுள்ளன.

-ம. சுதாகரன்-



பாண்டிருப்பு ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயவருடாந்தஉற்சவபெருவிழாவையொட்டியகலாசாரநிகழ்வு ஆலய முன்றலில்இடம்பெற்றது. நிகழ்வில் அதிதிகளாக கலந்து சிறப்பித்த டாக்டர் திருமதி. புஸ்பலதா லோகநாதன் உரையாற்றுவதையும், டாக்டர் திருமதி. குமுதினி துரைரெட்ணம் மங்களவிளக்கேற்றுவதையும், செல்வி ஆர். கிசாலினி நடனமாடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்- பாண்டிருப்பு நிருபர்)

# வாடிய மொட்டு

''அம்மா, அப்பா எப்ப வருவார். நீங்கள் சொன்னால் தான் சாப்பிடு வேன் ''

முரண்டு பிடித்தாள் திருவேணி.

இதே கேள்வியைத் திரும்பத் திரும்ப கேட்டபடி பாடசாலைச் சீருடையை கூட மாற்றாது இருந்தாள்.

''ஐயோ! கடவுளே நான் செய்த தவ றுக்கு என் மகளுக்கா தண்டனை?'' வேதனையில் அவள் மனம் புலம்பி யது.

மகளின் கண்கள் கலங்குவதைக் கண்ட தாயார், ''வேணி, அம்மம்மா வின்ரை செல்லப் பிள்ளை எல்லோ!. தாத்தா பிள்ளைக்கு ரிப்பிரிப் வாங்கிக் கொண்டுவருவார். அம்மாவுக்கு காய்ச் சல், கரைச்சல் கொடுக்கக்கூடாது. அப்பா, பிள்ளைக்கு நிறைய காசு சேர்த்துக் கொண்டு வருவார். வாங்கோ சாப்பிடுவோம்'' பேத்தியை சமாளித்த படி அழைத்துச் சென்றார் அன் னம்மா.

வைதேகியின் கண்கள் கலங்கி அழுதபடி அடம்பிடிக்கும் மகளை நோக்கியது. அப்போதுதான் உள்ளே வந்த நாகலிங்கத்தார், ''என்ன பிள்ளை உது, இன்னமும் அதையே நினைத் தபடி அழுகின்றாய். எழும்பு போய் முகத்தைக் கழுவு'' என்று அதட்டி னார்.

''தயவுசெய்து என்னைக் கொஞ்ச நேரம் இதில் இருக்கவிடுங்கோ'' விழி கள் கெஞ்சக் கேட்டாள் வைதேகி.

'ம்..' பெருமுச்சு விட்டபடி நகர்ந்தார் பெரியவர்.

வைதேகி, பெற்றோருக்கு ஒரே




ஒரு பெண். திருமணமாகி சில வருடங் களின்பின் பிறந்ததனால் செல்லம் அதிகம். சுட்டித் தனம் அதிகம் என்றா லும் படிப்பிலும் கெட்டிக்காரியா கவே விளங்கி னாள்.

அப்போது, வைதேகி உயர் தரத்தில் கல்வி கற்றுக் கொண் டிருந்தாள். எதிர்காலத்தில் சிறந்த ஒரு வைத்தியராக வேண்டும் என்ற கனவு அவள் மனதில் வேர் ஊன்றி இருந்ததால் படிப்பில் சிரத்தை யுடன் இருந்தாள். அப்போதுதான் அவள் வாழ்வே தடம்புரளும்படி யான அந்தச் சம்ப வம் நிகழ்ந்தது.

அது வைதேகி யின் திருமணம். தரகர் கந்தசாமி முலமாக அறிமுக மானான் சுகுமார். வெளிநாட்டில் இருந்து வந்திருந்த அவனுக்கு வேக மாக பெண் தேடி னர் பெற்றோர். அந்தநேரம் சிக்கிய வள் தான் வைதேகி. நாகலிங்கத்தாருக் கும் முதலில் மக ளின் படிப்பை குழப்புவதற்கு இஷ் டமிருக்கவில்லை. படிச்சுப்போட்டு இங்கை நிரந்தர நிம் மதியோடை இருக் கலாமே? அவள் அங்கை போனால் நல்லா இருப்பாள்'' என்று எண்ணி தனது சம்மதத்தைத் தெரிவித்தார்.

அவசரமாக நடந்தேறிய அந்த திரு மணத்தில் அவளுக்கு விருப்பம் இருக்க வில்லை. நாட்கள் சில நகர்ந்த பின் அவள் அந்தப் புது வாழ்வோடு ஒன்றிப் போனாள்.

காலம் வேகமாக ஓடியது. அன்று சுகுமார் லண்டனுக்குச் செல்லும் நாள். வைதேகியை உடன் அழைத்துச் செல்ல முடியாத நிலை. தான் போய் வைதேகியை அழைப்பதற்கான ஏற் பாடுகளைச் செய்வதாக வாக்குறுதி கொடுத்தான் சுகுமார்.

காலம் கரைந்தது. ஆரம்பத்தில் அடிக்கடி வந்த கடிதமும் நாளடை வில் தேய்ந்து முற்றுப் பெற்றது. திரு வேணியும் பிறந்தாள். பொறுமையுடன் இருந்த நாகலிங்கத்தார் சம்பந்தி வீட்டாரை நாடினார். அலட்சியப்போக் குடன் கை விரித்தனர்.

கலக்கமுற்று அவர் தவிக்கையிலே காதிலே விழுந்தது ஒரு சேதி; சுகுமா ரிற்கு ஏற்கனவே வெள்ளைக்காரியுடன் திருமணம் முடிந்து விட்டதாகவும், பெற் றோரின் சீதன ஆசையைப் பூர்த்தி செய்யவே வைதேகியை மணந்ததாக வும் அறிந்தனர்.

சீற்றமுற்ற நாகலிங்கத்தார், எப்ப டியோ முறைப்படி விவாகரத்தை வைதே கிக்கு வாங்கிக் கொடுத்தார். ஆனால் வைதேகி உடைந்த மனதுடன் இடிந்து போய்விட்டாள். அவளை ஒத்த வய தினர் உயர் கல்வியைத் தொடருவதை பார்த்து ஏக்கமுற்றாள் . அவளை மீண்டும் கற்றல் பாதையில் திருப்ப முயன்றனர் பெற்றோர். ஆனால், தான் ஏதோ குற்றம் புரிந்து விட்டது போல் உணர்ந்தாள் வைதேகி. அவளும் தாழ்வு மனப்பான்மையால் வீட்டை விட்டு வெளியே வருவதில்லை. யாருடனும் சகஜமாக முன்போல் கலகலப்பாக பேசுவதில்லை. தன்னுள்ளேயே ஒடுங் கிப் போனாள்.

(இவையாவும் கற்பனை)

# இன்றைய எண்வடிவம் உருவாகியது எப்படி?

இன்று உலகம் முழுவதும் பாவனையிலிருந்துவரும் எண்வடிவம் (இலக்கம்) யாரினால் உருவாக்கப்பட்டது. இது குறித்து பலதரப்பட்ட தவறான கருத்துக்கள் பரப்பப்பட்டுள்ளதால் உண்மை தன் கண்ணை மூடிக்கொண்டுள்ளது.

முற்காலத்தில் தமிழருக்கு தமிழ் எண் வடிவம் இருந்தது. உரோமருக்கு உரோமன் எண் வடிவம் இருந்தது. தமிழ் எண் வடிவம் சங்ககாலத்திற்கு முன்னரும், பின்னரும் தமிழ் கூறு நல்லுலகில் புழக்கத்திலிருந்து வந்தமை வரலாறு.


ஆனால், இன்று நடைமுறையிலுள்ள எண்கள் அராபிய எண்கள் என்று தமிழ் நாட்டில் செய்தி பரவியுள்ளது. அங்கு வெளிவந்த நூலிலும் இச்செய்தி பிரசுரமாகியுள்ளது. இது குறித்து யாரும் ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. ஆராய்வதற்கு அக்கறை கொண்டதாகவும் தெரியவில்லை. இக்கதை ஐரோப்பிய நாடுகளிலும் பரவியிருக்கும் போல் தோன்றுகிறது.

அதனால்தான் சில ஐரோப்பிய நாட்டவர் வெவ்வேறான கதைகளைச் சொல்லிவருவதை அறியமுடிகிறது. ஆனால், எந்தக் கூற்றிலும் உண்மை இருப்பதாகத் தோன்றவில்லை. ஒட்டுமொத்தமாக இவை ஏட்டிக்குப்போட்டி கதைகளன்றி வேறல்ல. ஆனால், சொல்லப்படும் வெற்றுக்கதைகளுக்குச் சான்றாக எண்களின் வடிவங்களை படங்களாக வரைந்து காண்பிக்கின்றனர்.

ஆனால், எண்களின் வடிவங்களை படங்களாக வரைந்து காண்பித்தால் மட்டும் போதுமா? இலக்கங்களின் வடிவமைப்பிற்கான பின்னணிகளையும் சொல்ல வேண்டுமே.


கிரேக்கர்களே இன்றைய எண்வடிவத்தை உருவாக்கியதாகக் கூறும் ஒரு ஜெர்மனியர். அவர்கள் கோணங்களிலிருந்து (ANGLE) எண்வடிவங்களை உருவாக்கியதாகவும் சாற்றுகிறார்.

அத்துடன் அவ்எண் வடிவங்களின் படங்களையும் வரைந்து காண்பித்துள்ளார். அதாவது முதலாம் எண் ஒரு கோணத்திலிருந்தும், இரண்டாம் எண் இரண்டு கோணங்களிலிருந்தும், மூன்றாம் எண் மூன்று கோணங்களிலிருந்தும், அவ்வாறே 4,5, 6, 7, 8, 9 எண்களும் அவ்வத்தொகை கோணங்களிலிருந்து உருவாக்கப்பட்டன என்பது ஜெர்மனியரின் படம் சொல்லும் கதை.



(அவரால் வரையப்பெற்ற கோண வடிவ எண்ணுருவின் மாதிரிபடம் இங்கு தரப்பட்டுள்ளது.)

அவ்வாறெனில் இவ் இலக்கங்களை எழுதும் போது கோணங்கள் குறைந்தால் இவற்றின் பெறுமதி செல்லாக்காசாகிவிடுமல்லவா? கோணங்கள் கூடினால் இவ்விலக்கங்களின் பெறுமானம் எப்படி? அவ்வாறாயின் பணக்கொடுப்பனவுகளும் சிக்கலாகி விடுமல்லவா?




மேற்படி ஜேர்மனியர் ஒவ்வொரு இலக்கங்களுக்குமான கோணங்களை கூட்டியும், குறைத்தும் வரைந்திருப்பது அந்த அந்த எண்களின் தொகைக்கான கோணங்களைப் பெறுவதற்காகவே.

நாலாம் எண் வடிவத்தின் கீழ் கோட்டினை நீட்டி வரைந்தால் ஆறுகோணங்கள் தோன்றும். ஏழாம் இலக்கத்தில் அவர் குறுக்கே கோடுபோட்டு எழுதியிருப்பது பிற்கால வழக்கென்பது உலகம் முழுமையும் அறியும். எனினும் வாதத்திற்காக அவர் எழுதியிருக்கும் ஏழாம் இலக்கத்தை எடுத்துக்கொண்டால் அதில் ஏழு கோணங்கள் இல்லை. ஆறு கோணங்கள் மட்டுமே உண்டு.

(வாசகர் நலன் கருதி அவரால் கோண வடிவத்தில் எழுதப்பெற்ற நாலாம், ஏழாம் எண்களிலுள்ள எண்ணிக்கையை சுட்டும் படம் ஒன்று எம்மால் வரையப்பட்டு இங்கு தரப்பட்டுள்ளது.)

இப்படியான குளறுபடிகள் பல. இன்னும் உச்சவேடிக்கை என்னவெனில், இந்தக் கோண எண்வடிவம் ஜெர்மனியில் மட்டுமல்ல, உலகில் எந்த மூலையிலும் புழக்கத்தில் இல்லை என்பதுதான்.

இன்று நடைமுறையில் இருக்கும் எண் வடிவங்களிலுள்ள வட்டம், வளைவு, நெளிவு, சுழிவுகளை அவர் புறக்கணித்துத்தான் கோணவடிவங்களில் எண்களை வரைந்து காண்பித்துள்ளார்.

உலகின் பழைய மொழிகளுள் கிரேக்க மொழியும் ஒன்றென்பது உண்மை. ஆனால், இன்றைய எண் வடிவங்களை கிரேக்கர் உருவாக்கினரென்பதில் உண்மையில்லை.

கி.பி. முதலாம் நூற்றாண்டின் பின்னர் கிரேக்கமும், ஜெர்மனியும், பிரான்ஸும், இத்தாலியும், மத்தியகிழக்கும், உரோம சாம்ராஜ்யத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த காலத்தில், இந்த நாடுகள் உரோம எண்களையே பயன்படுத்தின. கி.பி.9 ஆம் நூற்றாண்டிலேயே உரோமசாம்ராஜ்யம்பிளவுண்டது.

காலப்போக்கில் இன்றைய நடைமுறை எண்கள் அராபியாவில் புழக்கத்திற்கு வரலாயிற்று. அராபியருடன் வாணிப தொடர்பு கொண்டிருந்த மேற்கு நாட்டினரும், உரோமன் எண்களைக் கைவிட்டு இந்த எண்களை பயன்படுத்தத் தலைப்பட்டனர். அவ்வாறுதான் உலகளாவிய ரீதியில் இன்றைய நடைமுறை எண்கள் புழக்கத்திற்கு வந்தன.

ஆங்கிலேயர் முதன் முதல் அராபிய மண்ணிலிருந்தே இன்றைய நடைமுறை எண்களை அறிந்துகொண்ட பின்னணியிலிருந்துதான் இந்த எண்கள் அராபிய எண்கள் என்ற கருத்து பரவியது போலும்.

உண்மை என்னவெனில் முன்பு புழக்கத்திலிருந்த தமிழ் எண்களைப்போன்று இன்றைய எண் வடிவங்களையும் தமிழரே உருவாக்கினர். பண்பாட்டு பரம்பலின் நிமித்தமே இந்த எண்கள் அராபியாவில் புழக்கத்திற்கு வந்ததெனில் மிகை இல்லை.

இன்றைய எண் வடிவம் தமிழ் எழுத்துக்களிலிருந்தும், தமிழெழுத்து உறுப்புகளிலிருந்தும் உருவாக்கப்பட்டது. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மறந்தும், மறைத்தும், மறுக்கப்பட்டும் வரும் உண்மையும் அதுவே.

சொல்லேருழவன்
ம.க.அ.அந்தனிசில்



## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி. நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 7.05 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி. நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 7.30 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி. நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | 7.55 அன்பு மடல் சங்கீதமேடை | 7.55 அன்பு மடல் குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | ஒரு கதையின் கதை |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நிகழ்ச்சி |
| 9.00 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | ஹொலிவூட் மூவி | அரட்டை அரங்கம் |
| 9.30 | இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 கொமடி டைம் | இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 கொமடி டைம் | இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 கொமடி டைம் | இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 கொமடி டைம் | இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 கொமடி டைம் | குட்டி சுட்டி | சமையல் |
| 10.00 | பெப்சி உங்கள் சாய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்கு பாட்டு | நம்மநேரம் | கொண்டாட்டம் | களம் | சப்த ஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கீதங்கள் | இசைத் தென்றல் | திரைவிமர்சனம் | டொப் 10 மூவிஸ் |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | இப்படிக்கு நீங்கள் | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிகெட் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | திரைவானம் | சமையல் | விரியும் சிறகுகள் | மங்கை | ரிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | ரிலாக்ஸ் டைம் | ஸ்டார் ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் எண்ட் மேட்னி | வீக் எண்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | (12 B) | வீக் எண்ட் மேட்னி |
| 2.00 | [illegible] | (அக்சன்) | (கொமடி) | (கிளசிக்) | (பமிலி) | வீக் எண்ட் மேட்னி | வீக் எண்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் எண்ட் மேட்னி | வீக் எண்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் எண்ட் மேட்னி | வீக் எண்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் எண்ட் மேட்னி | வீக் எண்ட் மேட்னி |
| 4.00 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | ஒருகதையின்கதை | சக்தி மேட்னி | கில்லி | விக்கிரமாதித்தன் | ஜீ பூம்பா |
| 4.30 | கார்ட்டூன் நிகழ்ச்சி | ஹி–மேன் | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | தமிழ் கார்ட்டூன் | அன்பு மடல் 4.55 விக்கிரமாதித்தன் | ஒப்போடு |
| 5.00 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் ஸ்பெஷல் | சுப்பர் சீன்ஸ் | என்றும் கலாட்டா | [illegible] | "24" |
| 5.30 | இசைத்தென்றல் | இசைத்தென்றல் | இசைத் தென்றல் | இப்படிக்கு நீங்கள் | இசைத் தென்றல் | ஸ்டாருடன் ஒரு நாள் | அன்பு மடல் 6.55 "24" |
| 6.00 | களம் | இளைய கானம் | ஒப்போடு | 6.15 பாடல்கள்/இளந்தளிர் | ஒப் கிரிகெட் கோல்டன் மொமன்ஸ் | ஸ்டாருடன் ஒரு நாள் | மின்னல் |
| 6.30 | இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 மனைவி | இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 மனைவி | இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 மனைவி | இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 மனைவி | இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 மனைவி | திமி தக்க தா | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | அலைய்ஸ் | வேலன் |
| 7.30 | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | (அக்சன் சீரியல்) | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | ருத்ர வீணை | இளைய கானம் |

# சாக்கடை நாற்றத்தைப் போக்க பன்னீரும் – வர்த்தியும் மாற்றாகா!

மலையக அரசியல் இன்று நாற்றம் அடிக்கும் சாக்கடையாக மாறிவிட்டது. ஊழல், மோசடி, தில்லுமுல்லு, அடாவடித்தனம், அரசியல் காடைத்தனம் இவை எல்லாம் ஒன்றாக மலையகத்தை சீரழித்து வருகின்றன.

உழைக்கும் தொழிலாளர்களின் மறுக்கப்பட்ட உரிமைகளுக்கு குரல் கொடுக்கவும், அவர்களின் அடிப்படைத்தேவைகளைப் பெற்றுக்கொடுக்கவும், தொழில் பாதுகாப்பையும், தொழிலாளர்களின் சேமநலன்களையும் நோக்கமாகவும் கொண்டே தொழிற்சங்கங்கள் உருவாக்கப்பட்டன.

இந்த தொழில் சங்கங்களையும், அதன் தலைவர்களையும் தொழிலாளர்கள் தமது காவல் தெய்வங்களாகவே நம்பினர். இதனால் சாமிக்கு உண்டியல் போடுவது போல், இந்த தொழிற்சங்க ஆசாமிகளுக்கும் மாதா மாதம் தொழிற்சங்க சந்தா என்ற பெயரில் உண்டியல் காணிக்கை செலுத்தி வருகின்றனர். 50 வருடங்களுக்கு முன் 25 சதம், 50 சதம் என உண்டியல் போட்டவர்கள் இன்று 25 ரூபா, 35 ரூபா என தொடர்ந்ததும் உண்டியல் போட்டுக் கொண்டே வருகின்றனர்.

ஆனால், இந்த தொழிற்சங்கத் தலைவர்களும் சளைத்தவர்களா என்ன? காலம் காலமாக வாங்கிச் சாப்பிட்டு உல்லாச சுகபோகம் அனுபவித்து வருபவர்கள் இல்லையா? அவர்களால் எப்படி அதைக் கைவிடவோ, மறுக்கவோ முடியும்.

அவர்கள் மறக்கவில்லை. பரம்பரை பரம்பறையாகப் பெற்று வந்த தொழிற்சங்க உண்டியல் சந்தாவை மட்டும் மறக்கவில்லை. ஆனால், இந்த தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிற்சங்கங்கள் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தையும், தொழிலாளர்களின் சேம நலன்களையும் மறந்துவிட்டது தான் வேடிக்கையும், வேதனையும்.

தொழிற்சங்கக்காரியாலயங்கள் என்பதை விட, இப்பொழுது மலையகத்தில் இயங்கும் எல்லா தொழிற்சங்கக் காரியாலயங்களும் அரசியல் கட்சிக் காரியாலயங்களாகவே இயங்குகின்றன என்பது தான் உண்மை. அதன் தலைவர்களுக்கும் இரட்டைத் தலைகளாகிவிட்டன. ஒன்று உண்மையான தொழிற்சங்கத்தலை மற்றது அரசியல் வாதி என்ற போலியான தலை. உண்மையான தலைக்கு இல்லாத அந்தஸ்து இன்று தற்காலிகமான போலித்தலைக்குத்தான் கிடைத்துள்ளது.

மலையகத்தில் புரையோடிப்போன தொழிற் சங்க ஊழல் மோசடிகளை ஒழித்துக் கட்டி மலையகத்தைப் புரட்சிகரமான ஒரு வழிக்கு இட்டுச் செல்வோம் என்ற நோக்குடனேயே மலையகமக்கள் முன்னணி உருவாக்கப்பட்டது.

துடிப்பான இளைஞர்களும், புத்தி ஜீவிகளும் இணைந்து உருவாக்கிய இந்த அமைப்பு துரிதகதியில் மலையகத்தில் தமக்கென ஓர் இடத்தைப் பிடித்துவிட்டது. மக்களாலும் அங்கீகரிக்கப்பட்டது.

தொழிற் சங்கப்பணியுடன், சமூக வளர்ச்சிப் பணியிலும் ஏக காலத்தில் செல்வாக்கைப் பெற்றது. அதனால்தான் அதன் தலைவர் சிறையில் இருந்தபோதும் முதன்மை வேட்பாளராக அவரைநிறுத்தி வெற்றியடையச் செய்து இமாலய சாதனைபடைத்தனர்.

ஆனால், இன்று மலையகமக்கள் முன்னணித் தலைமை சோரம் போய்விட்டதாக மலையக இளைஞர்களும், ஸ்தாபக உறுப்பினர்களும் வேதனை அடைகின்றனர்.

கையில் பணம் இருந்தால் மலையக மக்கள் முன்னணியில் எந்த ஒரு பதவியையும் பெற்றுவிடலாம் என்ற கீழ் நிலைக்கு தள்ளப் பட்டுவிட்டதாக வேதனைப்படுகின்றனர்.

கட்சியின் தலைமைக்கும், சேவைக்கும் இல்லாத மதிப்பும் மரியாதையும் பணநோட்டுகளுக்கும், சாராயம் போத்தல்களுக்கும் தான் என்பது நாடாளுமன்றத் தேர்தலின் போதும், மாகாணசபைத் தேர்தலின் போதும் உணர்த்தப்பட்டு விட்டது.

கட்சியை ஸ்தாபித்தவர்களுக்கும், தன்னை வளர்த்தவர்களுக்கும் இடுக்கண் வந்த போது தம்முடன் இருந்தவர்களுக்கும் கொடுக்காத முன்னுரிமையை வர்த்தகப் பிரமுகர்களுக்கு தலைமை வழங்குவதாகவும் ஒரு குற்றச்சாட்டு.

அமைப்பு ரீதியாக ஒரு தேர்தலுக்கு முகம் கொடுக்கும்போது அமைப்பின் தலைவர், செயலாளர் எனப்பதவி வழியாக முன்னுரிமை வழங்கப்படுவது தான் நியதி. இப்பதவிகளில் யார் இருக்கின்றார் என்பதைவிட அப்பதவிக்கு மதிப்பளிக்க வேண்டும். இப்பதவிகளில் இருப்பவர்களின் வெற்றிக்கு அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

மாகாண சபையோ அல்லது பிரதேச சபையோ வேட்பாளர்பட்டியலில் முதன்மை வேட்பாளராக இப்பதவிகளில் இருப்பவர்களை அறிமுகப்படுத்தி, ஏனைய வேட்பாளர்கள் அனைவரும் தலைமை வேட்பாளருக்கு ஒருவாக்கைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். தலைமை வேட்பாளருடன் இணைந்து தமது வெற்றிக்கும் பாடுபட வேண்டும்.

ஆனால், மலையக மக்கள் முன்னணித் தலைமை இதனைச் செய்யத்தவறிவிட்டது. வேட்பாளர்களுக்கு கண்டிப்பான கட்டளைகளைப் பிறப்பிக்கும் சக்தியைப் பயன் படுத்தவில்லை. மலையக மக்கள் முன்னணியின் வளர்ச்சிக்கு உழைத்த ஆரம்பகால உறுப்பினர்கள் ஓரம்கட்டப்பட்டு, திடீரென முளைந்த வர்த்தகர்களுக்குப் பக்கபலமாகத் தலைமை செயற்பட்டது என்பதும் மற்றும் ஒரு குற்றச்சாட்டு.

ஒரு கட்சித்தலைவரோ அல்லது செயலாளரோ தோற்கடிக்கப்பட்டால் அது அக்கட்சிக்கு விழுந்த ஒரு பலத்த அடியாகவே அமையும்.

இவர்களைத் தள்ளிவிட்டு யாரோ ஒருவர் வெற்றிபெற்றுவிட்டால் அது கட்சிக்கு கிடைத்த வெற்றியாகிவிட முடியாது.

பண நோட்டுகளுக்கும், சாராயப் போத்தல்களுக்கும், சாப்பாட்டுப் பார்சல்களுக்கும் கிடைத்த வெற்றி என்பது தான் சரி என இளைஞர்கள் கருதுகின்றனர்.

தலைவர்களும், செயலாளர்களும் கட்சியின் கொள்கை விளக்க நோட்டீஸ்களுடன் செல்கின்றனர். ஆனால், முன்பின் தெரியாதவர்கள் ரூபாய் நோட்டுகளுடனும், போத்தல்களுடனும் சென்று வாக்காளர்களை சந்திக்கின்றனர்.



மலையகக் கண்ணோட்டம்

இந்த முட்டாள் சனங்களுக்கு கட்சியும் தேவை இல்லை, கொள்கையும் தேவை இல்லை.

இன்று கட்சியின் கோட்பாடுகளுக்கும், விதிகளுக்கும் கட்டுப்படாமல் பணத்தைக் கொண்டு எதையும் செய்யலாம் என கட்சியின் செயலாளரையே பின்தள்ளியவர்கள், நாளை இந்த அமைப்பின் தலைமைக்கும் குறிவைத்து விலைபேசும் காலம் வரலாம். ஆனால், இதன் பயங்கரமான பின் விளைவுகளை கட்சியின் தலைமை சிந்திக்கத்தவறி விட்டதே, அக்கறை கொள்ளவில்லையே என்பதும் ஆதரவாளர்களின் ஓர் ஆதங்கம்.

இப்படி எல்லாம் மனவேதனைப்படும் மலையக இளைஞர்கள், இந்த அமைப்பின் கொழும்புக்கிளையை உருவாக்கியதைப் பாராட்டாமலும் விடமுடியாது. தலைமை செய்த சில நன்மையான காரியங்களுள் கொழும்புக் கிளையின் பிரதம அமைப்பாளராக தகுதியும் நேர்மையும் உள்ள ஒருவரைத் தெரிவு செய்ததும் ஒன்று. எத்தனை வசதிகள் இருந்தாலும் இராதாகிருஷ்ணன் எம்.பி. அங்கு செல்லும் அனைவரையும் அன்புடன் வரவேற்று அவர்களின் குறைகேட்டு உதவி வருகின்றாராம். ஆனால், ஹட்டன் தலைமையகம் உட்பட பல இடங்களில் இப்படியான ஒரு நிலைமை இல்லை என்றும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இங்கு தோற்கடிக்கப்பட்டவர்கள் எல்லாம் நிராகரிக்கப்பட்டவர்கள் அல்லர். வெற்றி பெற்றவர்கள் எல்லாரும் அங்கீகரிக்கப்பட்டவர்களும் அல்லர் என்பதை தலைமை உணர வேண்டும்.

உள்வீட்டில் மனைவி பிள்ளைகள் பட்டினியால் அடிபட்டு முட்டிமோதிக்கொண்டிருக்கும் போது, தகப்பன் அயல் வீட்டாருக்கு பஞ்சாயத்து நடத்தப்போகிறார் என்று நேரடியாகவே இளைஞர்கள் விரல் நீட்டுகின்றனர்.

அயல் வீட்டாரின் நட்பும், ஆதரவும் கட்டாயம் தேவை. ஆனால் தன்வீட்டில் எந்தச் சச்சரவும் இல்லாத நிலையை ஏற்படுத்த வேண்டும். இதைச் செய்ய மலையக மக்கள் முன்னணித் தலைமை தவறிவிட்டது என்கின்றனர்.

இப்பொழுது இளைஞர்கள் கேள்வி கேட்கமட்டுமல்ல, புதிய ஒரு முற்போக்கு அமைப்பை உருவாக்கி விட்டால் என்ன! என்றும் சிந்திக்க ஆரம்பித்துவிட்டனர்.

ஜே.வி.பி கொள்கை ரீதியாக வரவேற்கத் தக்க ஓர் அமைப்பு அல்ல என்று கூறப்படுகின்ற போதும், அவர்களுடைய கட்டுப்பாடும், கட்சிக்கு அளிக்கும் கௌரவமும், ஊழல் அற்ற சுத்தமான அரசியல் பணியும் அவர்களுக்கு வெற்றியை அளித்தள்ளது.

மலையகத்திற்கு உளுத்துப்போன அரசியல் வேண்டாம் என்றுதான் மாற்றுத்தலைமையாக மலையகமக்கள் முன்னணியை உருவாக்கினோம். எங்களுடைய நோக்கம் நிறைவேறவில்லை. எனவே புதிய இளைஞர் படையணி ஒன்று உருவாகிவருகின்றது. தலைவர்கள் தம்மை திருத்திக் கொள்ளாவிட்டால் மூன்றாவது தலைமை ஒன்று உதயமாகும் என்கின்றனர் இளைஞர்கள்.

செத்துக்கிடக்கும் எலிகளால் ஏற்படும் துர்நாற்றத்தைப் போக்க பன்னீர் தெளிப்பதோ அல்லது ஊது வர்த்தியைத் கொளுத்துவதோ சரிப்பட்டு வராது. அவை தற்காலிகமானவை.

நிரந்தரமாக இச்சாக்கடைகள் துப்புரவு செய்யப்படவேண்டுமானால் செத்துக்கிடக்கும் எலிகள் அப்புறப்படுத்தப்படவேண்டும் என்று இளைஞர்கள் கூறுகின்றனர்.

குறிப்பு:– இக்கட்டுரையாளர் மலையக மக்கள் முன்னணித் தலைமைக்கு ஒரு பகிரங்க வேண்டுகோளாகவே இதனை எழுதி உள்ளார். அமைப்பின் மீது கொண்ட ஆதரவுடனும் சில கசப்பான உண்மைகளை வெளிப்படுத்தி இருக்கின்றார் என்றே தெரிகின்றது. அமைப்பை மறுசீரமைக்க தலைமை நடவடிக்கை எடுக்காவிட்டால் எதிர்காலம் தடுமாற்றம் தான். * * *

– சரா கோகுலன் –

---



## டேஸ்ட்கடை தணிகாசலம்

தணிகாசலம் அண்ணன் கடையில் வியாபாரம் பண்ணிக் கொண்டிருந்தார். அப்போது அங்கே வந்த அப்பாவு தலைவர் பதற்றத்துடன் காணப்பட்டார்.

''வணக்கம் தணி அண்ணே''

''வணக்கம் தலைவரே! என்ன விசயம் இன்றைக்கு வேலைக்குப் போகவில்லையா?''

''என்னங்க அண்ணே வேலை, என்ன பொழைப்பு, எல்லாம் வோனாமுச்சி போச்சி'' என்று சலிப்பாகக் கூறினார் அப்பாவு.

''எப்பவுமே சுறுசுறுப்பாக இருக்கும் நீங்கள் இப்படி அலுத்துக் கொள்வது ஆச்சரியமாக இருக்கே!'' என்றார் தணி அண்ணன்.

''ஆமாங்க அண்ணே! இந்த சங்கம் யூனியன் என்று ஓடி ஓடி களைத்துப் போய் விட்டேன்! எல்லாமே ஏமாற்றுக் காரர்கள் தான்'' என்றார் அப்பாவு கவலையுடன்.

''அப்படி என்னங்க தலைவரே நடந்திச்சு?'' என்று அப்பாவுவின் கவலையில் இவரும் பங்கு கொண்டார்.

''நீங்களே பாருங்க அண்ணே! எங்க தோட்டத்தை தனியார் ஒருவருக்கு கொடுக்கப் போறாங்க, எங்களுடைய தொழில் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லை என்று சங்கப் பிரதிநிதிகளிடம் சொன்னோம். கவலைப்படவேண்டாம். எல்லாத்துக்கும் நம்ப மந்திரி இருக்காரு என்று மார்தட்டினாங்க'' என்றார் அப்பாவு.

''வேறு என்னங்க, அவுங்களுக்கு ஓட்டுப் போட்டோம், சந்தா கட்டுறம். அவுங்கதானே பார்க்க வேண்டும்!'' என்றார் தணி அண்ணன்.

''ஆமாங்க அப்படிச் சொல்லிச் சொல்லியே ஒரு வருஷமா கொன்பரன்ஸ், பேச்சு வார்த்தை என்று இழுத்தடிச்சிப்புட்டாங்க. இப்ப என்னடாவெண்டால் கம்பெனிக் காரங்கள் ஒருத்தருக்கும் தெரியாமல் தனியார் முதலாளி ஒருவருக்கு கொடுத்து விட்டுப் போய் விட்டாங்கள்'' என்றார் அப்பாவு.

''அட அநியாயமே! இப்ப இந்த சங்கத்து ஆளுங்க என்ன செய்யிறாங்க'' என்றார் தணி அண்ணன்.

''அவுங்க என்னங்க அண்ணே செய்வாங்க – என்ன தலைவரே! நாங்களும் முடிந்த வரை முயற்சி எடுத்தோம். கடைசியில அது மந்திரிசபையில் எடுத்த முடிவாம். அதன்படி தோட்டத்தை விற்றுப் புட்டாங்க என கை விரித்து விட்டார்கள்'' என்றார் அப்பாவு.

''அப்பன்னா முந்தி இருந்த கம்பெனி காரங்களே ஊழியர் சேவைக்காலப் பணம், நம்பிக்கை நிதியம், சேவைக் காலப்பணம், பிரசவ சகாயப்பணம் என்று கோடிக் கணக்கில ஏப்பம் உட்டுப்புட்டாங்க. நூற்றுக் கணக்கான சனங்க நடுத்தெருவுக்கு வந்து விட்டாங்கள். இதுதான் சங்கக் காரவுங்க செய்த உதவி இல்லையா?'' என்றார் தணி அண்ணன்.

''அதோட இல்லைங்க அண்ணே! தோட்டத்தில வேலை செய்யிரவுங்கமட்டும் தான் தோட்டத்து லயன்களில் இருக்க முடியுமாம். பென்சன் எடுத்த வயோதிபர்களும், தோட்டத்தில் வேலை இல்லாதவர்களும் லயன்களை விட்டு உடனே வெளியேற வேண்டும் என்று பொலிஸில் வழக்கு வேற போட்டு இருக்காங்க'' என்றார் அப்பாவு தலைவர்.

''காலம் காலமா இந்த தோட்டத்து தேயிலை செடிக்கே உரமானவர்கள் இப்ப அந்தத் தோட்டங்களில் இருந்தே விரட்டி அடிக்கப்படுகின்றனர். இதுக்குத்தான் நம்ப சனங்க ளுக்குச் சங்கமா?'' என்றார் தணி அண்ணன்.



இந்த நேரத்தில் ஓடிவந்தார் மாரி முத்து தலைவர்.

''என்னங்க மாரி அண்ணே! இப்படி தலை தெரிக்க ஓடிவாரீங்க'' என்றார் அப்பாவு தலைவர்.

''அந்த கொடுமையை ஏன் கேட்கிறீங்க தலைவரே! டவுண்பக்கம் இருந்து வந்த காடையர்களும், கிராமத்து ஆளுங்களும் எங்க தோட்டத்து தேயிலையை எல்லாம் பிடுங்கி எரித்து விட்டு, வேண்டிய வேண்டிய மாதிரி வீடுகட்டுறாங்க'' என்றார் மாரிமுத்து.

''என்னது தேயிலையைப் பிடுங்கி விட்டு வீடுகட்டுறாங்களா? அப்பன்னா தோட்டத் துரைகிட்ட ரிப்போட் பண்ணலியா?'' என்றார் தணி அண்ணன்.

''துரைக்கிட்ட ஓடிப்போய்ச் சொன்னோம். அவர் ஏதும் செய்யவில்லை. ஆனால் தோட்டத்து தொழிலாளர்கள் மட்டும் ஒரு தேயிலையையும் பிடுங்க கூடாது, வீடுகட்டக் கூடாது என்று கண்டிப்பா உத்தரவு போட்டு விட்டார். எங்க கண்முன்னாலேயே நாங்க காலம் காலமாக காப்பாத்தி வந்த தோட்டம் போகுது'' என்றார் மாரிமுத்து.

''என்ன செய்வது ஒருகைதட்டி ஓசை வராது. நம்ப தலைவர்மார்களும் நம்பளை அடைவு வச்சி பொழைப்பு நடத்துறாங்க. இனிமேல் நம்பலும் கைகட்டி வேடிக்கை பார்க்க முடியாது. சங்கமும் வேண்டாம், காட்சியும் வேண்டாம். வீட்டுக்கு ஒரு இளைஞர் வாருங்கள். நாமும் போய் தேயிலையைப் பிடுங்கி நமக்கென வீடுகட்டுவோம். நம்மை வெளியேற்ற முற்பட்டால், கிராமத்து சிங்களவர்களையும் வெளியேற்று என்போம். புறப்படுங்கள்'' என்றார் தணி அண்ணன்.

சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பது போல் சீறிப் பாய்ந்தது இளைஞர் படை. இப்போது தொழிலாளர்களின் வீடுகளும் முளைத்து விட்டன செய்வதறியாது திகைத்து நிற்கிறது தோட்ட நிர்வாகம்.

''சக்கை போடு போடுறது, நம்ப காட்டில மழை பெய்யுது. இப்படித்தான் ஒவ்வொரு தோட்டங்களிலும் புரட்சி வெடிக்க வேண்டும்'' என்று ஊக்கப்படுத்தினார் தணிகாசலம் அண்ணன்.

# குற்றப்பின்னணியுள்ள அமைச்சர்கள்

# மன்மோகன் அரசுக்குத் தலைவலி

காங்கிரஸ் தலைமையிலான மத்திய கூட்டணி அரசை நெருக்கடிக்குள்ளாக்க எதிர்க்கட்சியான பி.ஜே.பி எடுத்திருக்கும் புதிய உபாயம், மத்திய அமைச்சரவையிலுள்ள குற்றப்பின்னணியுள்ள அமைச்சர்களுக்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்தி உள்ளது.

கொலை, கற்பழிப்பு முதலிய கிரிமினல் குற்றங்கள் சாட்டப்பட்டுள்ள பலர் மன்மோகன் சிங்கின் அமைச்சரவையில் உள்ளனர். இவர்களில் பலர் காங்கிரஸ்கட்சியை அல்ல, அதன் கூட்டணிக்கட்சியை சேர்ந்தவர்களே!

முன்னாள் பீகார் முதல்வர் லல்லு பிரசாத் யாதவின் ராஷ்ரிய ஜனதா தளம் கட்சியில் உள்ள 21 எம்.பிக்களில் பலர் குற்றப்பின்னணியுடையவர்கள்.

இதைவிட அண்மையில் இந்திய அரசு வட்டாரங்களை உலுக்கிய பிரச்சினைக்குரியவர் ஜார்கண்ட் மாநிலக்கட்சியான ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவரும் மத்திய நிலக்கரி, எரிகு அமைச்சருமான ஷிபு ஷொரேன் ஆவார்.

இவரது கட்சி பீகாரிலிருந்து ஜார்கண்ட் மாநிலம்பிரிவதற்காக கடுமையாக போராடியது. இந்தப்போராட்டத்தில் பல ஆயுதக்கும் பல்களுக்கும் உதவியது.

1975 இல் சிகுடி என்ற இடத்தில் நடந்த படுகொலைகளில் ஷொரேன் சம்பந்தப்பட்டிருந்தார் என 1986 இலேயே இவருக்கு எதிராக கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது.

எனினும் இவரது கட்சி மாநிலத்தில் செல்வாக்குள்ள கட்சி என்பதால் எப்படியோ அந்த வாரண்ட்டிலிருந்து இவர் தப்பி இருந்தார்.

1991–1996காலப்பகுதியில்நரசிம்மராவின் அரசு கவிழ இருந்தபோது இவரது கட்சியினருக்கு லஞ்சம் வழங்கி இவரது கட்சி எம்.பிக்களின் வாக்குகளை நாடாளுமன்றில் பெற்று ராவ் அரசு தப்பிப்பிழைத்தது.

பின்னர் ஷொரேன் பி.ஜே.பி முக்கிய கூட்டாளியானர் லல்லு யாதவை எதிர்த்து பி.ஜே.பியுடன் இணைந்து ஜார்கண்ட் மாநிலத்தை உருவாக்கினார். எனினும் மாநிலமுதல்வர் பதவியை ஷொரேனுக்குத்தர பி.ஜே.பி மறுத்துவிட்டது. இதனால் கசந்த பி.ஜே.பி—ஜே.எம்.எம் உறவு காங்கிரஸ் கூட்டணியில் ஜே.எம்.எம் சேர்வதில் போய்முடிந்தது.

கடந்த லோக்சபா தேர்தல்களில் ஜார்கண்ட் மாநிலத்தை ஆளும் பி.ஜே.பியை தோற்கடிப்பதில் காங்கிரஸ் – ஜே.எம்.எம் – லல்லு கூட்டணி வெற்றிகண்டது. ஜே.எம்.எம் லோக்சபாவில் 5 எம்.பிக்களைக் கொண்டுள்ளது. ஷிபு ஷொரேன் நிலக்கரி அமைச்சரானார்.

ஷொரெனை பழிதீர்க்க எண்ணிய பி.ஜே.பியின் ஜார்கண்ட் அரசு பழைய 1986 ஆம் ஆண்டு வழக்கை தூசிதட்டி எடுத்தது. விளைவு அவர் மீது ஜார்கண்ட் நீதிமன்று வாரண்டை பிறப்பித்தது. இதனால் கைது செய்யப்படுவதை தவிர்க்க அவர் தலைமறைவானார்.

ஆனால், அவரது போதாதகாலம் ஜார்கண்ட் அரசு லோக்சபா கூட்டத்தொடர் நடக்கும் காலப்பகுதியில் சரியாக கைதுவாரண்டை பிறப்பிப்பிக்கும் வகையில் நீதிமன்றை அணுகியது. ஆக அமைச்சர் தலைமறைவானது லோக்சபாவுக்கு அவர் வராதது எல்லாவற்றையும் பி.ஜே.பி கூட்டணி சரியாக பயன்படுத்தியது. மத்திய அரசுக்கு பெரும் நெருக்கடி உண்டானது.

கேள்வி நேரத்தில் நிலக்கரி அமைச்சு மீதான கேள்விகளுக்கு பதிலளிக்க அமைச்சர் வராதது குறித்து எதிர்கட்சிகள் அமளிதுமளியை ஏற்படுத்தின. இந்திய வரலாற்றிலேயே மத்திய அமைச்சர் ஒருவர் இவ்வாறு தலைமறைவானது இதுவே முதற்தடவை. மன்மோகன் சிங்பாடு பெரும் திண்டாட்டமாகியது.

இதற்கிடையில் தனக்கு எதிரான கைது வாரண்டை எதிர்த்து பிணைகோரி ஷொரேன் மனுதாக்கல் செய்தார். எனினும் ஜார்கண்ட் அரசால் செல்வாக்கு செலுத்தப்பட்ட ஜார்கண்ட் நீதிமன்றம் பிணைமனுவை விசாரிக்காமல் ஒத்திவைத்துக்கொண்டே வரலாயிற்று. நெருக்கடி அதிகரிக்கவே மன்மோகன் சிங் வேறு வழியின்றி ஷொரேனை ராஜினாமா செய்யக்கோரினார். ஷிபு ஷொரேன் அவ்வாறு ராஜினாமா செய்ததையடுத்து விடயம் முடிவுக்கு வந்துள்ளது.

எனினும் ஷிபு ஷொரேனுடன் சிக்கல் தீர்ந்துவிடப்போவதில்லை. லல்லுவின் கட்சியிலும், காங்கிரஸிலும் பல குற்றப்பின்னணியுள்ள அமைச்சர்கள் உள்ளனர். இவர்களின் வழக்குகளையும் விசாரிக்கமுற்பட்டால் மேலும் சிக்கல் ஏற்படும். அமைச்சரை ராஜினாமாச்செய்ய பிரதமர் கோரினால் குறித்த கட்சி அரசிலிருந்து விலகலாம்.

ஆனால், ஷிபு ஷொரேன் விடயத்தில் அவரது கட்சியின் கோபம் பி.ஜே.பி மீது திரும்பியுள்ளது. அடுத்த ஆண்டு தொடக்கத்தில் ஜார்கண்டில் மாநிலசட்டசபை தேர்தல் நடக்கவுள்ளது. இந்தநிலையில் பி.ஜே.பி அரசை வீழ்த்தியே தீருவோம் என ஷொரேன் சூளுரைத்துள்ளார். தொடர்ந்தும் காங்கிரஸ் அரசுக்கு உதவப்போவதாகவும் அவரது கட்சி கூறியுள்ளது.

ஏற்கனவே ஹரியானாவுடன் செய்த நதிநீர் பங்கீட்டு ஒப்பந்தத்தை பஞ்சாப்பின் காங்கிரஸ் அரசு ரத்துச்செய்ததால் ஹரியானாவில் காங்கிரஸ் சிக்கலை எதிர்கொள்கிறது. மத்தியிலும் பஞ்சாபிலும் காங்கிரஸ் அரசுகளே ஆள்வதால் ஹரியானாவுக்கு நீர் தருவது காங்கிரஸின் பொறுப்பு என ஹரியானாவின் முதல்வர் கூறியுள்ளார். இது வேறு பிரதமர் மன்மோகனுக்கு தலைவலியைத்தந்துள்ளது. காவிரி நீர் பகிர்வில் கர்நாடாவின் காங்கிரஸ் அரசை நிர்ப்பந்தித்து காவிரி நீரைப் பெற்றுத்தரவேண்டும் என்ற ஜெயலலிதாவின் தாக்குதலுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும்போது இது மற்றொரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

இதுதவிர பட்ஜெட்டில் அன்நிய முதலீட்டை தொலைத்தொடர்பு, விமானத்துறை, காப்பீடு ஆகிய துறைகளில் அதிகரிக்க இடமளித்ததால் இடதுசாரிகள் மறுபுறம் பிரதமரையும், நிதி



மன்மோகன் சிங்

யமைச்சரையும் பிய்த்து எடுக்கின்றனர். ஆக மன்மோகன் அரசு பல சிக்கல்களில் மாட்டி தடுமாறும் நிலையில் உள்ளது. கூட்டணி அரசியல் காங்கிரஸுக்குப் புதிது. அதைசரிவர காங்கிரஸால் நடத்தமுடியாது என்ற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகள் ஒருவேளை நிஜமாகிவிடலாம்.

— எஸ்.சுரேந்திரஜித் —

---

# ராசி பலன்

இவ்வார 'ராசிபலன்' 02–08–2004 , 08 –08–2004

பொ. சந்திரன்

## இவ் வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சுக்கிரன் சனி |
| | செவ்வாய் மகம் கேது<br>சுக்கிரன் மிருகசீரிடம் திருவாதிரை செவ்+ராகு<br>புதன் ஆயில்யம் புதன்<br>சூரியன் ஆயில்யம் புதன்<br>குரு உத்தரம் சூரியன்<br>சனி புனர்பூசம் குரு | | புதன் சூரி |
| | | | செவ் குரு |
| | | கேது | |

ஆடி 18 முதல் ஆடி 24 வரை

சந்திரன் கும்பம் முதல் மேடம் வரை

**மேடம் : அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

ராசிநாதன் செவ்வாய் ஐந்தில் இருப்பது நல்ல பலனைச் செய்யாது. மேலும் கேதுவின் சாரத்தில் இருப்பதும் நல்லதல்ல. ராசியில் ராகு இருப்பதும் சிறப்பில்லை. எடுத்த முயற்சி தாமதமாகலாம் அல்லது தடைப்படலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2, 7) உரிய சுக்கிரன் 3 இல் இருப்பது சிறப்பானது. கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. ஆனால் கேது 7 இல் இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. சூரியன், புதன் 4 இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். (விதிவிலக்கு) தொழிலுக்குரிய சனி மூன்றில் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். குரு ராசியைப் பார்ப்பதால் ஓர் அளவு ஆறுதல் உண்டு. சூரியனோ, புதனோ தனித்தனிய நாலாம் வீட்டில் நன்மை செய்ய மாட்டார். ஆனால் 4 இல் இணைவதால் நன்மை உண்டு (சாதக அலங்காரம்).

**இடபம் : கார்த்திகை 2,3,4. ரோகினி, மிருகசீரிடம் 1,2**

ராசிநாதன் சுக்கிரன் இரண்டில் இருப்பது சிறப்பானது. மேலும் ஆரம்பத்தில் செவ்வாயின் நட்சத்திரத்திலும். பின் ராகுவின் நட்சத்திரத்திலும் இருப்பது அதாவது பகையில்லாத நட்சத்திரமாதலால் நன்மை செய்யலாம். உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். (2,5) உரிய புதன் மூன்றில் இருப்பதால் கையில் பணம் இருக்காது. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டமாட்டார். நாலுக்குரிய சூரியன் மூன்றில் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். (7, 12) உரிய செவ்வாய் 4 இல் இருப்பதால் திருமண வாய்ப்பு தாமதமாகலாம். தொழிலுக்குரிய சனி இரண்டில் இருப்பதால் அதாவது சனி 3, 6, 11 ஆகிய வீடுகளில் நன்மை செய்யும். ஆகவே தொழில்துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 2 இல் இருப்பதால் நல்ல பலனைச் செய்யும். மேலும் புதன் தன் சொந்த நட்சத்திரத்தில் செயல்படுவதால் உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். வீடு, வாகனம் லாபம் தரும். கையில் பணம் இருக்கும். (7,10) உரிய குரு மூன்றில் இருப்பதால் திருமண வாய்ப்பு தாமதமாகும். தொழில்துறையில் பின்னடைவு வரவாய்ப்புண்டு. 7ம், 10ம் ராசிகளைச் சனி பார்ப்பதால் அந்தந்த வீடுகளால் வரக் கூடிய நல்ல பலனைப் பாதிக்கலாம். இரண்டாம் வீட்டில் சூரியன் நன்மை செய்யமாட்டார். ஆனால், புதன் நன்மை செய்வார். மேலும் இரண்டுக்குரிய சந்திரன் கும்பம் முதல் மேடம் வரை அதாவது 9, 10, 11ம் வீடுகளில் சஞ்சரிப்பார். ஆகவே 9ம், 10ம், 11ம் வீடுகளில் சஞ்சரிப்பதால் கையில் பணம் இருக்கும்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் கும்பம் முதல் மேடம் வரை அதாவது எட்டு, ஒன்பது, பத்தாம் வீடுகளில் சஞ்சரிப்பார். ஆகவே வார முற்பகுதியை விட்டு நடுப்பகுதியிலும் பிற்பகுதியிலும் நன்மை செய்வார். ராசியில் புதன், சூரியன் இருபரும் 1 இல் இணைவது நன்மைபயக்கும் (சாதக அலங்காரம்). உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். கல்வியில் ஆர்வம் இருக்கும். இரண்டுக்குரிய சூரியன் ராசியில் இருப்பதால் கையில் பணம் இருக்காது. நாலுக்குரிய சுக்கிரன் 12 இல் இருப்பதால் சுக்கிரன் 12ல் நன்மை செய்யும். ஆகவே வீடு, வாகனம் லாபம் தரும். (7, 8) உரிய சனி 12 இல் இருப்பதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. பத்துக்குரிய செவ்வாய் 2 இல் இருப்பதால் தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிக்குரிய சூரியன் 12 இல் இருப்பது விரயமான அதாவது செலவானகாலம். மேலும் புதனின் நட்சத்திர சாரத்தில் இருப்பது நல்லது. ஒரு அளவு ஆறுதல் உண்டு. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். பக்க உதவிகள் கிடைக்கலாம். (2, 11) உரிய புதன் 12 இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. நண்பர்களால் செலவு இருக்கும். மூத்த சகோதரத்துக்கும் கூடாது. (3, 10) உரிய சுக்கிரன் 11 இல் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். இளைய சகோதரம் வெளிநாடு செல்லும் பலன் உண்டு. (4, 9) உரிய செவ்வாய் ராசியில் இருப்பதால் பெற்றோருக்கு நல்லதல்ல. வீடு, வாகனங்களால் செலவு ஏற்படலாம். (6, 7) உரிய சனி 11 இல் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. பகைவர் நண்பர்களாகலாம். இருப்பினும் ராசியில் குருவும், ராசியை சனி பார்ப்பதும் பல தடைகளை ஏற்படுத்தலாம்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 11 இல் இருப்பதால் நல்ல பலனை ஏற்படுத்தும் (தரும்). மேலும் தன் சொந்த நட்சத்திசாரத்தில் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். (2,9) உரிய சுக்கிரன் 10 இல் இருப்பதால் மேலும் சனியோடு கூடியிருப்பதால் கையில் பணம் இருக்காது. தகப்பனுக்கும் நல்லபலன் இருக்காது. (4, 7) உரிய குரு 12 இல் இருப்பதால் அதாவது குரு மறைவதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். சனியின் பார்வையால் பாதிக்கப்படும் இடங்கள் 4ம், 7ம் வீடுகள் ஆகும். ஆகவே முக்கிய வீடுகளால் வர இருக்கும் நன்மைகள் பாதிக்கப்படலாம். இருப்பினும் அயல் நாடு செல்லும் யோகம் உண்டு.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

ராசிநாதன் சுக்கிரன் 9 இல் இருப்பது விசேஷம். மேலும் ஆரம்பத்தில் செவ்வாயின் சாரத்திலும், பின் ராகுவின் சாரத்திலும் இருப்பது பலனில் பெரிதாக மாறுதல் ஏற்படாது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரேக்கியம் உண்டு. ஆலய வழிபாடு அமையும். (2, 7) உரிய செவ்வாய் 11 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. ஆனால் ராகு, கேதுக்களின் தொடர்பு நல்ல பலனைச் செய்யாது. மன அமைதியை பாதிக்கலாம். குடும்பத்தில் வெளியார் தலையீடு இருக்கலாம். (4, 5) உரிய சனி 9 இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தராது. 9 ம் இடம் பொதுவாக நல்லதாக இருப்பதும் குறிப்பாக சனிக்கு நல்லதல்ல. சில நூல்கள் நல்லதாகக் கூறியும் இருக்கின்றன. 10ம் இடத்தில் சூரியன், புதன் இணைவு தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும்.

**விருச்சிகம்: விசாகம் 4, அனுசம், கேட்டை**

ராசிக்குரிய (1, 6) மற்றும் ஆறாம் வீட்டுக்குரிய, செவ்வாய் 10 இல் இருப்பதால் உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். பழைய கடன் தீரலாம். மேலுமு கேதுவின் சாரத்தில் இருப்பதால் நல்ல பலனைக் குறைக்கக் கூடும். (2, 5) உரிய குரு 10 இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (3, 4) உரிய சனி எட்டில் இருப்பதால் அதாவது அட்டமத்துச் சனி நீங்கச் செய்து விடும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். இளைய சகோதரத்துக்கும் கூடாது. (7, 12) உரிய சுக்கிரன் 8ல் இருப்பதால் குறிப்பாக சுக்கிரன் எட்டிலோ, 12 இலோ மறைவதில்லை. நல்ல பலனைக் கொடுக்கலாம். 10க் குரிய சூரியன் 9 ல் நல்ல பலனைச் செய்வர். தொழிலில் பெரிதாக லாபம் இருக்காது.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1, 4) உரிய குரு 9இல் இருப்பது விசேஷம் எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. ஆலய வழிபாடு அமையும். வீடு, வாகனம் லாபம் தரும். தாய்க்கு நல்லது. மேலும சூரியனின் நட்சத்திரசாரத்தில் இருப்பது சிறப்பானது. குரு ராசியைப் பார்ப்பது நல்லது. சனி ராசியையும், குருவையும் பார்ப்பது நல்ல பலனைக் குறைக்க இடம் உண்டு. (2, [illegible] உரிய சனி 7 இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. (7, 1[illegible] உரிய புதன் 8 இல் இருப்பது திருமண வாய்ப்பை பாதிக்கலாம். தொழில்துறையில் பின்னடைவு வரவாய்ப்புள்ளது. இது பொதுவான பலன் குறிப்பது. 8இல் சூரியன், புதன் சேர்வது நல்ல பலனைத் தரும் என்கிறது சாதக அலங்காரம் எனும் நூல்.

**மகரம்: உத்தராடம்2,3,4,. திருவோணம், அவிட்டம்1,2**

(1,2) உரிய சனி 6 இல் இருப்பது சிறப்பானது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. கையில் பணம் இருக்கும். மேலும் குருவின் நட்சத்திரசாரத்தில் இருப்பது சிறப்புடையது. (4,11) உரிய செவ்வாய் 8 இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். தாய்க்கும் நல்லதல்ல. நண்பர்களால் தொல்லை வரக்கூடும். (5, 10) உரிய சுக்கிரன் 6 இல் இருப்பதால் தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. குழந்தைகளின் செயற்பாடு திருப்திதராது. 7 இல் சூரியன், புதன் இருப்பினும் குரு 8 இல் மறைவதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். இராசிக்கு இரு புறமும் இரண்டு வீடுகள் வெற்று இடம், அதைஅடுத்து ராகு, கேதுக்களின் அடைப்பு மன அமைதியைப் பாதிக்ககூடிய குறையும் கூட.

**கும்பம்: அவிட்டம்3,4 சதயம், பூரட்டாதி 1,2,3.**

ராசிக்குரிய சனி 5 இல் இருப்பதால் நச்சுச் சனி என்பர். எடுத்த முயற்சி பாதிக்கலாம். உடல் ஆரோக்கியம் சீர்கெடலாம். குருவின் நட்சத்திரசாரத்தில் இருப்பது ஓர் அளவு ஆறுதல் உண்டு. ராசியை குரு பார்ப்பதால் எந்த இடர்வரினும் பாதுகாப்பு உண்டு. (2, 11) உரிய குரு 7 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மூத்த சகோதரங்களுக்கும் நல்லது. (3, 10) உரிய செவ்வாய் 7 இல் இருப்பதால் தொழில் பாதிக்கலாம். குரு இருப்பதால் ஆறுதல் உண்டு. 7க்குரிய சூரியன் 6இல் இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. ஆனால் 7ம் வீட்டை சனி பார்ப்பதால் குடும்ப அமைதி பாதிக்கலாம். திருமணப் பேச்சு ஆகிறமாதிரிவந்து ஆகாமல் போகும்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

(1, 10) உரிய குரு 6 இல் இருப்பதால் எடுத்த முயற்சி தடைப்படலாம். உடல் ஆரேக்கியம் தடைப்படலாம். சூரியனின் சாரத்தில் இருப்பது ஒரு ஆறுதலைத் தரலாம். தொழில்துறையில் பின்னடைவு வர வாய்ப்புண்டு. மேலும் ராசியையும், ராசிநாதனையும் 10 ம் வீட்டையும் சனி பார்ப்பது நல்ல பலனைத் தராது. மன அமைதியைப் பாதிக்கலாம். (2, 9) உரிய செவ்வாய் 6 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். பிதாவுக்கும் நல்லது. செவ்வாய் 6 ம் வீட்டில் நல்ல பலனைத் தரும். (4, 7) உரிய புதன் 5 இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். திருமண வாய்ப்பு உண்டு. ஆறுக்குரிய சூரியன் 5 இல் இருப்பதால் பகைவருக்கு பயப்படும் நிலையைக் கொடுக்கும். கடன்காரருக்கும் பயப்படும் நிலையைக் கொடுக்கலாம்.

# சங்குக் கழுத்துக்கு சில சங்கதிகள்...

பொதுவாக பெண்களின் கழுத்தைச் சங்குக்கு ஒப்பிடுவார்கள். ஆனால் அழகான கழுத்து என்பது எல்லோருக்குமே அமைந்து விடுவதில்லை. பார்த்தவுடன் எமது கண்களுக்கு பளிச் எனத்தெரிவது முகமும் கண்களும் தான் என்றாலும் அடுத்தபடிதெரிவது கழுத்துத்தானே?



கழுத்து என்பது முகத்துக்கு அடுத்தபடியாக நாம் பராமரிக்க வேண்டிய ஒன்றாகும். ஆனால் முகம் மட்டும் அழகாக இருந்து கழுத்தில் மருக்கள் இருந்தால் பார்க்க அழகாக இருக்காது அல்லவா?

சிலருக்குக்கழுத்து அழகாகஇருந்தாலும் அதில் கரும்புள்ளிகளும்,மருக்களும் தோன்றி அந்த அழகைப் பாதிக்கும். இவ்வாறு கரும்புள்ளிகள், மருக்கள் தோன்ற ஆரம்பிக்கும்போதே சிகிச்சை பெற்றுக் கொண்டால் மேலும் பரவாமல் இருக்கும்.

இந்த மருக்கள் ஏற்பட முக்கிய காரணம் சுத்தமின்மை மற்றும் அதிகமான நகைகளைத் தொடர்ந்து அணிந்து கொண்டிருத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். மருக்கள் மற்றும் கரும்புள்ளிகளை நீக்க இதற்கென்று தயாரிக்கப்பட்ட கிரீம் உள்ளது. இதைத் தொடர்ந்துதடவிவர கரும்புள்ளிகளும், மருக்களும் அடியோடு நீங்கிவிடும்.

கழுத்து அழகைப் பாதிக்கும் மற்றொரு காரணம் தைரொயிட் சுரப்பியால் ஏற்படும் பாதிப்பு ஆகும். தைரொயிட் சுரப்பி கழுத்துப் பகுதியில் உள்ளதால் இச்சுரப்பியைத் தூண்டும் வகையில் கழுத்தை மேலும், கீழும், பக்கவாட்டிலும் மெல்ல சாய்த்தல் வேண்டும். இப்படிப் பலமுறை செய்யலாம். வெதுவெதுப்பான நீரில் துணியை நனைத்து கழுத்தில் அதை அப்படியே இரண்டு சுற்றுக்கள் வருவது போலச்சுற்றி 10முதல் 15 நிமிடங்கள் வரை விடவேண்டும். தினமும்ஒருவேளை இப்படிச் செய்துவர பலன் தெரியும்.

யோகாசனப் பயிற்சிகளின் மூலமும் இதைக் குணப்படுத்த முடியும். தனுராசனம், சர்வாங்காசனம் போன்றவை இதற்கு நல்ல பலன் தரும்.

அழகுக் கலை நிபுணரின் ஆலோசனையுடன் உணவுக்கட்டுப்பாடு மேற்கொள்ளுதல் வேண்டும். பச்சைக்காய்கறிகள்,பழச்சாறு, சொக்லட் போன்றவைகளை அதிகளவில் உணவில்சேர்த்துக்கொள்ளலாம்.

சிலருக்கு கவரிங் நகைகளை அணிவதால் ஒவ்வாமை வரும் வாய்ப்பு உண்டு. அவ்வாறு ஒவ்வாமை வருபவர்கள் என்றால் கவரிங் நகைகளைத் தவிர்ப்பது சிறந்தது. அப்படி இல்லையென்றால் ஒவ்வாமையினால் ஏற்படும் புண்களும், அரிப்பும் அருவருப்புத் தருவதோடு ஆரோக்கியத்தையும் பாதிக்கவல்லது.

மேலும் பாலாடை, குங்குமப்பூ கலந்து தடவி 30 நிமிடம் கழித்துக் கழுவினால் சிறு சிறு கரும்புள்ளிகள் மறையும்.

முட்டை ஒன்றின் வெள்ளைக்கருவோடு, ஒரு கரண்டி தேன் கலந்து கழுத்தில் தடவி அரை மணி நேரம் பொறுத்துக் கழுவினால் சுருக்கங்கள் மறைவதைத் தவிர்க்கலாம்.

எனவே சகோதரிகளே! உங்கள் சங்குக் கழுத்தை பாதுகாக்கும் முறை தெரிந்துவிட்டதல்லவா? இனியென்ன மேலும் மேலும் அதனை மெருகூட்ட மேற்கூறியவற்றை கையாளுங்கள் பயன்பெறுங்கள்.

*****

# டிப்ஸ்

*தோசைக்கல்லில் சிறிதளவு எண்ணெய் விட்டு சூடாக்கி, அதில் பாதி பெரிய வெங்காயத்தை வெட்டி தேயுங்கள். பின்பு அதே தோசைக்கல்லில் மாவை ஊற்றி தோசை சுட்டால், கல்லில் தோசை ஒட்டாது.

*பபிள்கம் துணியில் ஒட்டிக்கொண்டால், அந்த இடத்தில் ஐஸ்கட்டி ஒன்றை வைத்து சிறிது நேரம் தேயுங்கள். பின்பு கூர்மையான கத்தியால் சுரண்டி எடுத்தால், பபிள்கம் வந்துவிடும்.

*முட்டைக்கூழ் தரையில் சிந்தினால், உடனே சிறிதளவு உப்பைத் தூவி விடுங்கள். பின்பு எளிதாகச் சுத்தப்படுத்திவிடலாம்.

*இட்லி, தோசை மா மீதம் வந்தால் அதில் ஒரு வெற்றிலையைப் போட்டு வையுங்கள். அதிகமாகப் புளித்துப்போகாது.

*அரிசி கழுவிய நீரில் பாகற்காயை நறுக்கி, கழுவிச் சமைத்தால், பாகற்காயின் கசப்புத் தன்மை குறையும்.

*உருளைக்கிழங்கு வேக வைக்கும் நீரில் நாலைந்து சொட்டு சமையல் எண்ணெய் விடுங்கள். உருளைக்கிழங்கு விரைவில் வெந்துவிடும்.

*மிக்சியின் 'பிளேட்' கூர்மையாக இல்லாவிட்டால், சிறிதளவு உப்பைப் போட்டு,மாதம் ஒருமுறை மிக்சியை ஓட விடுங்கள். மிக்சி கூர்மையாகிவிடும்.

*கேரட் சாறுடன் மிளகு தூளைச் சேர்த்து தேன் கலந்து தொடர்ந்து அருந்தி வந்தால் தேவையில்லாத ஊளைச்சத்து குறைந்து உடல் அழகாக மாறும்.

*உடலில் தீக்காயம் ஏற்பட்டால் தேங்காய் எண்ணெயையும், தெளிந்த சுண்ணாம்பு நீரையும் சம அளவி கலந்துகொண்டு புண்ணின் மீது தடவலாம். மீன் எண்ணெயை சுத்தமான துணியில் நனைத்தெடுத்து நெருப்புச்சுட்ட காயத்தின் மீது போடலாம்.

# சமையல் குறிப்பு

## சோயா கட்லெட்

1/2 கிலோ உருளைக்கிழங்கை வேக வைத்து தோல் நீக்கி தேவையான அளவு உப்புத் தூள் சேர்த்துப் பிசைந்துகொள்ளவும். ரஸ்க் அல்லது உலர்ந்த ரொட்டியைத் தூள் செய்து 2 கப் சேகரித்துக்கொள்ளவும். 1/2 கப் அளவு மல்லித்தளை, 1/4 கப் அளவு புதினா இலை, 4 பச்சை மிளகாய், இஞ்சி 2 துண்டு போன்றவற்றை மிகச் சிறியதாக நறுக்கிக்கொள்ளவும். 50கிராம் கரட், ஒரு பெரிய வெங்காயம், 50கிராம் பீன்ஸ் ஆகியவற்றையும் சிறியதாக நறுக்கிக்கொள்ளவும். 1 மேசைக் கரண்டி சீரகத்தை வறுத்து தூள் செய்து கொள்ளவும். 3 ரொட்டித் துண்டுகளை ஒரு கப் பாலில் நனைத்து, நன்றாகப்பிழிந்து வைத்துக்கொள்ளவும்.

கட்லெட்டின் உள்ளே வைக்கும் பூரணம் தயாரிக்க, 1 லீட்டர் பாலைக்காய்ச்சி 125 கிராம் சோயா செய்துகொள்ளவும். பாதாம் பருப்பு, பிஸ்தா பருப்பு, முந்திரிப்பருப்பு, திராட்சை ஒவ்வொன்றிலும் 25 கிராம் எடுத்து அரைத்துக்கொள்ளவும். நறுக்கிய பீன்ஸ் , கரட் போன்றவற்றை ஆவியில் வேக வைத்து, அதனுடன் நனைத்த ரொட்டித் துண்டுகளையும் சேர்த்துப்பிசைந்து கொள்ளவும். சட்டியை மிதமாகக் காயவைத்து 2 மேசைக்கரண்டி நெய் ஊற்றி, சோயாவைப் போட்டு, பொன்னிறமாக வறுத்து இறக்கிக் கொள்ளவும். இத்துடன் காய்கறி கலவையையும், அரைத்த பருப்புக் கலவையையும் தேவையான உப்பும் சேர்த்து மெதுவாகப் பிசைந்து கொள்ளவும்.

பிசைந்து வைத்துள்ள உருளைக்கிழங்கை கிண்ணங்களாகச் செய்து அதனுள் பூரணத்தை வைத்துக்கட்லெட்டுகளாக செய்து ரொட்டித் தூளில் புரட்டி எடுத்து வைத்துக்கொள்ளவும். சட்டியில் 2 கப் சமையல் எண்ணெயை ஊற்றி, காய வைத்து கட்லெட்டுகளையும் பொன்னிறமாகப் பொரித்து எடுக்கவும்.

## இவ்வார பொன்மொழி

வாழ்க்கையில் வெற்றி பெறுவது பெரிய காரியமல்ல. வாழ்க்கை என்பதே துணிச்சல் நிறைந்த முயற்சி என்பது தான் பொருள். துவண்டுவிடாமல் போராடப் பழகிக்கொண்ட எந்த ஒரு மனிதனும் வாழ்க்கையில் எளிதில் வெற்றிபெறலாம்.

ஹெலன் கெல்லர்




# உங்களுக்கு கோபம் வருகிறதா?

உங்களுக்குக் கோபம் வருகிறதா? அப்படியென்றால் உங்களுக்கு ஏதோ குறை உள்ளது என்று அர்த்தம். அதனை உங்களாலேயே சரியாகப் புரிந்துகொள்ள முடியாமல், உங்கள் தேவைகளை உங்களால்நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் அவதிப்படும்போது தான் கோபம் வருகிறது. கோபம் வரும்போது முதலில் நீங்கள் செய்ய வேண்டியது, உங்களுக்கு எதனால் கோபம் வருகிறது என்பதை அறிந்து கொள்வது தான். மற்றவர்களைக்கடிந்துகொள்வதைவிட, உங்களை நீங்கள் மாற்றிக் கொள்ள முயற்சி செய்யுங்கள். ஆக்கபூர்வமான விடயங்களுக்கு மட்டும் கோபத்தை உபயோகிக்கலாம். அடிக்கடி கோபப்படுவதால் நீங்கள் உங்கள் மரியாதையைத் தான் இழக்கிறீர்கள். அதை நீங்கள் முதலில் புரிந்து கொள்ளல் வேண்டும். குறிப்பாகக் குழந்தைகளிடம் கோபப்படுவதை முழுமையாகத் தவிர்க்க வேண்டும். உங்கள் ஆசை பூர்த்தியாகவில்லை என்றால் கோபத்தைக் கட்டுப்படுத்த சில வழிமுறைகளைப் பார்ப்போம்.



உங்களுக்குள்ளாகவே சில விதிமுறைகளை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும்.

எந்த விடயத்துக்கெல்லாம் நீங்கள் உணர்ச்சிவசப்படுகிறீர்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

கோபப்படுவதற்கு முன்பு எப்படி எல்லாம் இருந்தீர்கள் , மற்றவர்கள் அதற்கு எப்படி ரியாக்ட் செய்தனர் என்பதை மனதில் அவ்வப்போது அசைபோடுங்கள்.

எந்த விடயத்தையும் சொல்ல முற்படும்போது ஆணித்தரமாய் சொல்ல முற்படுங்கள். கோபத்தை விட உறுதியான குரலில் சொல்வதே சிறந்தது.

நயமாக வேண்டுகோள் விடுக்கும் விதமாகவும் உங்கள் கோரிக்கைகளை நீங்கள் எடுத்துச்சொல்லலாம்.

கூடுமானவரை உங்கள் கோபத்துக்கான காரணத்தை மீண்டும் மீண்டும் மனதில் அசைபோட்டு, பலவழிகளில் சிந்தித்த பிறகு உறுதியாய் உங்கள் விடயத்தில் நீங்கள் இருந்தால், உங்கள் கோபம் நியாயமானதாக இருக்கும். மற்றவர்களிடமும் எடுபடும்.

சகிப்புத்தன்மையும்,மன்னிக்கும் குணமும் அவசியமாய் இருக்க வேண்டும். இது இருந்தாலே பல காரியங்களை நீங்கள் சாதிக்கலாம். உங்களுக்குக் கோபம் வரும் விடயங்களை யாரிடமாவது மனம்விட்டுப் பேசுங்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக உங்கள் தன்னம்பிக்கையில் குறைபாடு இருக்கின்றதா, சுயபச்சாதாபம் அதிகமாக இருக்கிறதா! என்று நீங்களே உங்களைக் கொஞ்சம் பரிசோதித்துப் பாருங்கள். கோபத்தை மறந்து மகிழ்ச்சியோடு வாழப்பழகுங்கள். வாழ்க்கை வாழ்வதற்கே.

# துளசி இலை சூடினால்...

பேன் தொல்லை இருக்கும் பெண்கள் துளசி இலையை கூந்தலில் சூடிக்கொள்ள வேண்டும். சில நாட்கள் தொடர்ந்து இதனைச் செய்தால் பேன் தொல்லை நீங்கும்.

கண் இமைப்பகுதிகளில் சிறிய நீர்க்கட்டோ, சிறிய பருக்களோ இருந்தால் துளசி இலையை அரைத்துச் சாறுபிழிந்தெடுத்துத் தேயுங்கள்.



சுத்தமான சந்தனத்தில் துளசிச்சாறு கலந்து முகப்பரு இருக்கும் இடத்தில் பூசினால், முகப்பரு நீங்கும். இரவில் தூங்கும் போது பூசிவிட்டுப் படுக்க வேண்டும்.

தேங்காய் எண்ணெயில் சிறிதளவு துளசி இலையைப்போட்டு கொதிக்கவைத்துப் பின்பு ஆறவிடுங்கள். அந்த எண்ணெயைத் தலையில் தேய்த்துக் குளித்தால் முடி உதிர்தல் ஏற்படாது.

காலையில் வெறும் வயிற்றில் பெட் காபி அருந்தும் பழக்கம் பலரிடம் இருக்கிறது. அவர்கள் அதில் ஒருசில துளசி இலைகளைப்போட்டு பருக வேண்டும். பருகினால் உடலுக்கு நல்லது. வித்தியாசமான சுவையும் கிடைக்கும். சிலருக்கு வாய் நாற்றம் இருக்கும். அவர்கள் துளசி இலைகளை அவ்வப்போது மென்று தின்ன வேண்டும்.

கொசுத்தொல்லை அதிகமாக இருக்கும் நாட்களில் படுக்கையில் ஆங்காங்கே சில துளசி இலைகளைப்போட்டு வையுங்கள். கொசுக்கள் தொந்தரவு தராமல் ஓடி விடும்.

கர்ப்பிணிகள் சிறிதளவு துளசி இலையை அரைத்துப் பாலில் கலந்து பருகி வந்தால் அவர்கள் சோர்வு நீங்கும். பிறக்கும் குழந்தையும் ஆரோக்கியமாக இருக்கும். துளசி இலையைத் தண்ணீரில் ஊற வைத்து அரைத்து இரண்டு அல்லது மூன்று 'தேக்கரண்டி வீதம் மூன்று மணி நேரத்துக்கு ஒரு முறை பருகினால், தடிமல், இருமல் நீங்கும்.

என்ன சகோதரிகளே, துளசி இலையில் இத்தனை சமாச்சாரம் உள்ளதா என்று ஆச்சரியமாய் இருக்கிறதா! பாவியுங்கள். பயனடையுங்கள்.

# விடுகதைகள்

1. எல்லை இல்லாத வலையில் எண்ண முடியாத மீன்கள் அது என்ன? வானமும் நட்சத்திரமும்
2. வெள்ளை மாளிகைக்கு உள்ளே செல்ல வழியில்லை அது என்ன? முட்டை
3. என்னைத் தொட்டால், உன்னைப் பிடிப்பேன் நான் யார்? மின்சாரம்
4. நாலுகால் உண்டு, நடக்கத் தெரியாது எது என்ன? நாற்காலி (கதிரை)
5. உள்ளே இருந்தால் ஓடித்திரிவான் வெளியே வந்தால் சுருங்குவான் அவன் யார்? மீன்
6. மழையில் நனைவான் வெயிலில் காய்வான் வீட்டில் சுருங்குவான் அவன் யார்? குடை
7. பற்கள் பல இருந்தாலும் கடிக்காத காருண்யம் உள்ளவன் அவன் யார்? சீப்பு
8. இதயம் போல் துடிப்பிருக்கும், இரவுபகல் விழித்திருக்கும் அது என்ன? மணிக்கூடு

*ரி.எஸ்.றுமேஸ்,*
*அல்ஹீதா வீதி, விக்டர் தோட்டம்,*
*பொத்துவில்.*

# சிங்கம் போல் உறுதி

டாக்டர் கென்னத் கவுண்டா, சாம்பியா நாட்டின் ஜனாதிபதியாக பல வருடங்களாக இருந்தவர். அவர் தனது இளமைக் காலத்தில் பள்ளி ஆசிரியராகவும் பதவி வகித்தார். தான் பணிபுரியும் பள்ளிக்குச் செல்வதற்காக அவர் பல மைல்கள் தூரம் செல்ல வேண்டியிருந்தது. இதனால் அவர் தின



மும் ஒரு சைக்கிளில் பள்ளிக்கூடத்திற்கு செல்வது வழக்கம். அவர் செல்லும் வழியில் பெரிய அடர்ந்த காடும்இருந்தது. அங்கே சிங்கம், சிறுத்தை போன்ற கொடிய விலங்குகளும் உண்டு.

அப்படி ஒரு நாள் அவர் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது ஒரு அடர்த்தியான புல்வெளியைக் கடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது திடீரென்று உறுமியவாறே அவர் முன்பாக ஒரு சிங்கம் வந்துவிட்டது. கென்னத் கவுண்டாவை முறைத்துப் பார்த்தது. ஒரு நிமிடம் தயங்கினாலும் சிங்கம் அவரை அடித்துக் கொன்று விடுவது உறுதி. இதனால் கவுண்டா ஒரு துணிச்சலான முடிவை எடுத்தார். தனது சைக்கிளை நிறுத்திவிட்டு இறங்கினார். சிறிதும் பதட்டமின்றி சைக்கிளை அப்படியே இரண்டு கைகளாலும் தூக்கிப் பிடித்து சிங்கத்தின் முன்பாக அதனைப் பயமுறுத்துவது போல் இப்படியும் அப்படியுமாக ஆட்டினார். அதைக் கண்ட சிங்கம் பயந்தது. பின்னர் அங்கிருந்து ஓட்டமெடுத்து காட்டுக்குள் மறைந்தது.

தனது சாமர்த்தியத்தால் சின்னவயதிலேயே கென்னத் கவுண்டா சிங்கத்தை விரட்டியடித்தது உங்களுக்கும் தைரியத்தை வரவழைக்கிறதுதானே.

# மூன்று பொருட்கள் பற்றி

| | |
|---|---|
| கௌரவத்திற்கு மூன்று பொருட்கள், | பழைய வயதும் சமயமும் சட்டமும் |
| அன்பிற்கு மூன்று பொருட்கள், | களமின்மையும் நேர்மையும் கடின உழைப்பும் |
| வியப்பிற்கு மூன்று பொருட்கள், | அழகும் அறிவும் குணமும் |
| பயிரிடுவதற்கு மூன்று பொருட்கள், | தைரியமும் சந்தோஷமும் மனத்திருப்தியும் |
| நிர்வகிப்பதற்கு மூன்று பொருட்கள், | சத்தியமும் சிநேகிதமும் பிரியமும் |
| விலக்குவதற்கு மூன்று பொருட்கள், | புகைத்தலும் குடித்தலும் சூதாடலும் |
| கட்டுப்படுத்துவதற்கு மூன்று பொருட்கள், | நாவும் சுபாவமும் ஆசைத் தூண்டல்களும் |
| கவனிப்பதற்கு மூன்று பொருட்கள், | பேச்சும் ஒழுக்கமும் நடிப்பும் |
| தவிர்ப்பதற்கு மூன்று பொருட்கள், | சோம்பேறித்தனமும் கபடமும் இழிசொல்லும் |

*ஜெ.சுபானி, தரம் 9*
*கொ/புனித அன்னம்மாள் ம.ம.வித்.*

# தேயிலைத் தோட்டம்

இலங்கையில் தேயிலை பயிரிடுதலை அறிமுகப்படுத்தியவர் ஆங்கிலேயர். எமது நாட்டின் முதன்முதல் தேயிலைத் தோட்டம் உருவாக்கப்பட்ட இடம் லுல்கந்துர. தேயிலைச் செடி நடப்பட்டு 5 ஆண்டுகளின் பிறகு பயன் தரும். அதிக வருவாய்தரும் ஏற்றுமதிப் பொருட்களில் தேயிலையும் ஒன்றாகும். இது இலங்கையின் மலைநாட்டு பகுதிகளில் பயிரிடப்படுகிறது. இத் தோட்டங்களில் ஆண்களும், பெண்களும் கடுமையாக உழைக்கின்றனர். தேயிலைச் செடியை ஆங்கிலேயர் 1867 ஆம் ஆண்டு அறிமுகம் செய்தனர். இலங்கையில் பறிக்கப்படும் தேயிலைக் கொழுந்துகள் இந்தியா, பங்களாதேஷ், சீனா, இந்தோனேசியா, கென்யா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

*பி.ஜெயபிரதா, தரம் 5,*
*கிங்ஸ்ரன் சர்வதேச பாடசாலை.*

# விந்தை மிகுந்த விலங்குகள்

1. பல்லில்லாத முளையூட்டி எது? தேவாங்கு
2. பித்தப்பை இல்லாத முளையூட்டி எது? எலி
3. நீந்தத் தெரியாத விலங்கு எது? ஒட்டகம்
4. நாக்கின்மையால் கண்களால் வியர்வையை வெளியேற்றுவது எது? முதலை
5. நீரருந்தாத விலங்கு எது? கங்காரு, எலி
6. மண்டையோடு, அலகு ஒரே எலும்பாலான பறவை எது? மரங்கொத்தி
7. அதிகம் நீரருந்தும் பறவை எது? புறா

*யோ.விநோதினி*
*தரம்10*
*கிளி/அக்கராயன் ம.வித்.*

# வழி சொல்லுங்கள்




ரொட்டியும் பாலும் நாய்க்காக இந்தப் பக்கம் பாவம்! நாயோ பசியோடு அந்தப் பக்கம். நீங்களாவது நாய்க்கு ரொட்டியும் பாலும் இருக்கின்ற இடத்தைக் காண்பிக்கக் கூடாதா?

# சிறார்களின் கைவண்ணம்



அ.வசந்தன்
தரம்9
மு/அளம்பில் றோ.க.பாடசாலை








தரம் 10

# அச்சுறுத்தும் அதிகரிப்பு!



அதிகரிப்பு என்பது அவசியமான ஒன்று தான். சந்தேகம் இல்லை. ஆனால், அந்த அதிகரிப்பு கூட எங்கே வருகின்றது என்பதைப் பொறுத்தே அதன் அவசியம் தெரிகின்றது. நாட்டின் வளம் அதிகரித்தால் எமக்கு ஆனந்தம் தான். வீட்டு வருமானம் அதிகரித்தால் வருவது குதூகலம்தான். அதாவது ஒரு நாட்டின் பொருளாதாரமும், குடிமக்கள் கல்வித் தரமும் அதிகரித்து விட்டால் பல அதிகரிப்புகளுக்கு இது வித்திட்டு விடுகின்றது. இதற்கு மாறாக நாட்டில் பஞ்சமும், பட்டினியும் அதிகரித்தால், கதை வேறாகிவிடுகின்றது. பிணியும் அதிகரித்தால், நிலைமை மிகவும் மோசமானதாகி விடுகின்றது.

இந்த அதிகரிப்புகளில், உடல் எடை அதிகரிப்பு என்பது எமக்கு அறவே வேண்டப்படாத ஒன்றாக இருக்கின்றது. அப்படி இருந்தும் இன்றைய காலகட்டத்தில் உடல் பருத்தவர்கள் தொகை, அசுர வேகத்தில் வளர்ந்து கொண்டே இருக்கின்றது. இதன் விளைவாக வேண்டப்படாத விருந்தாளிகளாக, பல நோய்கள் வந்து குடிபுகுந்து விடுகின்றன. குண்டாகும் உடல்களில் குடியிருக்க வரும் நோய்கள், வாழ்க்கையை அடியோடு நாசம் செய்து விடுகின்றன.

உலக நாடுகளில் இன்று அமெரிக்கா தான் உடல் பருமன் தொல்லையால் பெரிதும் அவதிப்படுகின்றது. 2003 ஆம் ஆண்டில் எடுத்த ஒரு கணக்கின்படி 15 லட்சம் பிள்ளைகள் உடல் பருத்தவர்களாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 70களின் ஆரம்பத்தில் இருந்து, இன்றுவரையிலான காலகட்டத்தில், உடல் குண்டானவர்கள் தொகை இரண்டு மடங்கிற்கு மேலாக அதிகரித்து இருப்பதாக ஆய்வுகள் மூலம் கண்டறிந்து இருக்கின்றார்கள். அதாவது முன்னைய தொகையை விட 15 வீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாம். இது ஆரோக்கியமான நிலையல்ல என்பது தெளிவாகவே தெரிகின்றது.

இன்றைய சாப்பாட்டு முறைகள் நன்றாக மாறிப் போயிருப்பதுதான் உடல் பெருக்க காரணம் என்கிறார்கள் ஆய்வாளர்கள். குறிப்பாக அமெரிக்கப்பிள்ளைகள் Fast Food எனப்படும் உடன் உணவுகளை விரும்பி உண்டு வருவது, இவர்கள் உடல் கொழுப்பதற்கு ஒரு காரணியாக இருந்துவருகின்றது. பெரியவர்களும், இந்த உணவு வகைகளைப் பெரிதும் விரும்பி உண்பது வழக்கத்தில் இருக்கின்றது. தொலைக்காட்சிக்கு முன்னாலும், கணினிக்கு முன்னாலும் நிறைய நேரத்தை செலவிடும் பழக்கமும் பிள்ளைகளிடம் தொற்றி இருக்கின்றது. இதன் காரணமாக உடலின் எடை அதிகரிக்கின்றது.

அவுஸ்திரேலியாவிலும் இதே பிரச்சினை தான். இங்குள்ள அரசியல்வாதிகள், பிள்ளைகள் குண்டாகி வரும் பிரச்சினையை பிரசாரமேடைக்கு இழுத்துவந்து, அதில் ஆதாயம் தேட முற்படுகின்றார்கள், அவசர உணவுக்கான விளம்பரங்களை நாம் பதவிக்கு வந்தால் அடியோடு ஒழிப்போம். இந்த விளம்பரங்கள் தான், எங்கள் பிள்ளைகளுக்கு ஆசையைத் தூண்டி, இந்த வகையான உணவு வகைகளில் நாட்டத்தை ஏற்படுத்திவருகின்றன என்பது இவர்களின் பிரசார உத்தியாக இருக்கின்றது.

ஆனால் அரசு ஆட்டங்காணுவதாயில்லை. பிள்ளைகள் எப்படியான உணவு உண்ண வேண்டும் என்பது பெற்றோர் கைகளில் தான் இருக்கிறது. பிள்ளைகளைத் தம் கட்டுப்பாட்டில் வைத்து, உரிய உணவுவகைகளை வழங்க வேண்டியது பெற்றோர் கடமை. இதற்காக விளம்பரங்களை எதற்கு நிறுத்த வேண்டும் என்று கேட்கிறது அரசு.

1180 பெற்றோர்களிடையே ஓர் ஆய்வை நடத்தியதில், 25 வீதமான பெற்றோருக்கு மாத்திரமே, தம் பிள்ளைகள் உடல் எடை கூடியவர்கள் என்று முன்பே தெரிந்திருக்கின்றது என்கிறார்கள் அதிகாரிகள். அதாவது பிள்ளைகளின் உடல் நிலை மீது பெற்றோர் அசிரத்தையோடு இருப்பதையே இது நன்கு உணர்த்தியிருக்கின்றது. வீட்டு அங்கத்தவர்கள் ஒன்றுகூடி காலையிலும், மாலையிலும் எப்படியான உடற்பயிற்சிகளை மேற்கொள்ளலாம், எப்படியான உணவைத் தவிர்க்கலாம் என்றெல்லாம் திட்டமிடாததால் வந்த வினைதான் இது என்கிறார்கள்.

பிள்ளைகளே தமது உணவு வகைகளைத் தேர்ந்தெடுத்து உண்ணட்டும். சாப்பாட்டின் முடிவில் தாராளமாக இனிப்பு வகைகளைச் சுவைக்கட்டும் என்றெல்லாம், அளவுக்கு மீறிய சுதந்திரக் காற்றை சுவாசிக்க விட்டதால் வந்த சம்பாத்தியம்தான் இந்தக் குண்டு உடல்கள். பிள்ளைகள் தமது இஸ்டத்திற்கு நொறுக்குத் தீனிகளை உண்ண பெற்றோர் அனுமதிப்பதும் உடல் குண்டாவதற்கான காரணமாகிவிடுகின்றது.

அண்மையில் நடத்திய ஓர் ஆய்வில், கர்ப்பிணித் தாய் குண்டானவராக இருந்தால், பிறக்கும் பிள்ளையும் 4 வயதை எட்டும் போது குண்டாகிவிடும் என்று கண்டறிந்து இருக்கின்றார்கள். 8500 பெற்றோர்களை வைத்து ஆய்வு நடத்தியதில் 24 வீதமான அதாவது ஏறத்தாழ நான்கில் ஒரு பிள்ளை குண்டாகி வருவதை அவதானித்து இருக்கின்றார்கள். இந்தப் பிள்ளைகளின் தாய்மார் எல்லோரும் பிரசவ காலத்தில் எடை கூடியவர்களாக இருந்துள்ளார்கள். சாதாரண உடம்போடு இருந்து பிரசவித்த தாய்மாரின் பிள்ளைகளில் 9 சதவீதமானவர்கள் மாத்திரமே குண்டாகி இருக்கின்றார்கள்.

குண்டாகும் நிலைமை மாற வேண்டும் என்பதுதான் சகலரதும் ஆசையாக இருக்கின்றது. ஆனால், அது எப்பொழுது சாத்தியமாகும் என்பதுதான், புரியாத புதிராக உள்ளது.

-கே.ஆர்.எஸ்-


முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



செல்வி சக்தி

01-08-2004

இங்கிலாந்து, ஈஸ்ட்காம் (East Ham) இல் வசிக்கும் திரு. திருமதி சுதாகரன். சுபாஜினி தம்பதிகளின் செல்வப் புதல்வி சக்தி தனது முதலாவது பிறந்த நாளை 01.08.2004 (ஞாயிற்றுக்கிழமை) அன்று லண்டனில் கொண்டாடுகிறார். சக்தியை அன்பு அப்பா, ஆசை அம்மா, தாயகம் தம்பர்மலையில் வசிக்கும் அப்பப்பா, சித்தப்பா, லண்டனில் வாழும் அம்மப்பா, அம்மம்மா, பெரியம்மா, பெரியப்பா, சித்தப்பா, சித்திமார், மாமா மற்றும் உற்றார், உறவினர்கள் நெற்கொழு வைரவர் துணைகொண்டு பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்:
ந. சுதாகரன் (அப்பா)
லண்டன்

63, Station Road,
Manor Park, Londan,
E12 5BP

0044(0)7832300686





நாட்டை கட்டியெழுப்ப பலமான அத்திவாரம்

ஐதேக ஆணைக்குழு

ஐக்கிய தேசிய கட்சியின் வாக்கு நிலவரம் கருதி மேற்கொள்ளபடவேண்டிய பணிகள், கொள்கைகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக மக்கள் கருத்துக்களை கேட்டறிவது, கட்சியின் பலம், பலவீனம் எதிர்காலத்தில் உள்வாங்கி கொள்ளகூடிய சந்தர்ப்பங்கள் மற்றும் விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் பற்றி ஆராய்வது இவ்வாணைக்குழுவின் நோக்கமாகும்.

எமது பயணத்தை மிகச் சரியானதாக்கிகொள்ள உங்கள் கருத்துக்கள் மற்றும் யோசனைகளை 2004 ஆகஸ்ட் 15 தினத்திற்கு முன்னர்

செயலாளர்
கேட்டறியும் ஆணைக்குழு
30, ஸ்ரீமத் மாகஸ் ப்ரணாந்து மாவத்தை,
கொழும்பு 07

ஐக்கிய தேசிய கட்சி- என்றும் நாட்டுக்காக.

## சொற்சிலம்பம் போட்டி இல.119

சொற்சிலம்பம் 119 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் தினம் ஆகஸ்ட் 08ஆம் திகதி ஆகும். விடைகள் ஆகஸ்ட் 16 ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஆகஸ்ட் 23ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.117க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.117

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ம | 2 க | த் | 3 து | 4 வ | ம் | ■ | 5 பு |
| 6 து | ணி | ■ | 7 ரு | சி | ■ | 8 க | ல |
| 9 சா | த | ன | ம் | ■ | 10 ம | ட | ம் |
| 11 ர | ம் | ■ | 12 பு | 13 த | ன் | ■ | ப |
| ம் | ■ | 14 க | ■ | 15 க | னி | 16 த | ல் |
| ■ | 17 ந | டி | 18 க | ர் | ■ | ரு | ■ |
| 19 த | க | ன | ம் | ■ | 20 த | ம | 21 து |
| 22 க | ரு | ம் | பு | லி | ■ | 23 தி | ரு |

## சொற்சிலம்பம் போட்டி இல.119

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| | ■ | 9 | 10 | | | | ■ |
| 11 | 12 | | | ■ | | ■ | 13 |
| 14 | | ■ | 15 | | ■ | 16 | |
| ■ | 17 | 18 | | ■ | 19 | | |
| 20 | | | ■ | 21 | | | |
| 22 | | | | | ■ | 23 | |

## சொற்சிலம்பம் போட்டி இல.119

**இடமிருந்து வலம்**

1. பிரதிக்ஞை
4. எங்களுடையது.
7. பிறப்பால் கிட்டும்.
8. பிரயாணம்/பலஇடங்களுக்கும் பயணம் செய்தல்.
9. கீர்த்தி கூறல்.
11. பிணக்குப்படல்/சர்ச்சையிடல்.
14. மஜ்னு மனம் கவர்ந்தவள்.
15. நோவு.
16. பிழை அல்ல.
17. இறத்தல்.
19. நவீன/ பழைய அல்ல.
20. அறுசுவைகளுள் ஒன்று. உறைப்புத் தருவது.
21. சிநேகிதன்.
22. யானைக்கு விசேட உறுப்பு.
23. ஒரு தானியம்.

**மேலிருந்து கீழ்**

1. மேனகைக்கும் விசுவாமித்திரனுக்கும் பிறந்தவள்.
2. பன்மைத் தன்மையைக் குறிப்பது.
3. இது ஒரு வாத்தியக் கருவி. நாண் (இழை) கொண்டது.
4. ஏமாற்றுபவன்.
5. சுவர்.
6. பெரியவன் / எஜமான் / தலைவன்.
8. இதுவும் ஒரு இழைக் கருவியே.
10. கருமை நிறமுடையதைக் குறிப்பது.
12. பண்பாடு/நாகரீகம்.
13. தாய்க்கு மூத்தவள்.
16. கணவன் – மனைவி.
18. இளைய சகோதரன்.
19. காயம்.
20. கேட்கும் உறுப்பு.
21. ஆபரணம்.

## சொற்சிலம்பம்-116 பரிசு பெறுவோர்.

1. செல்வி. பு.அருள் மொழி
86/4, மின்சார நிலைய வீதி,
திருகோணமலை.
2. வீ.எம்.ஜோசப்
330, ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.
3. செல்வி. மலர்விழி ஜேசுதாசன்
இல 91/1, மேபீல்ட்லேன்,
கொட்டாஞ்சேனை, கொழும்பு.

## பாராட்டுப் பெறுவோர்

1. ந.லயந்தினி
இல.469, 4ம் யூனிற், மல்லாவி
யோகபுரம்.
2. சி.சஜித்தா
இல.43/1, புகையிரத நிலைய வீதி,
மட்டக்களப்பு.
3. ராஜினி புண்ணியமூர்த்தி
இல.36, புகையிரதநிலைய வீதி,
மட்டக்களப்பு.
4. மு.தங்கவடிவேல்
வீரபாண்டியன் வீதி,
துன்னாலை தெற்கு, கரவெட்டி.
5. க.யசோதா
Dr. சி.பேரம்பலம் மே/பா
சில்வா வீதி, வட்டக்கச்சி.
6. ரபீக்கா முஹம்மது யூசுப் ஜான்
இல.31, கல்லூரி வீதி,
திருகோணமலை – 31000.
7. நகுலன் ஜெயசேகரா
594/6, கே.கே.எஸ் வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
8. வி.எம்.இராமசாமி
இல.51, வேகந்த ரோட்,
கொழும்பு – 02.
9. இ.மகேந்திரராஜா
மத்திய மருந்தகம், செல்வநாயகபுரம்.
திருகோணமலை.
10. க.நிரஞ்சன்
22, பிரதிபிம்பராம வீதி,
களுபோவில.

**சொற்சிலம்பம் போட்டி இல. 118**

சொற்சிலம்பம் போட்டி இல.118 இல் மேலிருந்து கீழ் 8 இல் 'பக்கவாத்தியம்' என்பது 'தோல் வாத்தியம்' என்று தவறுதலாக இடம் பெற்றுவிட்டது. பக்க வாத்தியம் என்பதே சரியானது.

# 7 ஆம் ஆண்டில் சூரியன் FM

*(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

கின்றன.மப்றூக், தீபன் மற்றும் ராசா என்கின்ற நகைச்சுவைப் பாத்திரம் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறார்கள்.

சூரியன் எப்.எம்மின் அண்மைக்கால வடக்குக் கிழக்கு ஒலிபரப்புத் தெளிவு விஸ்தரிப்புக்குப் பின் விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்டு புதுமையான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ள வார இறுதி சனி ஞாயிற்றுக்கிழமைகளில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள் இப்பொழுது இலங்கை பூராகவுமுள்ள நேயர்களின் பாராட்டைப் பெற்று வருகின்றன.

சனிக்கிழமை காலை எஸ்.ரமணன் செய்திப் பிரிவினருடன் இணைந்து நடத்தும் அரசியல்வாதிகள், விமர்சகர்கள், ஊடகவியலாளர்கள் நேரடியாகக் கலையகத்திற்கு வருகை தந்து கலந்து கொள்ளும் நிகழ்வான "விழுதுகள்" அரசியல் ஆய்வுக்கள நிகழ்ச்சி சூரியன் புதிதாக அறிமுகப்படுத்திய ஓரிரு வாரங்களுக்குள்ளேயே மிகவும் பிரபல்யம் அடைந்து விட்டது. பக்கச்சார்பின்றி அனைத்துத் தரப்பினரதும் கருத்துக்களுக்கும், மக்களின் விமர்சன வெளிப்பாடுகளுக்கும் களம் தரும் நிகழ்ச்சியாக இடம் பெறுகிறது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வந்த ஆராய்ச்சி மணி எனும் நிகழ்ச்சி சூரியனுக்கு மகுடம் வைத்தது போன்ற நிகழ்ச்சியாக அமைந்திருந்தது. சமூகப் பொறுப்புடனும், மக்களின் பிரச்சினையை மிகக் கரிசனையுடன் அணுகி அதற்கு நிவாரணத்தைத் தேடும் வழிமுறைகளை நிகழ்ச்சி மூலமாக கையாண்டு, நேயர்களின் பேராதரவை பெற்ற இந்த நிகழ்ச்சியை பர.காண்டீபன் தொகுத்து வழங்கி அநேக நேயர்களின் அபிமானத்தைப் பெற்றார். இந்த நிகழ்ச்சியின் புதிய வடிவமைப்போடு, மேலதிக அம்சங்களையும், அரசியல் விடயங்களையும் உள்ளடக்கியதாக தற்போது "விழுதுகள்" நிகழ்ச்சி இடம்பெறுகிறது.

சனிக்கிழமை பகல் 10 மணி முதல் 2 மணி வரை வரும் "தங்கத் தேன் மழை" நிகழ்ச்சி பல புதிய பாடல்களைத் தேன்மழையாகத் தருகிறது. மிக வித்தியாசமான முறையில் நகைச்சுவை ததும்பும் விதத்தில் சரளமாக உரையாடி புதிய 40 பாடல்களைத் தரப்படுத்தும் இசை அணித் தேர்வாக மிக சுவாரஷியமாக இந்நிகழ்ச்சியை வழங்குபவர்கள் கௌரியும், செந்தூரனும்.

சனிக்கிழமை 2 மணி முதல் 3மணி வரை "சிறகடிக்கும் சிந்துகள் " நிகழ்ச்சியில் புத்தம் புதிய பாடல்கள் ஒலிபரப்பப்படுகின்றன. இந்நிகழ்ச்சியை சி.விமல் தொகுத்து வழங்குகிறார் .

இரவு நிகழ்ச்சியாக அறிவிப்பாளர் லோசன் மிகத் திறமையாக தொகுத்து வழங்கும், மற்ற எந்த வானொலியும் அணுக முடியாத புதுமையான நிகழ்ச்சி "விகடமும் விளையாட்டும்". உலக விளையாட்டுத் தகவல்கள் அனைத்தையும் ஒன்று திரட்டி உடன் தொகுத்து, மிக விறுவிறுப்பாக நகைச்சுவையையும் இணைத்து, எவரும் கேட்டு மகிழ்வுறும் வகையில் மிகச் சிரத்தையுடன் இந்த நிகழ்ச்சி தொகுத்தளிக்கப்படுகிறது. அத்துடன் இரவு 9.30 மணிக்கு செந்தூரனின் கதை இயக்கத்தில் நவநீதனால் தயாரிக்கப்படும் "நான் PLUS நான்" திகில் தொடர் நாடகம் இடம் பெறுகிறது.

ஞாயிறு காலை இடம்பெறும் "உதயராகங்கள்" நாளுக்கொரு புதுமையைப் புகுத்தி நேயர்களுடன் மிக நெருக்கமாக கலந்துரையாடி கலகலப்பாக வழங்கப்படுகிறது. செந்தூரனும் நவநீதனும் நிகழ்ச்சியைத் தருகிறார்கள்.

ஞாயிறு பகல் 10 மணியிலிருந்து 1 மணி வரை " சோக்கான ஜோக்குகள்" என்ற நிகழ்ச்சி மற்றுமொரு நகைச்சுவை நிகழ்ச்சியாக ஒலிபரப்பாகி, பல புதிய நேயர்களை சூரியனுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறது. இந்நிகழ்ச்சியை சி.விமல் தொகுத்து வழங்குகிறார்.

பகல் நிகழ்ச்சியாக 1 மணிமுதல் 3 மணி வரை இடம்பெறும் "அன்புள்ள நண்பரே" நிகழ்ச்சி, "காற்று வழி நூலகமாக" புத்தகப் பிரியர்களுக்கும், இலக்கிய ஆர்வலர்களுக்கும் மற்றும் நேயர்களுக்கும் பிடித்த நிகழ்ச்சியாக அமைவதற்கு மப்றூக் மிகக் கடுமையாக உழைத்து, இந்த நிகழ்ச்சியைத் தயாரித்துத் தருகிறார்.

ஞாயிறு மாலை 5 மணி முதல் 8 மணிவரை "இளமைப் பூங்கா" நிகழ்ச்சியை சங்கீதா மற்றும் கிருஷ்ணா ஆகியோர் தொகுத்து வழங்குகின்றார்கள்.வானொலி ஊடாக மணமக்கள் தெரிவை மேற்கொள்ளும் மணமேடை ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையில் சுவாரஷியமான எதிரும் புதிரும் போன்ற வித்தியாசமான அம்சங்களுடன் இடம் பெறுகிறது.

இரவு 8 மணி முதல் 12 மணி வரை " சந்திப்போமா" என்னும் நிகழ்ச்சியை சசாங்கன் சர்மா தொகுத்து வழங்குகிறார். உறவுகளுக்கிடையில் சிறிய உணர்வுகளைப் பரிமாறும். நிகழ்ச்சி இனிய பாடல்களோடு நேயர்களின் சிறிய செய்திகளும் கலந்து ஒலிக்கும் நிகழ்ச்சி.

ஞாயிற்றுக் கிழமை இரவு சூரியன் செய்திப் பிரிவு தயாரித்து வழங்கும் "சூரியப்பார்வைகள்" நிகழ்ச்சி வாரம் முழுதும் இடம்பெற்ற உள்நாட்டு விவரங்களையும், உலக நடப்புக்களையும் ஒன்று திரட்டி மிகச் சுருக்கமாக பக்க சார்பற்ற முறையில் வழங்குகின்றது. இந்நிகழ்ச்சியை நெறியாள்கை செய்து தயாரித்து வழங்குபவர் கௌரிபாலங்கம்.

சூரியன் வானொலி பல உள்ளூர்க் கலைஞர்களுக்கு வாய்ப்பளித்து ஊக்குவிக்கும் அதே வேளை, முதற்தரமான இந்தியத் திரைப்படக் கலைஞர்களை உள்ளடக்கிய பல இசை நிகழ்ச்சிகளை கொழும்பு மற்றும் இலங்கையின் பல பாகங்களிலும் வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

அது மாத்திரமல்லாது பிரபல இலக்கியவாதிகளையும், பட்டி மன்ற விற்பன்னர்களையும் அழைத்து நாடு பூராவும் நிகழ்ச்சியை நடத்தியது. இலங்கை இசைக்கலைஞர்களால் உருவாக்கப்பட்டு இசைத் தொகுப்பாக வெளியிட்ட பாடல்களை குறிப்பாக " துளிகள்", " நம்பிக்கை", "காற்று" போன்ற இசைத் தொகுப்புக்களை சூரியன் அறிமுகப்படுத்தி, அந்த பாடல்களை மிகவும் பிரபல்யப்படுத்தியதுடன், இலங்கைக் கலைஞர்களுக்கும் ஊக்கமளித்தது. அத்துடன் பல புதிய இசைக்குழுக்கள் உருவாகவும் சூரியன் வழி சமைத்தது.

சூரியன் செய்திகள் பிரதான செய்திகளாக நாளொன்றிற்கு காலை,நண்பகல், மாலை, இரவு என நான்கு வேளையும் செய்திகளை ஒலிபரப்புகின்றது.

அத்துடன் ஒரு மணித்தியாலயத்திற்கு ஒரு தடவை காலை முதல் இரவு வரை ஒவ்வொரு மணிநேரமும் ஒரு வரிச் செய்திகளாக சூரியன் செய்திச்சுருக்கம் இடம்பெறுகிறது. இலங்கை தமிழ் பேசும் மக்களிடையே சூரியன் செய்திகள் நம்பகத்தன்மை பெற்று பிரபல்யமாக விளங்குவதற்கு காரணம், சூரியன் எப்பொழுதுமே பக்கச்சார்பற்ற நடுநிலைக் கொள்கையுடன், செய்திகளை தரம் பிரித்து ஒலிபரப்பாகின்றது என்பதை எவரும் ஏற்றுக் கொள்ளவார்கள்.

சூரியன் செய்திப் பிரிவு துரித செயற்திறன் கொண்டதாக அமைந்துள்ளது. பிரதம செய்தி ஆசிரியர் நடராஜா குருபரன், எம்.இந்திரஜித் மற்றும் வி.எஸ். சிகாமணி ஆகியோருடன், அறிவிப்பாளர் எஸ்.ரமணன் செய்திச் சேவையில் இணைந்து சேவையாற்றிவருகின்றனர்.

செய்தி சேகரிக்கும், தொகுக்கும் எந்தவொரு இக்கட்டான சூழ்நிலையையும் சமாளிக்கும் ஆற்றலுடைய சூரியனின் செய்திப் பிரிவு, நாட்டில் நடைபெற்ற முக்கியமான பரபரப்பான சம்பவங்களை உடனுக்குடனும், உண்மையுடனும் மக்களுக்கு அறியத் தந்து நாட்டின் முதற் தரமான செய்திப் பிரிவாக திகழ்ந்து வருகின்றது.

சூரியன் அலைகளில் "வெற்றி நடை போடும் விளையாட்டுச் செய்திகள்" விளையாட்டுப் பிரியர்களுக்கிடையே, குறிப்பாக இளைஞர்களுக்கிடையே மிகவும் பிரபல்யமான நிகழ்வாக விளங்குகிறது. வாரத்தின் ஏழு நாட்களும் நேயர் நேர நிகழ்ச்சியை ஊடறுத்து மாலை இந்நிகழ்ச்சி ஒலிபரப்பாகும்.

அன்றாடம் சர்வதேச அரங்கில் இடம்பெறும் அத்தனை விளையாட்டுப் போட்டிகள் தொடர்பான தகவல்களையும், விவரங்களையும் சேகரித்து மிகச் சுருக்கமாகத் தருவதுடன் உள்நாட்டு, வெளிநாட்டு விளையாட்டுப்போட்டிகள் பற்றிய தகவல்களையும் இணைத்துத் தருகிறது வெற்றி நடை போடும்விளையாட்டுச் செய்திகள்.

தனியார் வானொலி வரலாற்றில் முதன் முதலாக முஸ்லிம் நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்திய பெருமை சூரியன் வானொலியையே சாரும். குறிப்பான முஸ்லிம்களின் புனித நோன்பு தினங்களில் இப்தார் ஷஹர் விசேட நிகழ்ச்சிகளை காலை, மாலை நேரங்களில் தொடர்ந்து ஆறு ஆண்டுகளாக நடத்தி வருகின்றது.

வெகுதொலைவில் இருக்கும் ஆலீம் உலாமாக்களை தொலைபேசி மூலமாக அழைத்து, ஹதீஸ் மார்க்க சொற்பொழிவுகளை உடனுக்குடன் ஒலிபரப்பி, ஒருமாத காலமாக நேயர்கள் கேட்கும் படியாக திறம்பட தயாரித்து வழங்கி வருகின்றார் அறிவிப்புத்துறையில் அனுபவமுள்ள ஏ.எல்.எம்.அஷ்ரப்.

சூரியனின் மிகப் பெரிய வளர்ச்சிக்கும், நேயர்களுடனான நெருக்கத்திற்கும் ஒரு முக்கிய காரணியாக விளங்குவது சூரியனின் திட்டமிடல் விரிவாக்கல் பிரிவு. பல வெளிக்கள நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து, நேயர்களுடனான நேரடி தொடர்பை ஏற்படுத்தி, நேயர்களுக்கும், சூரிய[illegible] அறிவிப்பாளர்களுக்கும் இடையே ஒரு பாலமாக இருப்பது இந்த சூரியன் திட்டமிடல் விரிவாக்கல் பிரிவு.

அண்மைய இந்த பிரிவினால் சூரியன் வானொலியின் வெளிக்கள நிகழ்ச்சிகளுக்காக வடிவமைக்கப்பட்ட பாரிய இசை வாகனம் ஒன்று கொழும்பிலும் ,அதன் சுற்றுப்புறங்களிலும், மலையகப் பகுதிகளிலும் மிகப் பெரும் இசை நிகழ்ச்சிகளை நடத்தி அங்குள்ள நேயர்களை மகிழ்ச்சிப் படுத்தி வருகின்றது. இது போன்று நகருக்குள் நகரும் இசை மேடையாகத் திகழும் அந்த பாரிய வாகனத்துடன், சிறந்த இசை நிகழ்ச்சிகள் இலங்கையின் பல பகுதிகளில் நடத்தப்படுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தப் பிரிவில் சிரேஷ்ட உத்தியோகத்தவராகத் திகழும் ஏ.எல்.அஷ்ரப், அஜித் குமார், ரஜீவ் ஆகியோர் திறம்பட செயற்படுகின்றனர்.

அசைக்க முடியாத அலை வரிசை என்ற அடைமொழிக்கு ஒப்ப கடந்த ஆறு ஆண்டுகளாக அநேக வானொலி நேயர்களின் பேரபிமானம் பெற்று, ஆய்வுக் கணிப்பு தரப்படுத்தல் முறையினால் முதற்தர வானொலியாகத் தெரிவு செய்யப்பட்டு வருவது சூரியன் எப்.எம். வானொலியின் சாதனைக்கு எடுத்துக் காட்டாக அமைகிறது. இலங்கையின் தமிழ் ஒலிபரப்புத் துறையில் நிகழ்ச்சி வடிவமைப்பின் முன்னோடிகளான ஏனையவர்களும் பின்பற்றும் வகையில் புதிய மெருகோடு நிகழ்ச்சிகளை வடிவமைத்து வழங்கி வரும் TREND SETTING RADIO வாக சூரியன் திகழ்கிறது.

வானொலி ஒலிபரப்பில் கடந்த 6 ஆண்டுகளாக பல சாதனைகளைப் புரிந்து வெற்றி நடை போடும் சூரியன் எப்.எம், ஏழாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இவ்வேளை சூரியனின் வெற்றிப் பாதைக்கு பங்களிப்புச் செய்த அன்புநேயர்கள், பத்திரிகையாளர்கள், வாடிக்கையாளர்கள், விளம்பரதாரர்கள்மற்றும் ஆதரவாளர்கள் அனுசரணையாளர்கள் அனைவருக்கும் நன்றி கூறிக் கொள்வதோடு, இனிவரும் ஆண்டுகளிலும் சூரியன் தமது நேயர்களுக்கு மென்மேலும் பல புது நிகழ்ச்சிகளை புதுமையாகப் படைத்து தருவதுடன், 24 மணி நேரமும் நேயர்களுக்கு சிறந்த இசையை வழங்கி, அவர்களை குதூகலப்படுத்துவதே தனது குறிக்கோளாக இருக்கும் என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறது.

# ஒலிம்பிக் திருவிழாவுக்கு தயார் நிலையில் ஏதென்ஸ்!

சர்வதேச நாடுகள் சங்கமிக்கும் ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டி எதிர்பார்த்தளவுக்கு வெற்றிகரமாக நடக்குமென சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவர் ஜாக்ஸ் ரோச் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

முன்னதாக 2000ஆம் ஆண்டில் சர்வதேச ஒலிம்பிக் குழுவின் அப்போதைய தலைவர் ஜுவான் அந்தோனியோ சமராஞ்ச் கிரீஸுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார். போட்டிக்கான ஏற்பாடுகள் மிகவும் மெதுவாக நடைபெறுவதால், போட்டியை வேறு இடத்திற்கு மாற்றுவதாக அப்போது அவர் எச்சரித்தார்.

ஆனால், தற்போது இந்நிலைமை மாறியுள்ளது என்றும், போட்டிக்கான அனைத்து வசதிகளும் திட்டமிட்டபடி முடிக்கப்படும் என்றும் 2001இல் ஒலிம்பிக் குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ரோச் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேலும், ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் ஒகஸ்ட் 13 முதல் 30ஆம் திகதி வரையிலான காலகட்டம் அனைவருடைய மனதிலும் நீங்காமல் இடம்பெறும் என்று 62 வயதாகும் பெல்ஜியத்தைச் சேர்ந்த ரோச் மேலும் தெரிவித்துள்ளார்.

3 முறை ஒலிம்பிக் படகுப் போட்டியில் பங்கேற்றுள்ள முட நீக்கியல் மருத்துவரான ரோச், போட்டிகள் நல்லமுறையில் நடைபெற்றால் இதுவரையிலான பிரச்சினைகள் காணாமல் போய்விடும் என்று கூறியுள்ளார்.

சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவராகத் தேர்வு பெற்றபிறகு ரோச் நடத்தும் முதலாவது ஒலிம்பிக் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஏதென்ஸ் தற்போது புதியதொரு நகரமாக உருமாறிக் கொண்டிருக்கிறது. விமான நிலையங்கள், மெட்ரோ ரயில்கள், சுற்றுச் சாலைகள், புதிய மின் உற்பத்தி நிலையங்கள், தகவல் தொடர்பு வசதிகள் என அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், போட்டிக்கு முன்பாக அனைத்துப் பணிகளும் முடிந்துவிடும் என கிரீஸ் அரசும் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இம்முறை ஒலிம்பிக் தொடர்பான பணிகளுக்காக மட்டும் சுமார் 88 ஆயிரம் கோடி ருபாவை செலவிடுகிறது கிறீஸ். ஆயினும், இது மேலும் உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# காதல் ஜோடியின் தோல்வி

அமெரிக்க விளையாட்டுத் துறையில் பரபரப்பை ஏற்படுத்திய காதல் ஜோடி டிம் மான்ட் கோமரி – மரியன் ஜோன்ஸ். உலகின் அதிவேக வீரர் என்ற பட்டத்துக்குரியவர் டிம். கடந்த 2002 ஆம் ஆண்டு பாரிஸ் நகரில் நடைபெற்ற 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் 9.78 வினாடிகளில் பந்தய தூரத்தை கடந்தே இந்த சாதனையை படைத்தார். இதையடுத்து இப்போட்டியில் அவர் ஊக்க மருந்து பயன்படுத்தியது தெரிய வந்ததைத் தொடர்ந்து அவர் மீது விசாரணை நடக்கிறது. இதனால் அவரது உலக சாதனையே ஆட்டம் கண்டுள்ளது. இந்த நிலையில் ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ளும் அமெரிக்க அணிக்கான தேர்வில் டிம் கலந்து கொண்டு தோல்வியையே சந்தித்துள்ளார்.

இந்தத் தேர்வுப் போட்டியில் அமெரிக்காவில் மவுரிஸ் கிரீனி 9.91 வினாடிகளில் பந்தயத் தூரத்தை கடந்து முதலாவதாக வந்தார். ஜஸ்டின் காட்வின் (9.92 வினாடிகள்) 2ஆவது இடத்தையும், ஷன் கிராபோர்டு (9.93 வினாடிகள்) 3 ஆவது இடத்தையும் பெற்றனர். டிம் ஓட்ட தூரத்தை 10.13 வினாடிகளில் கடந்து 7 ஆவது இடத்தையே பிடித்தார்.

இதேவேளை டிம்மின் காதலியும், தடகள வீராங்கனையுமான மரியன் ஜோன்ஸ் பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்ட பந்தயத்திற்கான தகுதி சுற்றுப்போட்டியில் கலந்து கொண்டார். கடந்த முறை சிட்னியில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் 5 தங்கப் பதக்கங்களை வென்ற மரியன் இந்த தகுதிச் சுற்றுப்போட்டியில் 5 ஆவதாகவே வந்தார். இதன் மூலம் ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் 100 மீற்றர் ஓட்டத்தில் கலந்துகொள்ளும் தகுதியையும் இழந்தார். அத்துடன் 200 மீற்றர் தகுதி சுற்றுப்போட்டியிலிருந்தும் இவர் விலகினார். இவர் மீதும் ஊக்க மருந்து பயன்படுத்திய விசாரணை நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## ஒலிம்பிக் பதக்கத்தில் மாற்றம்!

ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் வெற்றிபெறும் வீரர், வீராங்கனைகளுக்கு வழங்கப்படவுள்ள பதக்கங்களின் முகப்புத் தோற்றம் 76 ஆண்டுகளுக்குப் பின் இம்முறை மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கிரேக்கத்தின் வெற்றிக் கடவுளான 'நைக்', பெரிய மைதானத்தில் அமர்ந்திருப்பது போன்ற முகப்புத் தோற்றம் கொண்ட பதக்கங்களே 1928 நெதர்லாந்தில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டி முதல் 2000 சிட்னியில் நடைபெற்ற ஒலிம்பிக் வரை வழங்கப்பட்டு வந்தன.

ஆனால், இப்போது வழங்கப்படவுள்ள பதக்கத்தில் வெற்றிக் கடவுள் 'நைக்'கின் உருவம் இறக்கைகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதாவது, 'நைக்' சொர்க்கத்திலிருந்து இறக்கைகளுடன் இறங்கிவந்து வெற்றிபெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு முடி சூட்டுவது போன்ற கருத்தை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன், மறுபக்கத்தில் ஒலிம்பிக் சுடரும் 2004 ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கான சின்னமும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்காக அமைக்கப்பட்டுள்ள பதக்கங்கள் சுமார் 76 வருடங்களுக்குப் பிறகு புதிய தோற்றத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு வடிவமைக்கப்பட்ட தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களின் மாதிரியைப் படத்தில் காணலாம்.

# இலங்கை - தென்னாபிரிக்க தொடர்: ஒகஸ்ட் 4இல் முதலாவது டெஸ்ட்!

இலங்கைக்கும் தென்னாபிரிக்காவிற்கும் இடையேயான முதலாவது டெஸ்ட் ஆட்டம் ஒகஸ்ட் 4ஆம் திகதி ஆரம்பமாகிறது.

தென்னாபிரிக்க அணி இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு டெஸ்ட் மற்றும் ஒருநாள் ஆட்டங்களில் கலந்துகொள்வதற்காகக் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு வந்துசேர்ந்துள்ளது.

இவ்விரு அணிகளுக்குமிடையே 2 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் ஆட்டங்களைக் கொண்ட தொடரொன்று நடைபெறவுள்ளது.

தற்போது இலங்கையில் 6 நாடுகள் பங்கேற்கும் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகின்றது. இத்தொடர் தற்போது அதன் இறுதிக்கட்டத்தையும் நெருங்கிவிட்டது.

இறுதியாட்டத்தில் இந்தியாவும், இலங்கையும் மோதவிருக்கின்றன. எந்த அணி கிண்ணத்தைக் கைப்பற்றும் என்பது முதலாம் திகதி ஆட்டத்தில் தெரியவரும்.

இத்தொடர் முடிந்தவுடன் அடுத்ததாக இலங்கை அணி தென்னாபிரிக்க அணியுடன் டெஸ்ட் ஆட்டத்தில் மோதவிருக்கின்றது.

இதன்படி முதலாவது டெஸ்ட் ஆட்டமானது ஒகஸ்ட் 4ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை காலி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

2ஆவது டெஸ்ட் ஆட்டம் கொழும்பிலுள்ள எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் ஒகஸ்ட் 11ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது.


இரண்டு டெஸ்ட் ஆட்டங்களும் முடிந்த பின்னர் இரு அணிகளுக்குமிடையே 5 ஒருநாள் ஆட்டங்கள் ஆரம்பமாகவுள்ளன. முதலாவது ஒருநாள் ஆட்டம் ஆர். பிரேமதாஸ மைதானத்தில் ஒகஸ்ட் 20ஆம் திகதி நடக்கிறது. அதேபோன்று 2ஆவது ஒருநாள் ஆட்டமும் பிரேமதாஸ மைதானத்திலேயே நடைபெறும்.

பின், 3ஆவது ஒருநாள் ஆட்டம் மட்டும் பகலிரவு ஆட்டமாக தம்புள்ள மைதானத்தில் ஒகஸ்ட் 25ஆம் திகதி நடைபெறுகிறது.

அதேபோன்று, 4ஆவது ஒருநாள் ஆட்டமும் தம்புள்ள மைதானத்தில் 28ஆம் திகதி நடைபெறும். 5ஆவதும் மற்றும் இறுதியுமான ஒருநாள் ஆட்டம் எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் நடைபெறும்.

இந்தத்தொடரானது இலங்கையில் நடைபெற இருப்பது இலங்கை அணிக்கு மிகச் சாதகமான விடயமாகும். இதுதவிர, இலங்கை ரசிகர்களுக்கும் இது ஒருநல்ல விருந்தாக அமையும்.

அதேவேளை, தென்னாபிரிக்க அணியானது உலகின் தலைசிறந்த அணிகளுள் ஒன்றாகும். எந்தவொரு அணியையும் வீழ்த்தக்கூடிய ஆற்றல் தென்னாபிரிக்காவுக்கு உண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது.



பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் தென்னாபிரிக்க அணியினர்

விளையாட்டுச் செய்திகள் – பிரான்


# உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

எப்பேர்ப்பட்ட வியாதியானாலும் சரி, உடனே என்னை வந்து சந்தியுங்கள்



K. சிவசுப்பிரமணியம்
M.I.H.Ind-S.M.P.

எவ்வளவு நாட்பட்ட வியாதியானாலும் சரி, காலதாமதம் செய்யாமல் கீழ்க் கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வரமுடியாது போனால் கடிதமூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, சோகை, காக்கை வலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல் வாய்வு, நரம்புத்தளர்ச்சி, வீரியக்குறைவு, இரத்தமின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன், பின் காணுதல், சூதகவலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

RAJA BAJEEKARANA (Rasayana) LEGIUM
ராஜ வஜீகரண (ரசாயன) லேகியம்

(முஸ்லிம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தயாரிக்கப்பட்டது)



சாலாமிசிரி, பாதாம் பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்துத் தயாரானது. உல்லாச வாழ்விற்கு உறுதுணையானது. ஸ்திரி, புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி, தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி, சுறுசுறுப்பையும், தேகாந்தியையும் உண்டாக்க வல்லது. உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச்சூடு தணியும், மூலச்சூட்டைப் போக்கும், இருமல், மார்பு, இடுப்பு வலி, கால், கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும், நீரிழிவு, பிளட்பிரஷர் உள்ளவர்களுக்கும் சிறுவர், சிறுமியருக்கும் சிறந்தது.

நாட்பட்ட பீனிசம், இளைப்பு, இருமல், மூலரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றி பலனடையலாம். பத்தியமில்லை.

500 gram 300/-, 250 gram 150/-

வி.பி.பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.

வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும் வைத்தியரைச் சந்திக்கலாம்.

Ayur Dr. K. Sivasubramaniam, முருகானந்தா வைத்தியசாலை
G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கட், மீன்கடை மேல் (நிலமாடி)
கொழும்பு – 11. Tel: 2384645.

# 80% Greenery, 100% Luxury

# வெள்ளவத்தையில்...

## முற்றிலும் குளிரூட்டப்பட்ட தொடர்மாடி வீடுகள்



BUILDING COMFORT TO YOUR LIFE STYLE!

**Roma**

**Luxury Apartments**

*It's a beautiful life!*

**2 Bedrooms** **3 Bedrooms**



*For site visit:*

**183, Rajaguru Sri Subudhi Road, Wellawatte, Colombo 6.**
**(Near Perera Lane)**

**Booking Office:**

**ROMA Property Developers (Pvt) Ltd.**
**83, 37th Lane, Wellawatte, Colombo 6.**
**Tel: 2362163, 2587628 Fax: 2362162**
**E-mail: rompd1@hotmail.com**
**Web Site: www.roma-properties.com**

*With Following Features...*

- Separate Marked Car Park
- Imported Floor Tiles for Entire Floor
- Pantry Cupboards
- Fully Air-Conditioned
- Dish Antenna From Japan
- Sri Lanka Telecom Connection
- Lift (Elevator) Made in Japan
- 24 Hours Security
- Standby Generator
- Shoots in Every Floor for Garbage
- Gymnasium
- Ceiling Fans
- Roof Garden & More...

**HOTLINES: 0777-677441, 0777-847820**

இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் எண்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 ஆகஸ்ட் 02 ஆம் திகதி வெளியிடப்ப